janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்


மலர் 85 | 2022 அக்டோபர் 09 - அக்டோபர் 15 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 27




கோவில் மனையில் குடியிருப்போர் நலன் காக்க... ப 02



மின்துறை தனியார் மயம் இந்தியாவே இருள் மயம்! ப 03



கோவை உள்ளாட்சி தூய்மை பணியாளர்கள் போராட்டமும் – படிப்பினைகளும் ப 08



## முழுமையான கூட்டாட்சியை உறுதி செய்ய

# அரசியல் சட்டத்தில் மறு ஆய்வு தேவை!

## கேரளாவில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டு கருத்தரங்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**முழுமையான கூட்டாட்சியை உறுதி செய்ய அரசியல் சட்டத்தில் மறு ஆய்வு தேவை என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டு கருத்தரங்கில் உரையாற்றுகையில் வலியுறுத்தினார்.**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 1.10.2022 அன்று கேரள மாநிலம், திருவனந்தபுரம், வழுதக்காட்டில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநில மாநாட்டில் கலந்து கொண்டு “கூட்டாட்சி மற்றும் மத்திய– மாநில உறவுகள்” (Federalism and Centre-State Relations) குறித்த கருத்தரங்கில் ஆற்றிய உரை வருமாறு :–

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் சிறப்புரை ஆற்றியிருக்கக் கூடிய கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களே!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் தோழர் டி.ராஜா அவர்களே!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநில செயலாளர் தோழர் கானம் ராஜேந்திரன் அவர்களே!

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் எண்ம சேவைகள் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் அவர்களே!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய தலைமைக் குழு உறுப்பினர் தோழர் அதுல் குமார் அன்ஜன் அவர்களே!

தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் என்னுடைய அன்பிற்கினிய முத்தரசன் அவர்களே!

அன்பிற்கினிய பெரியசாமி உள்ளிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகளே!

அண்மைக் காலமாக, கேரளத்தில் நடைபெறும் கூட்டணிக் கட்சிகளின் மாநாடுகளுக்கும் என்னை அழைக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதைப் போலவே, நானும் மகிழ்ச்சியோடு அவற்றில் பங்கேற்கிறேன்.

மாநில எல்லைகளால் நாம் பிரிந்திருக்கிறோம். எனினும், இந்தியாவில் கூட்டாட்சியை வலுப்படுத்த எல்லைகளை மறந்து நாம் இங்கே ஒன்று கூடியிருக்கிறோம்.

கண்ணூரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 23ஆம் மாநாடு நடந்தபோது நான் அதில் பங்கேற்றேன்.

அப்போது, என் பெயர் ஸ்டாலின். அதனால் என்னை அழைக்காமல் இருக்க உங்களால் முடியாது என்று குறிப்பிட்டேன்.

உங்களின் அன்பை என்னால் காண முடிகிறது!

என் பெயரினோடு உங்களுக்கு இருக்கும் அன்பை இங்கேயும் என்னால் காண முடிகிறது.

திராவிட இயக்கத்துக்கும் கம்யூனிஸ்ட் இயக்கத்துக்குமான நட்பு என்பது இரண்டு இயக்கங்களும் தோன்றிய காலத்திலேயே உருவான நட்பு!

◆ சுயமரியாதை இயக்கம் கண்ட தந்தை பெரியார் அவர்கள், சோவியத் நாட்டுக்குச் சென்றுவிட்டு வந்த பிறகுதான் தனது சமதர்மக் கொள்கையை வடிவமைத்தார்.

◆ தமிழ்நாட்டில் பொதுவுடைமை இயக்கத்தின் மாபெரும் தூண்களாகப் போற்றப்படக்கூடிய ம.சிங்காரவேலரும், ஜீவா அவர்களும் சுயமரியாதை இயக்கத்துடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள்.

◆ கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அறிக்கையை 1931ஆம் ஆண்டு தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர் தந்தை பெரியார் அவர்கள்!

◆ இந்தியா விடுதலை அடைந்தபோது, கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட அந்த காலக்கட்டத்தில், திராவிட இயக்கத்தின் தலைவர்கள் வீட்டில் கம்யூனிஸ்ட் தலைவர்கள் தலைமறைவாக இருந்தார்கள்.

◆ திராவிட இயக்கம் உருவாகவில்லை என்று சொன்னால், நான் கம்யூனிஸ்ட் இயக்கத்தில்தான் இருந்திருப்பேன் என்று சொன்னவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

◆ அது மனப்பூர்வமாகச் சொன்னது என்பதன் அடையாளம்தான் எனக்கு ஸ்டாலின் என்று பெயர் சூட்டியது!

◆ நாம் வெவ்வேறு இயக்கமாக இருந்தாலும், எங்கள் கட்சிக் கொடியில் பாதி சிவப்பு நிறம் இருக்கிறது.

◆ நாம் ஒரே கொள்கைக்காரர்கள் என்பதால்தான், தமிழ்நாட்டில் மட்டுமல்ல, அகில இந்திய அளவிலும் கூட்டணியைத் தொடர்ந்து கொண்டு இருக்கிறோம்.

இது கேரளாவில் நடக்கக்கூடிய மாநாடாக இருந்தாலும், இந்தியா முழுமைக்கும் கூட்டாட்சி உருவாக வேண்டும் என்பதும், மாநிலத்தில் சுயாட்சி மலர வேண்டும் என்பதும், இந்தியா முழுமைக்குமான கருத்தியல்!

நான் தமிழ்நாட்டைக் காக்கவும், மாண்புமிகு தோழர் பினராயி விஜயன் அவர்கள் கேரளத்தைக் காக்கவும் மட்டும் கூட்டாட்சி என்ற முழக்கத்தை முன்னெடுக்கவில்லை.

இந்தியாவை முழுவதுமாக காக்க வேண்டுமானால், முதலில் மாநிலங்களை நாம் காக்க வேண்டும்.

மாநிலங்களின் ஒன்றியம்தான் இந்தியா. அதனால் இந்த மாநாட்டையே நடத்துகிறீர்கள்.

நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கிறேன், பினராயி விஜயன் அவர்கள் கேரளத்தில் முதலமைச்சராக இருக்கிறார். அதனால் நமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று நினைக்க முடியாது.

இந்தியா முழுமைக்கும்

- கூட்டாட்சியை
- மாநில சுயாட்சியை
- மதச்சார்பின்மையை
- சமத்துவத்தை
- சகோதரத்துவத்தை
- சமதர்மத்தை
- சமூகநீதியை நிலைநாட்ட நாம் குரல் கொடுத்தாக வேண்டும்.

நமது கொள்கைகள் உன்னதமானவையாக இருக்கலாம், ஆனால் அவை வெற்றி பெற வேண்டுமானால், அக்கொள்கையை ஆதரிக்கும் அனைத்து சக்திகளும் ஒன்றிணைய வேண்டும்.

ஒரே குரலாய் ஒலிக்க வேண்டும்!

இங்கொன்றும் அங்கொன்றுமாக தனித்தனிக் குரலாக ஒலிப்பதால் பெரிய பயனில்லை. ஒரே குரலாக ஒலிக்க வேண்டும்.

அத்தகைய ஒற்றுமை ஓரிரு மாநிலங்களில் மட்டும் உருவானால் போதாது. அனைத்து மாநிலங்களிலும் உருவாக வேண்டும். அனைத்திந்திய சக்தியாக நாம் உருவெடுக்க வேண்டும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை அரசியலமைப்புச் சட்டத்தின் 356ஆவது சட்டப்பிரிவைப் பயன்படுத்தி கலைக்கலாம் என்ற ஜனநாயக விரோதச் செயல் நடத்தப்பட்ட முதல் மாநிலம் கேரளாதான்.

அப்படிப்பட்ட இந்த மண்ணில்தான் இப்போது மாநில சுயாட்சியை வலியுறுத்தியும், கூட்டாட்சியை வலியுறுத்தியும் மாநாடு நடக்கிறது.

அந்த ஜனநாயகத்துக்குப் புறம்பான செயலுக்குப் பலியான முதல் கட்சி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

எனவே உங்களை விட இம்மாநாட்டை நடத்துவதற்கு தகுதியான கட்சி இருக்க முடியாது.

அதே 356ஆவது பிரிவால், ஒரு முறையல்ல; இரண்டு முறை தமிழகத்தில் ஆட்சியை இழந்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். என்னை நீங்கள் பேசுவதற்காக

தொடர்ச்சி 05ம் பக்கம்

கட்சிக் கடிதம்

# கோவில் மனையில் குடியிருப்போர், விவசாயம் செய்யும் குத்தகைதாரர்கள் நலன் காக்க தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும்!






பேரன்புமிக்க தோழர்களே!

**தமிழ்நாட்டில் கோவில், மடம், சமய அமைப்புகளின் தேவாலயங்கள், மசூதிகள் மற்றும் அறக்கட்டளைகள் போன்ற அமைப்புகளுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ளன. இத்தகைய நிலங்களில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பன்னெடுங்காலமாக குடியிருந்து வருகின்றனர். அதே போன்று, சாகுபடி நிலங்களிலும் பல்லாயிரம் விவசாயிகள் குத்தகை சாகுபடி செய்து வருகின்றனர்.**

கோவில் நிலங்களில் குடியிருந்து வருபவர்களும், விவசாயிகளும் கடுமையான, மிகக் கடுமையான நெருக்கடிக்கு ஆளாகி வருகின்றனர்.

நெருக்கடிகளை கண்டுணர்ந்து அதன் காரணங்களை ஆயந்தறிந்து தீர்வு காண வேண்டிய பெரும் பொறுப்பும், கடமையும் நமது தமிழ்நாடு அரசுக்கு உள்ளது.

தமிழ்நாடு அரசு கோவில்களை பாதுகாக்கவும், பராமரிக்கவும், அதன் சொத்துக்களைப் பாதுகாத்திடவும், ஆலயங்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், நிர்வாக அதிகாரிகள், ஊழியர்கள் அனைவரையும் பாதுகாக்கக் கூடிய முறையில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

கோவில் நிர்வாகப் பணிகளும், சொத்துக்களும் தனியார் ஆதிக்கத்தில் இருந்ததைத் தடுத்து, விடுவித்து அரசின் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வர இந்து சமய அறநிலைய வாரியம் உருவாக்கப்பட்டது. இது சமூக நீதி வழங்கலில் ஒரு சிறு முன்னேற்றமாகும். இதில் காலத்திற்கு தேவையான திருத்தங்களும் செய்யப்பட்டதால், தமிழ்நாடு அரசு இதற்கென இந்து சமய அறநிலையத்துறை என தனித்துறையை அமைத்தது. இத்துறையின் அமைச்சராக மாண்புமிகு பி.கே.சேகர்பாபு பொறுப்பேற்றுள்ளார். அவரது நற்பணிகள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. கோவில் சொத்துக்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்படுகிறது.

கோவிலுக்குரிய சொத்துக்களை குறிப்பாக மனை நிலங்களை விரல் விட்டு எண்ணக்கூடிய சில தனிப்பட்ட நபர்கள், தங்களுக்குள்ள அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி ஏக்கர் கணக்கில் ஆக்கிரமித்திருந்த கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மனை நிலங்கள் மீட்கப்பட்டு, அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததை அனைவரும் பாராட்டவே செய்கின்றனர்.

பல ஆண்டுகளாக குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) காணாமல் இருந்த ஆலயங்களை கண்டறிந்து, அத்தகைய ஆலயங்களைப் புனரமைத்து கும்பாபிஷேகம் நடத்தி வருவதால் பக்தர்கள் வெகுவாக அரசையும், அமைச்சரையும் பாராட்டுகின்றார்கள்.

தி.மு.க. அரசுக்கு தெய்வ நம்பிக்கை உண்டா? இல்லையா? என்பது முக்கியமல்ல, முன்னோர்கள் உருவாக்கிய ஆலயங்களைப் பாதுகாப்பது அரசின் கடமை என்பதனை உணர்ந்து அரசு செயல்பட்டு வருகின்றது.

தெய்வ நம்பிக்கை உள்ளவர்களை – மத நம்பிக்கை உள்ளவர்களை அரசு மதித்து செயல்பட்டு வருகின்றது.

மசூதிகளை இடிப்பதன் மூலம், பிற மதத்தை இழிவு படுத்துவதன் மூலம் அரசியல் ஆதாயம் அடைய முடியும் என்கிற குறுகிய அரசியல் நோக்கமுடையவர்கள் இருக்கின்றார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இத்தகைய தீய நோக்கமுடைய சக்திகள் தான் இன்று பல கூச்சல், குழப்பங்களை ஏற்படுத்தி, செயற்கையான பதட்டத்தை, பீதியை உருவாக்கி வருகின்றார்கள்.

அத்தகைய கூச்சலில் ஒன்றுதான் இந்து சமய அறநிலையத்துறை வேண்டாம்– அதனை கலைத்துவிடு – ஆலயங்களை இந்துக்களிடம் ஒப்படைத்திடு – அதனை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று எழுப்பப்படும் குரலாகும்.

நாட்டில் வாழும் இந்துக்கள் அனைவரும் இவர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பது போன்றும், தாங்கள் மட்டுமே இந்துக்களின் மொத்த குத்தகைதாரர் போன்றும் ஒரு தோற்றத்தை செயற்கையாக உருவாக்க படாதபாடுபட்டு வருகின்றார்கள்.

இவர்களின் நோக்கம் நாட்டில் உள்ள பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தையும் படிப்படியாக தனியார் இடத்தில், அந்நிய, உள்நாட்டு பெருமுதலாளிகளுக்கு, கார்ப்பரேட் முதலாளி மார்களுக்கு விற்பது போன்று, மக்கள் தங்களின் விருப்ப தெய்வமாக வணங்குகின்ற ஆலயங்களையும், அவைகளுக்குரிய சொத்துக்களையும், தனிநபர்கள் சூறையாட, இந்து சமய அறநிலையத்துறை வேண்டாமென கூச்சலிட்டு வருகின்றார்கள்.

இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்களுக்கு மனை நிலம், சாகுபடி நிலம் மட்டுமல்ல; விலைமதிக்க முடியாத வைரங்களும், வைடூரியங்களும், மரகத லிங்கங்களும், தங்க, வெள்ளி நகைகளும், நமது ஆற்றல் மிகு சிற்பிகளால், மிக அற்புதமாக அனைவராலும் வியக்கும், போற்றும் வண்ணம் ஐம்பொன்களால் ஆன சிலைகளும் ஏராளமாக உள்ளன.

கடந்த காலங்களில் ஆலயத்திற்குரிய நகைகள், விலை மதிக்கமுடியாத மரகத லிங்கம் போன்றவை களவாடப்பட்டதை அறிவோம்.

அனைவரையும் கவரக்கூடிய, தமிழ்நாட்டுக்குரிய, தமிழக ஆலயங்களில் உள்ள சிற்பங்கள் விமானம் ஏறி அமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து போன்ற நாடுகளின் விற்பனை நிலையங்களில் பகிரங்கமாக விற்கப்பட்டு வருவதையும் அறிவோம்.

திருச்செந்தூர் முருகப்பெருமான், கரங்களில் பற்றி நின்ற வேல் காணாமல் போனதும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் நீதி கேட்டு நெடும் பயணம் மேற்கொண்டதையும் நாடு நன்கறியும்.

மன்னார்குடி ராஜகோபாலசுவாமி ஆலயத்திற்கு சொந்தமான கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வைர நகைகள் காணாமல் போய் பல ஆண்டுகள் ஆகின்றன.

திருட்டை கண்டறிய காவல்துறை கடும் முயற்சிகளை மேற்கொண்டது.

திருடர்களை காவல்துறை நெருங்கி விட்டதாகவும், அரசியல் தலையீடு காரணமாக அவர்களை காவல்துறையால் தொட முடியவில்லை என்றும் ‘தினமணி’ நாளேடு அப்போது செய்தி வெளியிட்டது. தற்போது வரை அந்நிலை தொடரவே செய்கின்றது. திருடர்களும் பிடிபடவில்லை; நகைகளும் ஆலயங்களுக்கு திரும்ப வரவில்லை.

இந்நிலையில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்களை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோருவது முழுமையாக கொள்ளை கொண்டு போவதற்கு உரிய நடவடிக்கையாகும்.

கோவில்களையும், அதற்குரிய குடிமனைகளையும், நிலங்களையும் பாதுகாத்து வருவது, குடியமர்ந்துள்ள மனைதாரர்களும், சாகுபடி செய்துவரும் விவசாயிகளும் தான் என்ற உண்மையை எவராலும் மறுக்க இயலாது.

குடிமனைதாரர்கள் தாங்கள் அனுபவித்து வரும் அடிமனைக்கு உரிய பகுதியை கோவில் நிர்வாகத்திற்கு செலுத்தி வந்தார்கள்.

அதேபோன்று நிலங்களில் சாகுபடி செய்து வரும் விவசாயிகளும், தாங்கள் அனுபவித்து வரும் நிலங்களுக்குரிய குத்தகையை செலுத்தி வருகின்றனர்.

வணிகர்கள் தாங்கள் அனுபவித்து வரும் அடிமனைக்குரிய பகுதியை செலுத்துவதுடன் ஆண்டுதோறும் நடைபெறும் கோவில் திருவிழா, தேர்த் திருவிழா, தெப்பத் திருவிழா போன்ற விழாக்களுக்கு பெரும் நன்கொடை வழங்குவதுடன், வணிகர்களின் அமைப்பான வர்த்தக சங்கத்தின் சார்பில் மண்டகப்படி நிகழ்வுகளையும், அதற்குரிய செலவினங்களையும் ஏற்று சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார்கள் என்பதை அரசும் நன்றாக அறியும்.

இப்படிப்பட்ட குடிமனை தாரர்களையும்,

தொடர்ச்சி 6ம் பக்கம்

# மின்துறை தனியார் மயம் இந்தியாவே இருள் மயம்!



- த.லெனின்

**புதுச்சேரியில் மின்துறை தனியார் மயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மின் துறையில் பணியாற்றும் 2000க்கும் மேற்பட்ட பணியாளர்கள், காலவரையற்ற போராட்டத்தை தொடர்ந்து நடத்தி தற்போது முதலமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தி போராட்டத்தை தீபாவளி பண்டிகைவரை ஒத்திவைக்க**

**உடன்பாடு கண்டுள்ளனர்.**

மின்துறை அமைச்சர் நமச்சிவாயம் தனியார் ஒப்பந்தத்திலிருந்து பின்வாங்க முடியாது என்று ஆணவத்தோடு பேசியிருக்கிறார். பொதுவாக நஷ்டத்தில் இயங்கும் பொதுத்துறைகளை தா[illegible] தனியார்மயமாக்க துடிதுடிக்கும் ஒன்றிய அ[illegible]. லாபத்தில் இயங்கக் கூடிய புதுச்சேரி மின்துறை[illegible]யை ஏன் ஒன்றிய அரசு விற்க வேண்டும்.

தனது லாப வெறி பசியோடு இருக்கும் கார்ப்பரேட் எஜமானர்களுக்கு உண்ணும் உணவாக இதைக் கருதுகிறதோ?

கோவிட் கால நெருக்கடியைப் பயன்படுத்தி ஒன்றிய பா.ஜ.க. அரசு, மின்துறையை தனியார் மயமாக்கும் சட்டமுன்வடிவை கொண்டுவந்து நிறைவேற்றியது. அதில் மின் பகிர்மானம், பெரும்பாலும் மாநில அரசுகளின் கையில் இருப்பது. கோவிட் தொற்றுக்கால ஒன்றிய அரசின் ஊக்குவிப்பு நடவடிக்கையின் போது, நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் மின் வினியோக முறையை மாநில, யூனியன் பிரதேசங்களின் கைகளில் இருந்தவற்றையெல்லாம் தனியார் மயமாக்கினார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூலை 22ஆம் தேதி புதுச்சேரி மாநில சட்டமன்றம், ஒன்றிய அரசின் இந்த தனியார் மயமாக்கல் முடிவுக்கு எதிராக ஒருமனதாக தீர்மானத்தை நிறைவேற்றியது.

தனியார் மயமாக்கலை திரும்பப் பெற வேண்டும் என்ற அன்றைய முதலமைச்சர் நாராயணசாமி கொண்டு வந்த அத் தீர்மானத்தை அவரும், அன்றைய மின்துறை அமைச்சரான கமலக்கண்ணனும் புதுச்சேரி கவர்னர் கிரன்பேடியை சந்தித்து, அதனை அவரிடம் அளித்தனர். அவரும் உடனடியாக அதை ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்தார். அந்த மின்துறை தனியார்மாக்கலைதான் இன்றைய பா.ஜ .க. என்.ஆர்.காங்கிரஸ் கூட்டணி மீண்டும் அந்த தனியார் மயமாக்கலை ஆதரித்ததுடன் அதை நிறைவேற்ற அடம் பிடித்து வருகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக பெரும் கட்டண உயர்வை அறிவித்து பயனாளிகளின் தலையில் கைவைத்துள்ளது. தமிழ்நாட்டில் மின் கட்டண உயர்வு அறிவித்த போது, அதைக் கண்டித்து வாய் சவடால் அடித்த பா.ஜ.க.வின் அண்ணாமலை தொடங்கி, சங்க பரிவார கும்பல் அனைவரும் இப்போது வாய்பொத்தி மவுனம் காப்பதன் காரணம் என்ன?

தமிழ்நாட்டில் மின் கட்டண உயர்வு என்றால் போராட்டம், புதுச்சேரியில் மின்துறையை தனியார் மயமாக்கி, கட்டண உயர்வு என்றால் கொண்டாட்டம் என்ற மனநிலையில் அவர்கள் இருப்பது அவர்களின் சீழ்பிடித்த மூளையின் தன்மையைக் காட்டுகிறது.

பா.ஜ.க. ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் பல மாநிலங்களில் இதே போன்ற தனியார் மயமாக்களை முன்னெடுத்து வருகிறது பா.ஜ.க.

யோகி ஆதித்தியநாத் ஆட்சி நடைபெறும் உ.பி.யில் 21 மாவட்டங்கள் அடங்கிய கிழக்கு உத்தரப்பிரதேசத்தின் பூர்வாஞ்சல் பகுதி மின்துறை வினியோகத்தை தனியார் மயமாக்கி அறிவித்தது. கண்டித்து மின்துறை பணியாளர்கள் கடும் எதிர்ப்பினை காட்டி போராடினர்.

ஆதித்யநாத் அரசை எதிர்த்து சிறை நிரப்பும் போராட்டத்தையும் அறிவித்து மக்களைத் திரட்டினர். இந்த நிலையில் மக்கள் மத்தியில் வரும் கடும் எதிர்ப்பை கண்டு உ.பி.அரசு தனது முடிவை மாற்றிக் கொண்டது.

இழப்புகள் அதிகரிக்கிற போது அதை தனியார் மயமாக்கி கட்டண கொள்ளையில் ஈடுபடுவதுதான் அவர்களது நரித்தந்திரம். நமது கேள்வி இப்படி தனியார் மயமாக்கப்பட்ட துறைகளில் இழப்புகள் கட்டுக்குள் வந்திருக்கிறதா? கட்டண உயர்வின்றி நிர்வாக சீர்திருத்தங்கள் எந்தத்துறையிலாவது மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா?

ஏற்கனவே தொலைத் தொடர்பில் பி.எஸ்.என்.எல். அரசால் தொடர்ந்து பழிவாங்கப்பட்டு 4ஜிக்கு அனுமதி வழங்காமல் இழுத்தடித்து, ரிலையன்ஸ் ஜியோவின் வளர்ச்சிக்காக கொலை பட்டிணி போட்டு கொன்றொழித்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

கண் முன்னால் இந்த உதாரணம் இருக்க வெறும் உதார்விடும் பா.ஜ.க. வினர் இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள்?



ரபேல் போர் விமான ஒப்பந்தத்திலும் அவசர கதியில் உச்சநீதிமன்றத்தின் ஆதரவைப் பெற்றதைப் போல மின்துறையிலும் தனியார் மயாமாக்கத் துடிப்பது ஏன்? அதானி என்ற ஒற்றை நபருக்காக!

பிரதமரின் பிரதான தொழிலதிபரான அதானி, தான் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை ஒரு யூனிட் ரூ.5.50 பைசாவிற்கு மாநில அரசுகளுக்கு விற்பனை செய்கிறது. மாநில அரசுகள் அதனை ரூ.1.90 பைசாவிற்கு பயனாளிகளுக்கு விற்பனை செய்கின்றனர். இதன் காரணமாக மாநில மின்சார வாரியங்கள் கடும் நிதி நெருக்கடியிலும், கடனிலும் தத்தளிக்கின்றன.

மின்சார உற்பத்தியில் ஈடுபடும் அதானி உள்ளிட்ட கார்ப்பரேட் நிறுவனங்கள், தங்களது லாபத்தை உறுதி செய்து விற்பனை செய்தபோதிலும், அவர்களது கடனை வங்கிகள் ரத்து செய்கின்றன. ஆனால், கோடிக்கணக்கான மக்கள் பயன்படுத்தும் மின்சாரத்துறையின் கடன்களை எங்கும், எப்போதும் ரத்து செய்ததாக வரலாறு இங்கு இல்லை.

இதன் மூலம், லாபமும் அவர்களுக்கு, அவர்களுடைய தவறான செயல்பாட்டால் வரும் நஷ்டங்களும் அவர்களை அண்டவிடாது, வங்கிகளே ஏற்றுக் கொள்ளும் ஒரு புதிய வழியைத்தான் வளர்ச்சி நாயகன் மோடியின் ஆட்சி வளைந்து, நெளிந்து தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது.

மாநில, யூனியன் பிரதேச மின்துறை பணியாளர்கள் அரசின் நிறுவனம் என்ற அடிப்படையில்தான் பணி வாய்ப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். நால்கோ நிறுவன பணியாளர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த போது, உச்சநீதிமன்றம் எந்த ஒரு பணியாளரின் விருப்பம் இன்றி அந்த நிறுவனத்தின் உரிமையை வேறு ஒருவருக்கு மாற்றக் கூடாது. அது அரசாக இருந்தாலும் அல்லது அதன் நிர்வாகத்துறையின் மூலமோ பணி விதிமுறைகளை மாற்றக் கூடாது என்று திட்டவட்டமாக தீர்ப்பளித்தது.

இங்கே, புதுச்சேரியில் அந்தப் பணியாளர்கள் விருப்பம் இல்லாமல், தனியார் மயமாக்க பா.ஜ.க. என்.ஆர்.காங்கிரஸ் ஏன் துடிக்கிறது?

2003ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மின்சாரச் சட்டம், 131(2) ன்படி வாரியத்திற்கு சொந்தமான சொத்துக்கள் ஒட்டுமொத்த மதிப்பு மற்றும் நில மதிப்பு ஆகியவற்றை குறைந்த விலைக்கு அளிப்பது கூடாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆனால், தனியார் மயமாக்க முயற்சிக்கும் ஒன்றிய அரசு அடிமாட்டு விலைக்கு இவற்றையெல்லாம் அள்ளிக் கொடுப்பது எந்த வகையில் நியாயம்?

உதய் மின் திட்டம் என்கிற பெயரால் மக்களுக்கு உதவாக்கரை திட்டமாகவும், கார்ப்பரேட் நண்பர்களுக்கு உதவு நீளும் கரமாகவும் மாறி இருப்பதன் மர்மம் என்ன?

ஒட்டுமொத்த யூனியன் பிரதேசங்களையும் தனியார் மயமாக்கிய ஒன்றிய அரசு முதலில் டெல்லியில்தான் அமல்படுத்தியது. அதன்பிறகு ஒரிசா மாநிலத்தின் மின்துறையை டாடாவிற்கு கையளித்தது. அந்த ஒப்பந்தப்படி, இனி வரும் தொழில்நுட்ப கோளாறுகள் மற்றும் வர்த்தக இழப்பினால் வரும் இழப்புகளை அடுத்த ஐந்தாண்டுகளுக்கு கட்டண நிர்ணயிப்புக்கான ஒன்றாகக் கொள்ளலாம் என்று சொல்கிறது. இதில் தவறுகள் நடந்தால் அதாவது மின் இழப்பை குறைக்கத் தவறினால் அந்த நிறுவனம் ஒரு சதத்திற்கு ரூ.50 கோடியை தண்டமாகக் கொடுக்க வேண்டும்.

ஆனால், டாடா நிறுவனம் கோவிட் பெருந்தொற்றை காரணம் காட்டி தப்பித்துக் கொண்டு வருகிறது. ஆனால், அதே கோவிட் தொற்றை காரணம் காட்ட முடியாமல் மக்கள் கட்டண சுமையை அனுபவதித்து வருகிறார்கள்.

இப்படித்தான் முதல்முறையாக 13 நாள் ஆட்சியில் இருந்த வாஜ்பாய் காலத்தில் மகாராஷ்டிராவில் சிவசேனா – பா.ஜ.க. கூட்டணி ஆட்சி யின்போதுதான் அவசர அவசரமாக அமெரிக்க மின்துறை நிறுவனமான என்ரான் நிறுவனத்தோடு ஒப்பந்தம்போட்டு தனியார் மயமாக்கினர். அதற்காக ஸ்டேட் பேங்க் பலகோடி ரூபாய் அந்நிறுவனத்திற்கு கடனாக அளித்தது. அதற்குப்பின் மும்பை உள்ளிட்ட அதன் பெரும் நகரங்கள் அனைத்திலும் அரசு நிர்ணயித்த கட்டணங்களை விட பல மடங்கு மின்கட்டண உயர்வை அறிவித்தது என்ரான் நிறுவனம்.

இந்த நிலையில் அமெரிக்காவில் என்ரான் நிறுவனம் நொடித்துப் போய்விட்டது. தனது கணக்குகளை மிக சாதுரியமாக இழப்புகளை மறைத்து காட்டிதான் இந்திய ஒப்பந்தத்தை அது பெற்றிருந்தது தெரிய வந்தது. அரசின் துறையில் உள்ள பலருக்கு லஞ்சம் கொடுத்துதான் இந்த ஒப்பந்தத்தை பெற்றதாகவும் செய்திகள் கசிந்தன.

இத்தனியார் மயமாக்கலால் மகாராஷ்டிரா அரசு மட்டுமல்ல, ஸ்டேட் வங்கியும் சேர்ந்தே தண்டம் அழுதது. இதுதான் இந்தியாவின் மின்சாரத்துறையின் தனியார்மயமாக்களின் வரலாறு.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் லாபத்தில் இயங்கி வரும் அரசின் மின்துறையை ஏன் தனியார் மயமாக்க வேண்டும்? அந்த அழிவு வேலையை ஒன்றிய அரசு ஏற்கனவே தொடங்கி விட்டது. இதைக்கண்டித்துதான் புதுச்சேரி மின்துறை பொறியாளர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து தனியார் மய எதிர்ப்புப் போராட்டக்குழுவை உருவாக்கினர். அதன் சார்பில்தான் காலவரையற்ற இந்தப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வந்தனர்.

போராட்டம் நாளுக்கு நாள் மக்கள் மத்தியில் செல்லாக்கு பெறுவதை கண்டு அஞ்சிய பா.ஜ.க. என்.ஆர்.காங்கிரஸ் அரசு போராடும் சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி தீபாவளி வரை ஒத்திவைத்திருக்கிறது.

இப்பேச்சுவார்த்தையில் 51 சத பங்குகளை புதுச்சேரி அரசின் வசம் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதோடு தனியார் மயத்தை முற்றாக எதிர்ப்போம் என்றும் அறிவித்துள்ளனர். இதில் அரசு பின்வாங்கினால் மீண்டும் போராட்டம் தொடரும் என்பதையும் திட்டவட்டமாக அறி வித்துள்ளனர்.

தனியார் மயம் ஒருபோதும் மக்களுக்கு நன்மை செய்யும் தாரக மந்திரம் அல்ல. மாறாக, அதிகம் லாபம் என்பதே அதன் இலக்கு. யாருக்கு மின்சாரம் வேண்டும், வேண்டாம் என்பதெல்லாம் அதற்கு தேவையில்லாத ஒன்று. மின்துறை பொதுத்துறையில் இருந்தால் தெருக்களில் மின்ஒளி இருக்கும். தனியார் மயமானால் தெருக்கள் இருளில்தான் மிதக்கும். தேவையா இந்தத் தனியார் மயம்!

தொடர்புக்கு: 94444 81703

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 27

## எளிய குழந்தைகள் அறிஞர்களுக்கு எடுக்கும் பாடம்

சென்னை மாநகராட்சி, பெருநகர மாநகராட்சியாக மாறி நாள்தோறும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. தென் சென்னையில் புதிது புதிதாகத் தெருக்களும், ஊர்களும், பிறப்பெடுத்துக் கொண்டே இருக்கின்றன. அகலமான சாலைகள், பாலங்கள் சாலை தடுப்புகள் என படுவேகமாக மாநகராட்சியும் பணி புரிகிறது.

வடசென்னை உழைக்கும் மக்கள் வாழும் பகுதி. சூரிய வெளிச்சமும் காற்றும் உள்நுழையாமல், நெருக்கி நெருக்கி புறாக் கூண்டுகளாகக் கட்டப்பட்ட வீடுகள். ஈட்டுகிற சம்பளத்தில், இந்த வீடுகளுக்குத்தான் குடக்கூலி (வாடகை) கொடுத்து குடியிருக்க முடியும். அந்தப் பகுதிகளிலும் மேம்பாட்டுப் பணியாற்ற வேண்டும் எனும் சிந்தனை மேட்டுக்குடிகாரர்களின் மூளைகளில் முளைப்பதில்லை.

குழந்தைகளுக்கு பெற்றோர்களும், ஆசிரியர்களும், அரசும் பாடம் எடுப்பது வழக்கம். ஆனால் வடசென்னைக் குழந்தைகள் இந்தப் பெரியவர்கள் கற்க மறந்த பாடத்தை, அண்மையில் சொல்லிக் கொடுத்திருக்கின்றன. தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கைக் குழு, சென்ற திங்கட்கிழமை ராயபுரம், கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை, எண்ணூர், திருவொற்றியூர் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களைச் சந்தித்துப் பேசி இருக்கிறது. நூலக அலமாரிகளிலும், மேல்நாட்டுக் கட்டுரைகளிலும் கல்விக் கொள்கையைத் தேடுவதோடு நிறுத்தி விடாமல், கற்கும் மாணவர்களின் தேவைகளையறிய கள ஆய்வு செய்ததற்கு, அதிலும் குறிப்பாக வடசென்னையைத் தேர்ந்தெடுத்ததற்காக அந்தக் குழுவைப் பாராட்டியாக வேண்டும்.

அந்தக் குழந்தைகள் வைத்துள்ள கோரிக்கைகள் சாதாரணமானவை. இவற்றை செய்து தரக் கூட வக்கில்லாமல், அவர்களிடம் கேட்டுத்தான் அறிந்து கொள்ளும் நிலையில், ஆளுமைத் திறன்கள் பற்றி பேசுவதற்கு வெட்கப்பட வேண்டும். பள்ளிகள் துவங்கும் நேரத்தில் கடுமையான போக்குவரத்து நெருக்கடி; பேருந்துகள் கிடைப்பதில்லை. இலவசப் பேருந்துப் பயணம் என்றால், லாரிக்குள் குப்பைகளைக் கொட்டுவது போல அள்ளிக் கொண்டு போக கூடாது, அமர்ந்து செல்வதற்கு வசதியாகப் போதிய பேருந்துகள் விட வேண்டும்.

பள்ளிகளில் கழிப்பறைகள் வேண்டும்; அவற்றில் தண்ணீர் வர வேண்டும்; கதவுகளில் தாழ்ப்பாள் இருக்க வேண்டும் என்று அந்தக் குழந்தைகள் ஆய்வறிஞர்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டிய நிலை இருப்பது என்ன கொடுமை! இதையெல்லாம் கண்டு உணர முடியாத நிலையில் நம் கல்வித் துறை இருக்கிறது! விளையாட்டுத் திடல் வேண்டும், விளையாடுவதற்கான உடைகள், கருவிகள் வேண்டும், அதிக உயர்நிலைப் பள்ளிகள் வேண்டும்.

இதையெல்லாம் தர முடியாவிட்டாலும் பள்ளிகளைச் சுற்றிப் போதை மருந்துகள் விற்பதையாவது தடுத்து நிறுத்துங்கள் என்று குழந்தைகள் கெஞ்சுகின்றன. புகையிலையில் இருந்து தயாரிக்கப்படும் ‘கூல் லிப்’ என்கிற போதைப் பொருள், நான்காம் வகுப்பு மாணவர்களால் கூட பயன்படுத்தப்படுகிறது எனும் எதார்த்த நிலை பதைக்க வைக்கிறது. பள்ளிகளுக்கு அருகில் டாஸ்மாக் கடைகள், மது அருந்துபவர்களால் மாணவிகளுக்கு ஏற்படும் தொந்தரவுகள் போன்றவையும் பேசப்பட்டுள்ளன. வடசென்னையிலும், வடசென்னை போன்றே இருக்கும் தமிழகத்தின் ஏராளமான பகுதிகளிலும் பெரிய தனியார் பள்ளிகள் வரமாட்டா. அப்படியே வந்தாலும் அவை கட்டணமாகக் கேட்கும் பெரும் தொகைகளைக் கட்டி, தமது பிள்ளைகளை படிக்க வைக்கும் அளவுக்கு வசதி அந்த ஏழை எளிய மக்களுக்கு இல்லை.

கூடுதலாக வகுப்பறைகள் வேண்டும். பல வகுப்புகள் இடவசதி இன்றி பள்ளி வராண்டாக்களிலும் திறந்தவெளிகளிலும் நடத்தப்படுகின்றன, வகுப்பை கூர்ந்து கவனிப்பது சாத்தியம் இல்லாமல் போகிறது என்று எண்ணூர் மாணவி பேசியிருக்கிறார். வீட்டுக்கு அருகாமையில் பள்ளியும் அதில் தரம் மிக்க கல்வியும் தர முடியாத நிலையில் கல்வியில் சிறந்த தமிழ்நாடு இருக்கிறது. கல்லூரிகளில் அரசு பள்ளி மாணவர்கள் என்றால் இடம் தர மறுக்கிறார்கள் என்ற வேதனையையும் அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள்

தமது ஆசிரியர்களுக்காக கூட அவர்கள் பேசி இருக்கிறார்கள். கல்வி தொடர்புடைய வேலையைத் தவிர வேறு வேலைகளை ஆசிரியர்கள் மீது அரசு சுமத்தக்கூடாது என்று சொல்லும் அவர்கள், அந்த ஆசிரியர்களை விமர்சிக்கவும் தயங்கவில்லை. கடுமையான சொற்களால் திட்டுவது, மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடைவெளியை அதிகரிக்கிறது, ஆசிரியர்கள் வகுப்பறைகளுக்குள் அலைபேசிகளை பயன்படுத்தக் கூடாது என்றெல்லாம் பாடம் சொல்லும் தகப்பன் சாமிகளான மாணவர்களை நினைத்தால் பெருமையாக இருக்கிறது.

சாமானியக் குழந்தைகளின் உயர்கல்வியை தடுக்கும் ‘நீட்’டை எதிர்த்து வாதாடுவது மட்டுமல்ல; இந்தக் குழந்தைகளின் பார்வையையும் அனுபவங்களையும் எதிர்பார்ப்புகளையும் உள்ளடக்கி மாநிலக் கல்விக் கொள்கையை வகுப்பது தமிழக அரசின் கடமை ஆகும்.

# உழைக்கும் மக்களே வாருங்கள்!



- காசி விஸ்வநாதன்

# நெல்லை சிவக்கட்டும்!

*தமிழ்நாடு ஏஐடியுசியின் இருபதாவது மாநாடு திருநெல்வேலியில் 2022 டிசம்பர் 1,2,3 தேதிகளில் நடைபெற இருக்கின்றது. பிரதிநிதிகள் மாநாடு தாமிரபரணி நதி பாயும் தென்கரையில் அமைந்துள்ள கொக்கிரகுளம் ரோஸ் மஹால் ஆர்.ஏ. கோவிந்தராஜன் ஜி.மணியாச்சாரி நினைவரங்கில் நடைபெறுகிறது.*

*மாபெரும் செஞ்சட்டை பேரணி டிசம்பர் 3ஆம் நாள் மாலை 3 மணி அளவில் பாளையங்கோட்டை சேவியர் கல்லூரி அருகில் (கேண்டீன் ஸ்டாப்) இருந்து தொடங்குகிறது. தெற்கு பஜார் லூர்தநாதன் சிலை அருகே மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.*

*மாநாடு தயாரிப்புக்காக வரவேற்புக் குழு அமைக்கப்பட்டு பணிகளில் துரிதமாக தோழர்கள் ஈடுபட்டுள்ளனர். மாவட்ட மாநாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் குமரி மாவட்ட தோழர்கள் முனைப்போடு செயல்பட்டு வருகின்றார்கள்.*

*திருப்பூரை சிவக்க வைத்த தொழிலாளி வர்க்கத்தின் போர் பரணி நெலையிலும் எதிரொலிக்கட்டும்.*

*வரலாற்றுச் சிறப்புமிக்க நெல்லையைப்பற்றி ஞானசம்பந்தர் ‘ திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி ‘ எனவும், ‘தண் பொருணை புனல் நாடு’ என சேக்கிழாரும் , பொன் திணிந்த புனல் பெருகும் பொருநைத் திருநதி ‘ எனக் கம்பரும் புகழ்ந்து பாடி உள்ளார்கள்.*

*நெல்லை மாவட்டம் விடுதலைப் போராட்ட காலத்திலும், அதற்கு முன்பும் பாரம்பரியமாக போராட்டக் களங்களைக் கண்ட மாவட்டம். 1908ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ல் வ. உ.சி.யும், சுப்ரமணிய சிவாவும், பத்மநாப ஐயங்காரும் கைதுசெய்யப்பட்ட போது நெல்லை கிளர்ந்தெழுந்தது. மக்கள் எழுச்சி ஏற்பட்டது. துப்பாக்கி சூடு நடந்தது.*

*பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை காரணமாக 4 உழைக்கும் மக்கள் கொல்லப்பட்டனர். ஏறத்தாழ 100 பேருக்கு மேல் வழக்கு தொடரப்பட்டு பெரும்பாலோனோர் தண்டனை பெற்றனர். பிரிட்டிஷ் அரசு திமிர் வரி விதித்தது. ஆறுமாதங்களுக்கு தண்டக் காவல் படை யினரை நிறுத்திவைத்தது.*

*இதே நாளில்தான் தூத்துக்குடியில் தொழிலாளர்கள், பொதுமக்கள் போராடினார்கள்.*

*இந்தியாவின் முதல் அரசியல் வேலைநிறுத்தத்தை நடத்திய பெருமை ஹார்வி மில் பஞ்சாலை தொழிலாளர்களுக்கு உண்டு. 1883ல் பாபநாசத்திலும் 1886 ல் தூத்துக்குடியில் ஹார்வி சகோதரர்கள் கோரல் மில் என்ற பெயரில் பஞ்சாலைகளை தொடங்கினார்கள். தூத்துக்குடியில் சொல்லனா துயரத்தில் தொழிலாளர்கள் ஆட்பட்டிருந்தனர். ‘ கஞ்சி குடிப்பதற்கிலார் இதன் காரணங்கள் இவை என அறியும் மிலார் என்பதை மாற்ற வ.உ.சி முயன்றார்.*

*கோரல் ஆலைத் தொழிலாளர்கள் 1908 பிப்ரவரி 27ஆம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். ஆலை மூடப்பட்டது. குறைந்த கூலி, வாரவிடுமுறை கூட இல்லாமல் விடியற்காலை முதல் அந்தி மயங்கும் வரை கடும் வேலை, மேஸ்திரிகளின் கொடிய மேலாண்மை, ஆகியவற்றிற்கு எதிராக வேலை நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருந்தது. சுதேசி இயக்கம் உணர்வே அதிகமாக இருந்தது. வேலை நிறுத்தத்திற்கு முந்திய நாளில் தொழிலாளர்களிடையே உரையாற்றிய வ.உ.சி யும் சிவாவும் வெள்ளையர் ஆட்சியை ஒழித்து சுயராஜ்யத்தை அமைக்க வேலைநிறுத்தம் ஒன்றே வழி என என்று பரப்புரை செய்தனர்.*

*பட்டினி போட்டால் தொழிலாளர்கள் தாமாக பணிவர் என்ற நிர்வாகத்தின் மமதையை அடக்கவும், தொழிலாளர்களுக்கு உற்சாகமூட்டவும், அவர்களிடையே பல கூட்டங்களை ஏற்பாடு செய்து தலைவர்கள் பேசினர். போராட்டம் முடியும் வரை பொதுமக்களிடமிருந்து திரட்டிய பணத்தை கொண்டு தொழிலாளர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. தற்காலிக மாற்று வேலை ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.*

*சூழல் சூடாவதைக் கண்டு மாவட்ட ஆட்சியர் தூத்துக்குடிக்கு நேராக வந்தார். கூடுதல் போலீஸ் அமர்த்தினார். தூத்துக்குடி பிரிவின் மாஜிஸ்ரேட்டாக பணியாற்றி வந்த ராபர்ட் ஆஷ் என்பவருடன் வ.உ.சி நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த நேர்ச் சந்திப்பு கடும் முரணை உருவாக்கி வ.உ.சி மீது அரசாங்க ஒடுக்குமுறை பாயவும், மறுபுறம் சில ஆண்டுகளில் ஆஷ்சின் உயிருக்கே உலை வைத்தது தொழிலாளர்களின் கோரிக்கைகள் அனைத்தும் ஏற்கப்பட்டன. மார்ச் 7ஆம் நாள் தொழிலாளர்கள் வேலைக்கு திரும்பினர்.*

*ஆனால் திருநெல்வேலியில், வ.உ.சி.யும், சுப்பிரமணிய சிவாவும் கைது செய்யப் பட்டார்கள் என்ற செய்தி அறிந்த வுடன் கோரல் மில் தொழிலாளர்கள் மீண்டும் வேலை நிறுத்தம் செய்தார்கள். ஒரு வாரம் நடந்த இந்த வேலை நிறுத்தத்திற்கு பிறகு பெற்ற உரிமைகளை இழந்து மீண்டும் பணிக்கு திரும்பினார்கள். இந்தியாவில் தொழிலாளர்கள் நடத்திய முதல் அரசியல் வேலை நிறுத்தம்.*

*1908 ஜூலையில் சிதம்பரனாரின் குருநாதர் திலகர் ராஜ துரோக குற்றச்சாட்டுக்கு ஆளாகி கைதானபோது, பம்பாயில் ஆறு நாள்களுக்கு பொது வேலை நிறுத்தம் நடந்தது.*

*மாமேதை லெனின் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை கண்டித்து, தொழிலாளர் களின் எழுச்சியை வரவேற்று எழுதினார். இந்திய தொழிலாளி வர்க்கத்தின் முதல் அரசியல் வேலை நிறுத்தம் நடைபெற்ற மண்ணுக்கு, தமிழகத்தின் உழைக்கும் வர்க்கமே திரண்டு வாருங்கள்! காலங்கள் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை! அடக்குமுறை ஏவுகணை நிற்கவில்லை... போராட்டங்கள் தொடர்கின்றன... தோழர்களே போராட்ட முழக்கமிட திருநெல்வேலிக்கு திரண்டு வாருங்கள்!*

*போராடிப் பெற்ற தொழிலாளர் சட்ட உரிமைகளை பறிக்கும் வகையில் ஒன்றிய அரசு 4 சட்ட தொகுப்புகளை நிறைவேற்றியுள்ளது. கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவான இந்த தொழிலாளர் சட்டங்கள் நிறைவேற்றப்பட தமிழகத்தில் விதிகளை போட முயற்சிக்கின்ற போக்கை தற்காலிகமாக தடுத்து நிறுத்தியுள்ளோம்.*

*சட்டமன்றத்தில் இந்த சட்ட விதிகளை திரும்பப் பெறவும், ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோத சட்டங்கள் அகற்றப்படவும் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். தமிழகம் முழுவதும் ஒலிக்கின்ற குரல் திருநெல்வேலியில் ஒருமித்து ஒலிக்கட்டும்.*

*விவசாயத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அமைப்புசாரா தொழிலாளர்கள் அனைவருக்கும் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்படவும், அனைத்து தொழில்களிலும், 240 நாட்கள் வேலை செய்த அனைத்து தொழிலாளர்களையும் நிரந்தரப்படுத்த வேண்டி, மாதம் 21,000 ரூபாய் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கக் கோரியும், குரல் எழுப்ப நெல்லைக்கு வாருங்கள்!*

*கட்டுமானம், உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியங்களில் தொழிலாளர்களை பதிவு செய்தல், புதுப்பித்தல், நிதி பெறுதல் ஆகியவற்றில் உள்ள தேவையற்ற இடையூறுகளை நீக்குவதற்காக முழக்கமிட நெல்லைக்கு வாருங்கள்!*

*தொழிலாளர் சட்டங்கள் மற்றும் அரசியல் சாசனம் வழங்கியுள்ள உரிமைகளைப் பாதுகாத்திட ... போராட்டங்கள் தொடர்ந்திட.. நெல்லைக்கு வாருங்கள் தோழர்களே!*

தொடர்புக்கு: 99439 63183

1ம் பக்க தொடர்ச்சி

அழைத்து இருக்கிறீர்கள்.

இது பேசுவதற்கான நேரம் மட்டுமல்ல. இது செயல்படுவதற்கான நேரம்.

இந்திய அரசியலமைப்பை மறு ஆய்வு செய்ய வேண்டும்!

இந்திய அரசியலமைப்பை மறு ஆய்வுக்குட்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

உண்மையான, முழுமையான கூட்டாட்சித்தன்மை கொண்டதாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படுகிற வரையில் நாம் நமது முழக்கத்தையும் செயலையும் தொடர்ந்து செய்தாக வேண்டும்.

“வலுவான மாநிலங்கள்தான் கூட்டாட்சியின் அடிப்படை” என்று கேரள மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரும், பொதுவுடைமை இயக்கத்தின் முதுபெரும் தலைவர்களில் ஒருவராக இருந்த ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

“மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தருவதால் ஒன்றிய அரசு பலவீனப்படாது” என்பதை அவர் விரிவாக எழுதி இருக்கிறார்.

மாநில சுயாட்சியை உருவாக்குவதற்காக இராஜமன்னார் தலைமையில் குழு அமைத்து இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பைப் பற்றிய மறு ஆய்வுக்கு வழிகாட்டியவர் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தனது இறுதிக் கடிதத்தில் வலியுறுத்தியது, மாநில சுயாட்சிக் கொள்கையைத்தான். இதனைத்தான் பேரறிஞர் அண்ணாவின் உயிலாக நாங்கள் கருதிக் கொண்டிருக்கிறோம்.

மாநிலங்களவையில் அண்ணாவின் வரலாற்றுப் பேருரை!

மாநிலங்களவையில், தமிழ்நாட்டின் மாபெரும் தலைவரான பேரறிஞர் அண்ணா அவர்கள் நிகழ்த்திய வரலாற்றுப் புகழ்பெற்ற பேருரையில் இவ்வாறு பேசியிருக்கிறார்:

“அரசினுடைய ‘இறையாண்மை’ என்பதற்கு நாம் மேற்கொள்ளும் பொருள் என்ன? அரசியல் இறையாண்மையானது பொதுமக்களிடம் நிலைத்துள்ளதென நமது அரசியலமைப்பின் முகவுரை கூறுகிறது.

சட்டம் சார்ந்த இறையாண்மையானது கூட்டாட்சி ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையே பிரித்துத் தரப்பட்டுள்ளது. இன்னும் அதிகப் பயன்களை விளைவிக்கும் இறையாண்மையைப் பெற்ற அங்கங்களாக, மாநிலங்களைத் திகழச் செய்வதற்கே எங்கள் திட்டங்கள் பயன்படுகின்றன என்று நீங்கள் ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது?

நாம் ஒரு கூட்டாட்சி அமைப்பை ஏற்றிருக்கிறோம். அரசமைப்பை உருவாக்கியவர்கள், ஒற்றையாட்சி அமைப்பு கூடாது; கூட்டாட்சி அமைப்பு முறைதான் வேண்டுமென்று விரும்பினார்கள். ஏனெனில், அரசியல் தத்துவ ஞானிகள் பலர் சுட்டிக்காட்டி உள்ளபடி, இந்தியா மிகப் பரந்தது.

உண்மையில் அதனை ஒரு துணைக்கண்டம் என அழைக்கக் கூடிய அளவிற்கு அது பரந்து விரிந்து கிடக்கின்றது.

சென்ற பதிமூன்றாண்டு காலமாக நமது கூட்டாட்சி செயல்படும் தன்மையானது மாநிலங்களிடையே விரக்தி உணர்ச்சியைத் தோற்றுவித்துள்ளது என்பதே எனது குற்றச்சாட்டு.

மாநிலங்கள், சாதாரண நகராட்சி மன்றங்களைப்போல் விரைந்து மாறி வருகின்றன. அவை, இருக்கும் இடம் தெரியாமல் பின்னணிக்குத் தள்ளப்பட்டுள்ளன.

அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டுமென்ற இயற்கையான உணர்வுகள் மாநிலங்களிடம் தோன்றியுள்ளன. நமது அரசியல் சட்டம் மறு பரிசீலனை செய்யப்படவேண்டும். மறு ஆய்வும் செய்யப்பட வேண்டும். இதனை ஒன்றிய அரசு உணர வேண்டும் என்பதே மாநிலங்களின் கோரிக்கை!

எனவே நமது அரசமைப்புச் சட்டத்தின் கூட்டாட்சி முறையிலுள்ள பல ஒற்றைத் தன்மைகளை எதிர்த்துப் போரிடுகின்ற ஒரு தாக்குதல் முன்னணியாகவே நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கருதிக் கொள்ள வேண்டுகிறேன்”

பேரறிஞர் அண்ணா அவர்கள் *1963*ஆம் ஆண்டு மாநிலங்களவையில்இப்படி பேசி இருக்கிறார்கள்.

நிலைமை மாறவில்லை – இன்னும் மோசமாகவே போய்க்கொண்டிருக்கிறது!

*60* ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் அவர் எடுத்துக்கூறிய நிலைமை இன்னும் மாறவில்லை. மேலும் மோசமாகத்தான் போய்க் கொண்டு இருக்கிறது.

ஒன்றியப் பட்டியல், மாநிலப் பட்டியல், ஒத்திசைவுப் பட்டியல் என்று வைத்திருக்கிறார்களே தவிர, எல்லாவற்றையும் ஒன்றியப் பட்டியலாகவே நினைக்கிறார்கள்.

ஒத்திசைவு பட்டியல் என்பது முழுக்க, முழுக்க ஒன்றியப் பட்டியலாக மாறிக் கொண்டு இருக்கிறது.

மாநில அதிகாரங்களையும், மடைமாற்றம் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

◆ ஜி.எஸ்.டி. மூலமாக நிதி உரிமை பறிக்கப்பட்டு விட்டது. இதனை நிதி உரிமைப் பறிப்பாக மட்டும் நான் கருதவில்லை. நிதி உரிமையைப் பறிப்பதன் மூலமாக மாநிலங்களின் வளர்ச்சியைத் தடுப்பதாகும். அதனால்தான் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

மாநிலக் கல்வி முறையை தடுப்பதால் எதிர்க்கிறோம்!

◆ நீட் போன்ற நுழைவுத் தேர்வுகளால் கல்வி உரிமை மறுக்கப்படுகிறது. ஏழை எளியவர்களின் வீட்டுப் பிள்ளைகள் மருத்துவம் படிக்க முடியாமல் தடுக்கப்படுகிறார்கள் என்பதற்காக மட்டுமே அதனை எதிர்க்கவில்லை. இதன் மூலமாக மாநில அரசு நினைக்கும் கல்வி முறையை நடைமுறைப்படுத்த முடியாமல் தடுக்கிறார்கள் என்பதற்காகவும் எதிர்க்கிறோம். கல்வி கற்றால் தகுதி வந்துவிடும். தகுதி இருந்தால்தான் நீ படிக்கவே வரலாம் என்று கூறுவது ஏமாற்று வேலை! பழமைவாதக் கருத்துகளுக்கு முலாம் பூசும் வேலை.

◆ தேசிய கல்விக் கொள்கை என்பது கல்வியைப் பல்வேறு படிநிலைகளில் தடுப்பு போட்டு மறிக்கும் கொள்கையாக உள்ளது. அதனை காவிக் கொள்கையாக, இந்தி மொழியைத் திணிக்கும் கொள்கையாக, வடிவமைக்கிறார்கள் என்பதற்காக மட்டும் எதிர்க்கவில்லை. மாநில அரசாங்கம், தனது சிந்தனை வகைப்பட்ட கல்வியைத் தருவதைத் தடுக்கிறார்கள் என்பதற்காகவும் எதிர்க்கிறோம்.

நீட் போன்ற நுழைவுத் தேர்வுகள் ஒடுக்கப்பட்டவர்களுக்குக் கல்வியை மறுக்கின்றன.

◆ மூன்று வேளாண்மைச் சட்டங்கள், மாநிலங்களின் அதிகாரத்தில் இருக்கும் வேளாண்மைத் துறையில் தலையிடுவதாக இருந்தது. சுற்றுச் சூழல், தொழிலாளர் நலன், துறைமுகங்கள் இப்படி பல்வேறு சட்டங்கள் பா.ஜ.க. அரசால் கொண்டு வரப்படுகின்றன. இவை மக்கள் விரோத சட்டங்களாகவும், மாநில அளவில் இருக்கக்கூடிய ஒரு விரோதத்திற்குரிய சட்டங்களாகவும் இருக்கின்றன. அதனால்தான் அவற்றை உறுதியாக எதிர்த்து வெற்றி பெற்றோம்!

எதேச்சாதிகாரம் எப்போதும் வெல்ல முடியாது என டெல்லியில் நடைபெற்ற உழவர்களின் போராட்டம் நிரூபித்துள்ளது.

◆ நேரடியாகச் செய்ய முடியாத அரசியல் தலையீடுகளை சட்டத்தின் போர்வையில் செய்யப் பார்க்கிறார்கள்.

◆ கவர்னர்களின் மூலமாக இரட்டை ஆட்சி நடத்தப் பார்க்கிறது பா.ஜ.க. தலைமை.

◆ நமது எண்ணங்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக எழுப்பினால் அதற்கு உரிய பதில் கூட நாடாளுமன்றங்களில் சொல்லப்படுவது இல்லை.



மாநிலங்களைக் காப்பாற்ற வேண்டிய முழக்கங்கள்!

◆ நமக்கான உரிமையை நிலைநாட்ட கடிதம் அனுப்பினால் அதற்கான பதில் கூட ஒன்றிய அரசிடம் இருந்து நமக்கு வருவது இல்லை.

◆ வெறும் கையை பிசைந்து கொண்டு மாநிலங்கள் நிற்கிறது.

இவைகளைத் தடுக்க நாம் முழக்கமிடுவது என்பது அரசியல் முழக்கம் மட்டுமல்ல, மாநிலங்களைக் காப்பாற்ற வேண்டிய முழக்கமாகவும் அமைந்துள்ளது.

திமுக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆளும் மாநிலங்களுக்காக மட்டுமல்ல பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கும் சேர்த்துத்தான் நாம் குரல் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். அவையும் நெருக்கடியில் உள்ளன.

“ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே உணவு, ஒரே தேர்வு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கலாசாரம்” இப்படி எல்லாவற்றையும் ஒரே ஒரே ஒரே என்று கோரஸ் பாடுகிறார்கள். இப்படியே போனால் ஒரே கட்சி என்று ஆகிவிடும்.

ஒரே கட்சியானால், ஒரே ஆள் என்று ஆகிவிடும். இதை விட ஆபத்து வேறு எதுவுமே இருக்க முடியாது. ஒரே கட்சி என்று ஆகும் வரை பா.ஜ.க.வினர் மகிழ்ச்சி அடையலாம்.

ஒரே ஆள் என்று ஆகும்போது நம்மோடு சேர்ந்து பா.ஜ.க.வினரும் எதிர்க்கத்தான் வேண்டும்.

இத்தகைய எதேச்சாதிகாரத்துக்கு எதிரான குரல்தான் ‘மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி’ என்பது!

அரசியலமைப்புச் சட்டம் வரையறைக்கும் சொல்தான் யூனியன்!

இந்தியா என்பது ஒற்றை அரசு அல்ல, பல்வேறு மாநில அரசுகளின் ஒன்றியம்தான் இந்திய அரசு.

ஒன்றியம் யூனியன் என்பது தவறான சொல் அல்ல, அரசியலமைப்புச் சட்டம் வரையறுக்கும் சொல்தான் யூனியன்!

ஒன்றியம் யூனியன் என்று நான் சொல்லத் தொடங்கியதும் அதனை ஏதோ தேசவிரோத சொல்லைப் போல பார்த்தார்கள். அரசியலமைப்புச் சட்டம் சொல்கிற சொல்லைக் கூட சிலரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் முதல் வரி, “இந்தியா அதாவது பாரதம் மாநிலங்களைக் கொண்ட ஓர் ஒன்றியமாய் இருக்கும்” என்றுதான் உள்ளது.

அதைத்தான் பயன்படுத்துகிறோமே தவிர, சட்டத்தில் இல்லாததை அல்ல.

இந்தியாவைக் காப்பாற்ற வேண்டுமானால், இந்திய ஒன்றியத்துக்குள் உள்ளடங்கிய அனைத்து மாநிலங்களையும் காப்பாற்ற வேண்டும்.

மாநிலங்களைக் காப்பாற்றுவது என்பது மாநில மொழியைக் காப்பாற்றுவது! மாநிலத்தில் அதிக எண்ணிக்கையில் வாழும் தேசிய இனங்களைக் காப்பாற்றுவது! மாநிலங்களின் பண்பாட்டைக் காப்பாற்றுவது! அந்த மாநில மக்களின் உரிமைகளைக் காப்பாற்றுவது!

மாநிலங்கள் காப்பாற்றப்பட்டால்தான் இந்தியா காப்பாற்றப்படும். Uniformity is not Unity.

ஒரே தன்மை என்பது ஒற்றுமை ஆகாது.

இந்தியா விடுதலை அடையும் போது, இந்தியாவானது ஓராண்டு கூட ஒற்றுமையாக இருக்காது என்று சொல்லப்பட்டது. ஏனென்றால் பல்வேறு இனம், மொழி, மதம், பண்பாடு சார்ந்த மக்கள் வாழும் நாட்டை ஒற்றுமையாக இவர்களால் காப்பாற்ற முடியாது என்று சொல்லப்பட்டது.

*75* ஆண்டுகளைக் கடந்தும் ஒற்றுமையுடன் ஒன்றுபட்ட இந்தியாவாக இருக்கிறது என்றால் இந்த வேற்றுமைகளை உள்ளத்தில் தாங்கி ஒற்றுமையாக இருப்பதால்தான்.

இந்தியாவை ஒற்றுமைப்படுத்தும் மந்திரச் சொற்கள்!

இந்தியாவை ஒற்றுமைப்படுத்தும் மந்திரச் சொற்கள்தான் கூட்டாட்சி – மாநில சுயாட்சி ஆகியவை.

இவை இரண்டுக்கும் குந்தகம் ஏற்படுத்துபவர்களை இந்தியாவின் எதிரிகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்திய ஒருமைப்பாட்டின் எதிரிகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

சுயாட்சித் தன்மை கொண்டவையாக மாநிலங்கள் இருப்பதை ஒருமைப்பாட்டுக்கு விரோதம் என்று மாற்றிச் சொல்கிறார்கள்.

நாம் கேட்பது அதிக அதிகாரங்கள் கொண்ட மாநிலங்கள்தானே தவிர, பிரிவினை மாநிலங்கள் அல்ல.

இந்திய அளவில் கூட்டாட்சியை ஒப்புக்கொண்டவர்களால் கேட்கப்படுவதுதான் மாநிலத்தில் சுயாட்சி!

மக்களை மதத்தால் மொழியால் பண்பாட்டால் பிரிக்க நினைக்கும் பா.ஜ.க. நம்மைப் பார்த்து பிரிவினைவாதிகள் என்று சொல்கிறது. இதைவிட பெரிய நகைச்சுவை வேறு எதுவும் இருக்க முடியாது

தனது நலனுக்காக மக்களைப் பிரிக்கப் பிறந்ததுதான் பா.ஜ.க.!

இது பல நேரங்களில் இந்திய அரசியலில் தோற்கடிக்கப்பட்டுள்ளது. வருங்காலத்திலும் தோற்கடிக்கப்படும்.

அரசியல் ரீதியாக அடைந்த தேர்தல் வெற்றிகளை தனது கருத்தியலுக்குக் கிடைத்த வெற்றியாக பா.ஜ.க. நினைத்துக் கொள்ளக் கூடாது என்பதை பணிவன்புடன் நினைவுறுத்த விரும்புகிறேன்.

அத்தகைய மதவாத வகுப்புவாத சாதியவாத எதேச்சதிகார ஒற்றைத்தன்மை கொண்ட இந்தியாவை பா.ஜ.க. வால் உருவாக்க முடியாது. அதனை இந்திய மக்கள் அனைவரும் எதிர்ப்பார்கள்.

தமிழ்நாடு கேரளா மட்டுமல்ல அனைத்து மாநிலங்களும் எதிர்க்கும் காலம் நெருங்கிக் கொண்டு இருக்கிறது.

தென்னகத்தில், திருவனந்தபுரத்தில் ஒலிக்கும் இந்த ஒற்றுமைக் குரல் இந்தியா முழுமைக்கும் எதிரொலிக்கும் காலம் நெருங்கிக் கொண்டு இருக்கிறது.

அந்தக் காலம் இந்தியா முழுமைக்குமான கூட்டாட்சியை உருவாக்கும் காலமாக அது அமையும்.

அனைத்து மாநிலங்களுக்குமான விடிவு காலமாக அது அமையும்!

அதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இந்த மாநாடு அடித்தளம் அமைத்துள்ளது.

என்னை இம்மாநாட்டுக்கு அழைத்த தோழர்களுக்கும் நன்றி.

இந்த ஒற்றுமை எல்லா மாநிலங்களிலும் உருவாக, எல்லாக் கட்சிகளும் செயல்பட வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன். Red salute Comrades.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

நன்றி: முரசொலி
02.10.2022

02ம் பக்கத் தொடர்ச்சி

குத்தகை விவசாயிகளையும், வணிகப் பெருமக்களையும் காக்க வேண்டிய பெரும் பொறுப்பும், கடமையும் அரசுக்கும், இந்து சமய அறநிலையத் துறைக்கும் உள்ளது.

கோவில் மனைகளில் குடியிருப்போர், வணிகம் செய்வோர், விவசாயிகள் என அனைவரது உரிமைகளும் மதிக்கப்படவேண்டும்.

ஒருவர் கோவில் மனையில் குடியிருந்து வருகிறார் என்றால், கோவிலுக்கு சொந்தமான அடிமனையில் தங்களின் சொந்த உழைப்பில் குடிசை வீடாகவோ, அல்லது ஓட்டு வீடாகவோ மற்றும் கான்கிரீட் வீடாகவோ ஆலயத்தின் அனுமதியுடன் கட்டி வாழ்ந்து வருகின்றார்கள்.

அடிமனை ஆலயத்திற்கு சொந்தம் என்பதனை ஏற்று அதற்குரிய ஆண்டு பகுதியை செலுத்தி, ரசீது பெற்று வந்தனர். இம்மனை அவர்களுக்கு உரிமை உடையதாக இருந்துவந்தது. இத்தகைய உரிமைகள் வழிவழியாக தங்களின் குடும்ப வாரிசுகளுக்கு ஆலயத்தின் அனுமதியுடன் பெயர் மாற்றம் செய்யவும் அல்லது மூன்றாம் நபர்களுக்கு மாற்றம் செய்து கொடுத்திடும் உரிமை பெற்றிருந்தனர்.

இத்தகைய உரிமையுடன் கூடிய மனைதாரர்கள், வணிகர்கள் மற்றும் குத்தகை விவசாயிகளுக்கும், இந்து சமய அறநிலையத் துறைக்கும் நிலவிய சுமூகமான உறவை, அதிமுக ஆட்சியில் நடைமுறைகளை மாற்றி அமைத்ததன்மூலம் முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

அதிமுக அரசு கடந்த 2016ஆம் ஆண்டு நிறைவேற்றிய சட்டமானது, மனைதாரர்களின் உரிமைகளை முற்றாக பறித்தது. அது 'பகுதி' என்பதனை மாற்றி, சதுர அடி கணக்கில் வாடகை என நிர்ணயம் செய்தது.

இவ்வாறு உயர்த்தப்பட்ட வாடகை என்பது பயனாளிகள் நினைத்துப் பார்க்க முடியாதவாறு மிக அதிகபட்ச தொகையாகும். பல மடங்கு வாடகைக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

உதாரணமாக சென்னை பாடி ஜெகதாம்பிகை நகரைச் சேர்ந்த ஒருவர் ஒரு சதுர அடிக்கு 0.42 பைசா செலுத்தியவர், உயர்த்தப்பட்ட கட்டணம் அடிப்படையில் ரூ.3.15 செலுத்த செலுத்த வேண்டி உள்ளது. அதாவது 743.97% சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. இத்தகைய கட்டண உயர்வு என்பது மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமாக உள்ளது.

அதே போன்று வணிகர்களுக்கும் பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக சென்னை பாடி ஜெகதாம்பிகை நகரைச் சேர்ந்த ஒரு வணிகர் ஒரு சதுர அடிக்கு ரூ.1.66 செலுத்திவந்தார். தற்போது ரூ.9.46 செலுத்த வேண்டி உள்ளது. அதாவது 570.21% உயர்த்தப்பட்டுள்ளது.

இத்தகைய கட்டண உயர்வு என்பது 2016 ஜூலை 1ஆம் தேதி முதல் அமலுக்கு வந்த காரணத்தால் யாராலும் கட்டணத்தை செலுத்திட இயலாததன் காரணமாக ஒவ்வொரு பயனாளிக்கும் லட்சக்கணக்கான ரூபாய் கட்டண பாக்கி உள்ளது. இவ்வளவு பெரும் தொகையை செலுத்திட இயலாத சூழல் நிலவுகின்றது.

ஆர்எஸ்எஸ் – பாஜக மற்றும் அவர்களது அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் நீதிமன்றத்தை நாடி, கோவிலுக்கு வரவேண்டிய பாக்கிகள் கோடிக்கணக்கான ரூபாய் உள்ளது. இந்து சமய அறநிலைத்துறை வசூல் செய்யவில்லை. இதன்காரணமாக ஆலயங்களில் பூஜைகள் முறையாக நடைபெறவில்லை. ஆண்டவன் சொத்துக்களை எல்லாம் தனிப்பட்ட நபர்கள் ஆக்கிரமித்து வைத்துள்ளனர். அவர்களை மீட்கவும், பாக்கித் தொகைகளை வசூல் செய்யவும் நீதிமன்றம் அறநிலையத் துறைக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று வழக்குப் பதிவு செய்தார்கள்.

நீதிமன்றம் எதார்த்த நிலைமைகள் குறித்து கவனத்தில் கொள்ளாமல், அதிரடி உத்தரவுகளை பிறப்பித்து, தொகைகளை கடுமையாக வசூல் செய்ய வேண்டும், பயனாளிகள் முழுமையாக செலுத்தவில்லை எனில், அவர்களை குடி மனையில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்ற உத்தரவு பிறப்பித்தது மட்டுமல்ல, அதிகாரிகளுக்கு அபராதத்தையும் விதிக்கின்றது.

அம்மையார் ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக பதவி வகித்த காலத்தில், தமிழ்மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில், சென்னையில் பேரணி நடத்தி கோரிக்கை மனுக்களும் கொடுக்கப்பட்டன. நமது மதிப்பிற்குரிய மூத்த தலைவர்கள் தோழர் இரா.நல்லகண்ணு அவர்களும், நமது நினைவில் வாழும் தோழர் தா.பாண்டியன் அவர்களும் கோரிக்கைகளின் அவசியத்தை முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களிடம் நேரில் வலியுறுத்தினர்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தற்போது திமுக தலைமையிலான ஆட்சி அமைந்த பின்னர், நிலைமைகளை அரசுக்கு எடுத்துக் கூறும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும் கோரிக்கை மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட, ஒன்றிய அளவில் ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் என அறப் போராட்டங்களும் நடைபெற்றுள்ளன. சென்னையில் அண்ணா தலையரங்கில் மாபெரும் கோரிக்கை மாநாடு நடைபெற்றது. தமிழ்நாடு முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான குடிமனைதாரர்களும், வணிகர்களும் கலந்து கொண்டனர். அனைத்துக் கட்சி தலைவர்களுடன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு பி.கே. சேகர்பாபு அவர்களும் கலந்து கொண்டு "உங்களது கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் நிறைவேற்றுவார்" என்று பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார்.

மாநாட்டில் பங்கு பெற்ற அனைவரும் மகிழ்ச்சியோடும், நம்பிக்கையுடனும் வீடு திரும்பினர்.

நிலைமைகளை நன்கு உணர்ந்திருந்திட்ட மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், குடிமனைதாரர்களுக்கு, வணிகர்களுக்கு முந்தைய அதிமுக அரசு இழைத்த அநீதிகளை களைய வேண்டும் என்கிற நல்லெண்ணத்துடன், தலைமைச் செயலாளர் திரு வெ.இறையன்பு அவர்கள் தலைமையில் உயர்மட்ட குழு ஒன்றை அமைத்துள்ளார்.

இக்குழு விரைவில் நல்லதொரு தீர்வை எட்டும் என்று அனைவரும் எதிர்பார்த்து காத்துள்ளனர். நல்லதொரு விடியல் ஏற்படும் என்ற நம்பிக்கையோடு உள்ளனர். நம்பிக்கை வீண்போகாது என்று கருதுகின்றோம்; விரும்புகின்றோம்.

உயர்மட்டக் குழு தனது பணிகளை தொடங்கியுள்ள நிலையில், முடிவுகள் வரும் வரை காத்திராமல், நீதிமன்றத்தைக் காரணம் காட்டி இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் ஆங்காங்கே பயனாளிகளை மிக கடுமையான முறையில் அச்சுறுத்தி வருகின்றார்கள்.

குடியிருப்பு

| வ. எண் | மனை அளவு ச.அடியில் | 30.6.2016 வரை வசூலிக்கப்பட்ட வாடகை | வாடகை ஒரு ச.அடிக்கு | 1.7.2016 முதல் உயர்த்தப்பட்ட வாடகை | வாடகை ஒரு ச.அடிக்கு | வாடகை உயர்வு சதவிகிதத்தில் |
|---|---|---|---|---|---|---|
| பாடி ஜகதாம்பிகை நகர் | | | | | | |
| 1 | 3525 | 1492 | 0.42 | 11100 | 3.15 | 743.97 |
| 2 | 2730 | 1085 | 0.40 | 8500 | 3.11 | 783.41 |
| 3 | 2925 | 1619 | 0.55 | 9100 | 3.11 | 562.08 |
| 4 | 1397 | 774 | 0.55 | 4400 | 3.15 | 568.48 |
| 5 | 3667 | 2169 | 0.59 | 11400 | 3.11 | 525.59 |
| 6 | 3600 | 2130 | 0.59 | 11200 | 3.11 | 525.82 |
| 7 | 2400 | 1426 | 0.59 | 9600 | 4.00 | 673.21 |
| பாடி சக்தி நகர் | | | | | | |
| 8 | 1600 | 822 | 0.51 | 6500 | 4.06 | 790.75 |
| 9 | 2400 | 1426 | 0.59 | 9600 | 4.00 | 673.21 |
| 10 | 2400 | 1420 | 0.59 | 9600 | 4.00 | 676.06 |
| சென்னை ராயப்பேட்டை | | | | | | |
| 11 | 1530 | 11425 | 7.47 | 60900 | 39.80 | 533.04 |
| அமைந்தக்கரை | | | | | | |
| 12 | 4270 | 5279 | 1.24 | 42700 | 10.00 | 808.87 |
| 13 | 630 | 520 | 0.83 | 6300 | 10.00 | 1211.54 |
| கொரட்டூர் | | | | | | |
| 14 | 1200 | 375 | 0.31 | 3800 | 3.17 | 1013.33 |
| 15 | 2400 | 1420 | 0.59 | 9600 | 4.00 | 676.06 |
| 16 | 1600 | 275 | 0.17 | 7200 | 4.50 | 2618.18 |
| 17 | 1400 | 280 | 0.20 | 6200 | 4.43 | 2214.29 |
| 18 | 2400 | 616 | 0.26 | 7200 | 3.00 | 1168.83 |
| 19 | 1304 | 220 | 0.17 | 2200 | 1.69 | 1000.00 |
| நுங்கம்பாக்கம் | | | | | | |
| 20 | 1467 | 3500 | 2.39 | 11950 | 8.15 | 341.43 |
| 21 | 1487 | 2875 | 1.93 | 10.600 | 7.13 | 368.70 |
| 22 | 521 | 1200 | 2.30 | 4800 | 9.21 | 400.00 |
| 23 | 1260 | 3300 | 2.62 | 10210 | 8.10 | 309.39 |
| வில்லிவாக்கம் | | | | | | |
| 24 | 2400 | 2006 | 0.84 | 5300 | 2.21 | 264.21 |
| 25 | 2788 | 2159 | 0.77 | 6000 | 2.15 | 277.91 |
| 26 | 1425 | 1084 | 0.76 | 3000 | 2.11 | 276.75 |
| 27 | 1260 | 959 | 0.76 | 2600 | 2.06 | 271.12 |
| 28 | 1867 | 2893 | 1.55 | 9500 | 5.09 | 328.38 |
| லாயிட்ஸ் ரோடு | | | | | | |
| 29 | 798 | 800 | 1.00 | 8000 | 10.03 | 1000.00 |
| 30 | 590 | 600 | 1.02 | 5900 | 10.00 | 983.33 |
| 31 | 800 | 800 | 1.00 | 8000 | 10.00 | 1000.00 |
| மேற்கு அண்ணாநகர் திருவல்லீஸ்வரர் நகர் | | | | | | |
| 32 | 3600 | 3600 | 1.00 | 14600 | 4.06 | 405.56 |
| 33 | 3200 | 3000 | 0.94 | 10000 | 3.13 | 333.33 |
| 34 | 3600 | 3200 | 0.89 | 10000 | 2.78 | |
| சூளை | | | | | | |
| 35 | 740 | 760 | 1.03 | 5200 | 7.03 | 684.21 |
| பாலவாக்கம் | | | | | | |
| 36 | 628 | 402 | 0.64 | 2600 | 4.14 | 646.77 |
| 37 | 962 | 485 | 0.50 | 3610 | 3.75 | 744.33 |
| ஜோதி நகர், விம்கோ நகர் | | | | | | |
| 38 | 1925 | 1434 | 0.74 | 4600 | 2.39 | 320.78 |
| 39 | 1925 | 1610 | 0.84 | 4860 | 2.52 | 301.86 |
| 40 | 1925 | 1492 | 0.78 | 4680 | 2.43 | 313.67 |
| | | | 40.93 | | 223.85 | |
| சராசரி | | | 1.02 | | 5.60 | 546.88 |

தொடர்ச்சி 7ம் பக்கம்

06ம் பக்கத் தொடர்ச்சி

பணம் முழுவதையும் கட்ட வேண்டும் என்று பயனாளிகளை நிர்பந்தம் செய்கின்றனர். வீடுகளை காலி செய்ய வேண்டும் என்று நோட்டீஸ் கொடுக்கின்றார்கள். பல இடங்களில் காவல் துறையின் துணையோடு வருவாய்த்துறை, அறநிலையத்துறை அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட படை பலத்துடன் வீடுகளை இடிக்கவும் செய்கின்றார்கள். இந்த அடக்குமுறை மீறல்களுக்கான செலவுத் தொகையையும் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் சேர்க்கப்படுகிறது.

இந்து சமய அறநிலையத் துறையில் சில அதிகாரிகள் மதவெறிக் கண்ணோட்டம் கொண்டவர்கள் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்டவர்கள் அரசுக்கு ஏதாவது ஒரு வகையில் அவப்பெயரை ஏற்படுத்திட வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றார்கள் என்பதனையும் நாம் மிக கவனமுடன் பார்க்க வேண்டும்.

குடியிருப்போர் அனைவரும் வசதி, வாய்ப்பு நிறைந்தவர்கள் அல்ல. ஏழை எளிய மக்கள், விவசாயத் தொழிலாளர்கள், சிறு, குறு விவசாயிகள் என்பதனை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதேபோன்று வணிகர்கள் என்பவர்கள் பெட்டிக் கடை வைத்திருப்போர், டீ கடை வைத்திருப்பவர்கள், பூஜை பொருட்கள் விற்போர், சுயதொழில் புரிபவர்கள் என்பதனை கவனத்தில் கொள்ளவேண்டும்.

குடிமனைதாரர்களுக்கும், வணிகர்களுக்கும் 2016 ஜூலை முதல் நிர்ணயிக்கப்பட்ட வாடகை விபரங்களை பட்டியலில் காண்க:

இயற்கை ஒத்துழைப்பு இன்றி விவசாயம் வெற்றிகரமாக நடைபெறாது. கஜாபுயல், பெருமழை வெள்ளம், கொடிய கொரோனா ஆகியவற்றால் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டது என்பது அறிந்த ஒன்றே. இத்தகைய இயற்கை சீற்ற பாதிப்பில் இருந்து விவசாயிகள் மீளமுடியாத துயரத்தில் உள்ளனர்.

பெரும் தொழில் நிறுவனங்களுக்கு இழப்பீடு வழங்கப்படுகின்றது; வரி தள்ளுபடி, கடன் தள்ளுபடி செய்யப்படுவதுடன் அவர்களுக்கு ஊக்குவிப்பு நிதி உதவியும் வழங்கப்படுகின்றது.

ஆனால், விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக்கூடிய எத்தகைய உதவிகளும் இல்லை. அவர்கள் ஆலயங்களுக்கு வழங்க வேண்டிய குத்தகை தள்ளுபடி இல்லை. அதன் காரணமாக ஒவ்வொரு விவசாயிக்கும் பெரும் தொகை கட்டக் கோரி ஏராளமான வழக்குகள் நடைபெற்று வருகின்றன. நிலத்தை விட்டு வெளியேற்றும் பெரும் அபாயம் உள்ளது.

இவைகள் அனைத்தையும் அரசு கவனத்தில் கொண்டு நல்லதொரு தீர்வை காண வேண்டி கீழ்கண்ட கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

1. இந்து சமய அறநிலைத்துறை தொடர்ந்து நீடித்து நிலை பெறவேண்டும்.

2. குடிமனைதாரர்கள் மற்றும் வணிகர்களுக்கு, அவர்கள் பயன்படுத்தும் அடிமனைக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் காலத்தில் பிறப்பிக்கப்பட்ட 'பகுதி' முறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

3. அதிமுக ஆட்சி காலத்தில் நிறைவேற்றப்பட்ட சதுர அடி கணக்கில் வாடகை என்ற சட்டத்தை உரிய திருத்தத்தின் மூலம் முழுமையாக ரத்து செய்திட வேண்டும்.

4. குடிமனைதாரர்களுக்கு எதிராக இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் மேற்கொண்டு வரும் அதிரடி நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

5. ஏழை, எளியவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் என பொருளாதாரத்தில் மிகப் பின்தங்கி உள்ளவர்களுக்கு குறைந்தபட்சம் 8 சென்ட் நிலம் வழங்க வேண்டும்.

6. வசதிகள் – வாய்ப்புள்ளவர்களுக்கு பகுதி முறையைப் பின்பற்றுவதுடன், அவர்களுக்குரிய உரிமைகளும் காக்கப்படவேண்டும்.

7. சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, இயற்கை சீற்றங்கள் ஏற்பட்ட ஆண்டுகளில் உள்ள குத்தகை பாக்கிகள் முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும்.

8. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்பட்டுள்ள தலைமைச் செயலாளர் திரு வெ.இறையன்பு அவர்களின் தலைமையிலான உயர்மட்ட குழு, மேற்கண்ட கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு, கால தாமதமின்றி விரைவாக தங்களது பரிந்துரைகளை அரசுக்கு வழங்கிட வேண்டும்.

கோவில் மனையில் குடியிருந்து வருபவர்கள், வணிகப் பெருமக்கள், குத்தகை சாகுபடி செய்யும் குத்தகைதாரர்கள் அனைவருடைய நலன்களை அரசு காக்கும் என்ற நம்பிக்கையுடன் உள்ள மக்களுக்கு, நல்லதொரு விடியல் பிறக்கட்டும். அதற்கான முறையில் பரிதவிப்பிலும், பதட்டத்திலும் உள்ள மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவோம்.

மீண்டும் சந்திப்போம்! வணக்கம்!

**தோழமைமிக்க**
**இரா.முத்தரசன்**

வணிக வகை வாடகை விவரம்

| வ. எண் | மனை அளவு ச.அடியில் | 30.6.2016 வரை வசூலிக்கப்பட்ட வாடகை | வாடகை ஒரு ச.அடிக்கு | 1.7.2016 முதல் உயர்த்தப்பட்ட வாடகை | வாடகை ஒரு ச.அடிக்கு | வாடகை உயர்வு சதவிகிதத்தில் |
|---|---|---|---|---|---|---|
| பாடி ஜகதாம்பிகை நகர் | | | | | | |
| 1 | 4230 | 7015 | 1.66 | 40000 | 9.46 | 570.21 |
| பாடி சக்தி நகர் | | | | | | |
| 2 | 2400 | 4259 | 1.77 | 28800 | 12.00 | 676.22 |
| அமைந்தகரை | | | | | | |
| 3 | 2423 | 19855 | 8.19 | 109050 | 45.01 | 549.23 |
| 4 | 1350 | 11064 | 8.20 | 60800 | 45.04 | 549.53 |
| கொரட்டூர் | | | | | | |
| 5 | | 900 | | 17000 | | 1888.89 |
| 6 | | 813 | | 30000 | | 3690.04 |
| 7 | | 800 | | 16500 | | 2062.50 |
| வில்லிவாக்கம் | | | | | | |
| 8 | 1950 | 4735 | 2.43 | 19000 | 9.74 | 401.27 |
| 9 | 4150 | 8275 | 1.99 | 46000 | 11.08 | 555.89 |
| 10 | 2000 | 4283 | 2.12 | 19000 | 9.50 | 448.32 |
| 11 | 2535 | 7337 | 2.89 | 26000 | 10.26 | |
| 12 | 2400 | 4975 | 2.07 | 25000 | 10.42 | 502.51 |
| நுங்கம்பாக்கம் | | | | | | |
| 13 | 1400 | 10950 | 7.82 | 40500 | 28.93 | 369.86 |
| 14 | 1000 | 30000 | 30.00 | 88000 | 88.00 | 293.33 |
| 15 | 700 | 1750 | 25.00 | 50955 | 72.79 | 291.17 |
| 16 | 1050 | 27000 | 25.71 | 78000 | 74.29 | 288.89 |
| அரும்பாக்கம் | | | | | | |
| 17 | 2976 | 5920 | 1.99 | 116100 | 39.01 | 1961.15 |
| 18 | 2205 | 4384 | 1.99 | 86000 | 39.00 | 1961.68 |
| 19 | 1007 | 2003 | 1.99 | 39300 | 39.03 | 1962.06 |
| 20 | 1925 | 3329 | 1.73 | 75100 | 39.01 | 2255.93 |
| 21 | 1935 | 3849 | 1.99 | 75500 | 39.02 | 1961.55 |
| 22 | 2944 | 5854 | 1.99 | 115000 | 39.06 | 1964.47 |
| 23 | 1000 | 1990 | 1.99 | 39000 | 39.00 | 1959.80 |
| 24 | 795 | 1581 | 1.99 | 31010 | 39.01 | 1961.42 |
| லாயிட்ஸ் ரோடு | | | | | | |
| 25 | 779 | 4433 | 5.69 | 13580 | 17.43 | 306.34 |
| 26 | 893 | 4117 | 4.61 | 18200 | 20.38 | 442.07 |
| 27 | 650 | 5200 | 8.00 | 12900 | 19.85 | 248.08 |
| 28 | 800 | 7200 | 9.00 | 16000 | 20.00 | 222.22 |
| 29 | 5000 | 20000 | 4.00 | 100000 | 20.00 | 500.00 |
| மேற்கு அண்ணாநகர் திருவல்லீஸ்வரர் நகர் | | | | | | |
| 30 | 3200 | 9000 | 2.81 | 30000 | 9.38 | 333.33 |
| 31 | 3900 | 6000 | 1.53 | 41000 | 10.51 | 683.33 |
| 32 | 3200 | 5000 | 1.56 | 47000 | 14.69 | 940.00 |
| சூளை | | | | | | |
| 33 | 400 | 900 | 2.25 | 7000 | 17.50 | 777.78 |
| 34 | 1080 | 1650 | 1.53 | 14000 | 12.96 | 848.48 |
| 35 | 1500 | 5400 | 3.60 | 25000 | 16.67 | 462.96 |
| மேற்கு மாம்பலம் | | | | | | |
| 36 | 2144 | 7536 | 3.51 | 22460 | 10.48 | 298.04 |
| | | | 183.63 | | 928.06 | |
| சராசரி | | | 5.56 | | 28.12 | |

# கொடியேறி கே.பாலகிருஷ்ணன் மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) முன்னணி தலைவர்களில் ஒருவரான கொடியேறி கே. பாலகிருஷ்ணன் (68) அக்.01 அன்று சென்னையில் காலமானார் என்ற துயரச் செய்தி அறிந்து அதிர்ச்சியுற்றோம்.

தோழர் கே. பாலகிருஷ்ணன் மலபார் மாவட்டத்தில் உள்ள கொடியேறி கிராமத்தில் 1953 ஆம் ஆண்டு பிறந்தவர். பள்ளிக் கல்வி முடிந்து கல்லூரி கல்விக்கு சென்ற 1970 ஆம் ஆண்டில் இந்திய மாணவர் சங்கத்தில் இணைந்து செயல்படத் தொடங்கியவர். தொடர்ந்து மார்க்சிஸ்ட் கட்சியில் சேர்ந்து ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக பொது வாழ்க்கை பயணம் மேற்கொண்டவர்.

கேரள மாநில சட்டமன்றத்திற்கு ஐந்துமுறை தேர்வு செய்யப்பட்டவர். மக்களின் நன்மதிப்பை பெற்ற கொடியேறி பாலகிருஷ்ணன், மூத்த தலைவர் வி.எஸ்.அச்சுதானந்தன் அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக பணியாற்றியவர். 2008 முதல் மார்க்சிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் பொறுப்பில் செயல்பட்டு வந்தவர்.

கடுமையான புற்றுநோய் பாதிப்பு காரணமாக கடந்த ஆகஸ்ட் 28 முதல் சென்னை அப்பல்லோ மருத்துவ மனையில் உள்நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் 01.10.2022 காலமானார் என்பது ஆழ்ந்த வேதனையானது.

மார்க்கிஸ்ட் கட்சியின் தலைவர் கொடியேறி கே.பாலகிருஷ்ணன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி, அஞ்சலி செலுத்துகிறது. அன்னாரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தோழர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# கோவை உள்ளாட்சி து
# போராட்டமும் - ப



- ம. இராதாகிருஷ்ணன்

பணி நிரந்தரம், அரசாணைப்படி குறைந்தபட்ச ஊதியம், சட்டப்படி போனஸ் உள்ளிட்ட 18 கோரிக்கைகளை வலியுறுத்தி கோவை மாவட்ட உள்ளாட்சிகளில் (மாநகராட்சி, நகராட்சி,பேரூராட்சி) பணி புரியும் தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் காந்தியடிகள் பிறந்த நாளில் காலவரையற்ற வேலை நிறுத்ததை துவைக்கினர்.

அக்டோபர் 3ஆம் தேதி சுமார் நான்காயிரம் தொழிலாளர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு திரண்டு தங்கள் கோரிக்கையை வலியுறுத்தினர்.

மாவட்டத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகள் அனைத்துக்கும் மாவட்ட ஆட்சியரே ஆய்வாளர். அதன் படி மாவட்ட ஆட்சியர் வேலை அளிப்பவரும் ஆகிறார். தொழிற்தகராறு சட்டப்படி தொழிலாளருக்கும் வேலையளிப்பவருக்கும் இடையிலான தகராறுகளில் காவல்துறை தலைவிட எந்த அதிகாரமும் கிடையாது.

ஆனாலும் காவல்துறையினர் போராட்டத்தில் ஈடுபட்ட முன்னணி ஊழியர்களை மட்டும் தனியாக பிரித்து வலுக்கட்டாயமாக கைது செய்தனர். தலைவர்களை கைது செய்து விட்டால் போராட்டம் பிசுபிசுத்து விடும். அதனை நீர்த்துப் போகச் செய்ய முடியும் என்ற குறுகிய எண்ணம இது போன்ற கைது நடவடிக்கை.

ஆனால்,மாவட்ட நிர்வாகமும் காவல்துறையும் எதிர்பார்த்தது நடக்கவில்லை. தொழிலாளர்கள் குறிப்பாக பெண்கள் தங்கள் உறுதிமிக்க போராட்டத்தை தொடர்ந்தனர். கைது செய்யப்பட்டவர்களில் தலைவர்களை மட்டும் பேச்சுவார்த்தைக்கு அழைத்துச் செல்வதாக கூறிய போது; அனைவரையும் விடுவித்தால் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று தொழிற்சங்க கூட்டமைப்பினர் தெரி வித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர் முன்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது. பேச்சுவார்த்தையின் நிறைவில் எந்த கோரிக்கையும் நிறைவேற்ற முடியாது என்பதை வேறு வார்த்தைகளில் எழுதி ஐந்து பக்க வாக்குறுதியை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

வேலை நிறுத்தம் தொடர்ந்தது. 4 ஆம் தேதி கோவை மாநகராட்சி அலுவலகம் முன்பு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் திரண்டனர். கோவையின் பல பகுதிகளில் குப்பைகளும் கழிவுகளும் தேங்கி கிடந்தன. இத்தகைய நிலையில் மாநகராட்சி மேயர் தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெற்று 20ஆம் தேதி அன்று மாமன்றத்தில் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்வது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றிய பணி நிரந்தரம் செய்யவும், அதுவரை அரசாணையின் படி நகராட்சி நிர்வாக இயக்குனர் கருத்துரு பெற்று குறைந்தபட்ச ஊதியம் வழங்கவும், ரூபாய் 3500 மட்டுமே போனஸ் வழங்கப்படும் என்பதை மாற்றி ஒரு மாத ஊதியம் போனஸாக வழங்க ஒப்பந்ததாரர் மூலம் நடவடிக்கை எடுக்கவும், பழிவாங்கும் நடவடிக்கைக்காக வழங்கப்பட்ட குற்றச்சாட்டு நோட்டீஸ்கள் உள்ளிட்ட அனைத்தும் திரும்ப பெறப்படும், பழிவாங்கும் நடவடிக்கைகள் தொடராது என்றும் உறுதி அளிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. முழு வெற்றி இல்லை என்றாலும் போராட்டத்திற்கு கிடைத்த முதல் வெற்றி இது.



கோவை தொழிலாளர்கள் முன்வைத்த கோரிக்கைகள் தமிழ்நாடு முழுமையிலும் இருக்கிற தொழிலாளர்கள் நீண்ட காலமாக முன்வைத்து போராடிவரும் கோரிக்கைகள் ஆகும். ஆகவே தமிழ்நாடு முழுமைக்கும் இவை அமலாக்கப்பட வேண்டும். இல்லையேல் கோவை தொழிலாளர்கள் காட்டிய வழியில் தமிழக உள்ளாட்சித் தொழிலாளர்களும் போராடி வெற்றி பெறுவார்.

கோவையில் 2000 டன் குப்பைகள் தேங்கின என்பதைப் போல தமிழகத்தின் நகரங்களும், கிராமங்களும் குப்பைகள், கழிவுகள் தேங்கும் நிலை வரும். அந்த நிலைக்கு தமிழ்நாடு அரசு கொண்டு செல்லாது என்று நம்புவோம்.

கடந்த ஜூன் மாத துவக்கத்தில் தமிழ்நாட்டுக்கு அருகில் இருக்கிற கர்நாடக மாநிலத்தில் இரண்டு லட்சம் உள்ளாட்சி தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட தொழிலாளர்கள் நான்கு நாட்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். வழக்கம் போல அரசு இயந்திரம் தனது கொடூர கரங்களால் போராட்டங்களை அடக்க மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோற்றுப் போனது. பெங்களூர், மைசூர் உட்பட கர்நாடக மாநில நகரங்கள் அனைத்தும் குப்பை கழிவுகளின் காடாக காட்சி அளித்தது.

கர்நாடக மாநில முதலமைச்சர் தொழிற்சங்க தலைவர்களோடு பேச்சுவார்த்தைக்கு நடவடிக்கை எடுத்தார். மூன்று மாத காலத்திற்குள் சட்டமன்றத்தில் தனி சட்டம் இயற்றி தொழிலாளர்களின் பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற ஒப்புக்கொண்டார். சட்ட சரத்துகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று வரையறுப்பதற்காக தொழிற்சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட முத்தரப்பு குழு ஒன்றையும் அமைத்து உத்தரவிட்டிருக்கிறார். கர்நாடக முதலமைச்சர் சமூக நீதி, சமூக நீதிப் பொருளாதாரத்தை நிலை நாட்டுவதை தன்னுடைய கொள்கையாகக் கொண்ட கட்சியின் பிரதிநிதி அல்ல. சதுர் வர்ண தர்மத்தை நிலை

# இட ஒதுக்கீடும் - 



- ஏ.இ.பாலுச்சாமி


மோடி அரசு 2019-ல் முற்படுத்தப்பட்ட பிரிவினருள், பொருளாதாரத்தில் நலிந்தவர்களுக்கு கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் 10% இட ஒதுக்கீட்டை வழங்கியது. இதற்கென அரசியல் சாசனத்தில் 103வது திருத்தமும் செய்யப்பட்டுள்ளது. குடும்ப வருமானம் ரூ. 8 லட்சத்திற்கு கீழ் உள்ள பிரிவினர் இட ஒதுக்கீட்டிற்கு தகுதியானவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

10% ஒதுக்கீட்டில் பட்டியலினத்தவர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்டவர்கள் உரிமை கோர முடியாது. இவர்களுக்கென ஏற்கனவே 50% இட ஒதுக்கீடு நடைமுறையில் உள்ளது. ஒதுக்கீடு வரம்பிற்குள் வராத எஞ்சியுள்ள 50% இடத்தில் தான் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு 10% இட ஒதுக்கீடு வகை செய்யப்பட்டுள்ளது என்கிறது ஒன்றிய அரசு.

10 % இட ஒதுக்கீடு அரசியல் சாசனத்திற்கு முரணானது. எனவே, செல்லாது என உச்ச நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, தற்போது அவ்வழக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வில் விசாரிக்கப்பட்டு வருகிறது.

உச்ச நீதிமன்றம் 10% இட ஒதுக்கீடு குறித்து மூன்று முக்கிய வினாக்களை தொடுத்துள்ளது.

1. 103 ஆவது திருத்தம் அரசியல் சாசனத்தின் அடிக் கட்டுமானத்தை தகர்த்துள்ளதா?



2. 10% இட ஒதுக்கீடு தனியார் கல்வி நிறுவனங்கள், தனியார் துறைகளுக்கு பொருந்துமா?

3. 10% இட ஒதுக்கீடு பட்டியல் சாதியினர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு பொருந்தாது என்பது அரசியல் சாசனத்திற்கு முரணானதாக இல்லையா?

இக்கேள்விகளை உச்சநீதிமன்றம் ஒன்றிய அரசிடம் எழுப்பிவிட்டு, தீர்ப்பை ஒத்திவைத்துள்ளது. இவ்வழக்கின் போது நடைபெற்ற வாதப் பிரதிவாதங்களுக்குள் செல்லும் முன்பு, இந்தியாவில் இட ஒதுக்கீட்டின் வரலாற்றை நாம் அறிவது அவசியமாகும்.

### இட ஒதுக்கீட்டின் வரலாறு

வர்ணாசிரம தர்மத்தின்படி பார்ப்பனர் உயர்ந்தவர்கள். ஏனைய சத்ரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் பார்ப்பனர்களுக்கு அடிமை வேலை பார்ப்பவர்கள். கல்வி கற்கும் உரிமை பார்ப்பனர்களுக்கு மட்டுமே உரியது. ஏனைய பகுதியினர் குலத்தொழிலை ஆற்ற வேண்டும். கல்வி கற்கக்கூடாது; அரசு வேலை பார்க்கக்கூடாது; செல்வம் சேர்க்கக் கூடாது. சூத்திரர் வேதம் படிப்பதை கேட்டாலே, அவனது காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும். வேதத்தை ஓதினால் அவன் நாக்கு துண்டிக்கப்பட வேண்டும்.

வெள்ளையன் நம் நாட்டில் ஆட்சிக்கு வரும் முன்பு, சுமார் 500 ஆண்டுகளாக இந்த கொடுமை தான் இந்நிலையில் கல்வி அனைத்து சாதியினருக்கும் தரப்பட வேண்டுமென 1853 ல் வெள்ளையன் அறிவித்தான். ஆனால், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. கல்வி வேலைவாய்ப்புகளில் பார்ப்பனர்களின் ஆதிக்கமே தொடர்ந்தது.

இந்தியாவில் இட ஒதுக்கீடு 1902ல் மகாராஷ்டிரா மாகாணத்திலும், 1920ல் கர்நாடகாவில் மைசூர் மன்னராலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தியாவிலேயே பார்ப்பனர் ஆதிக்கத்திற்கு எதிராக சென்னை மாகாணத்தில் நீதிக்கட்சி 1916ல் தோற்றுவிக்கப்பட்டது. நீதிக்கட்சி ஆட்சியில் முதன்முதலில் இட ஒதுக்கீடு கம்யூனல் ஜி.ஓ. 1921ல் வெளியிடப்பட்டது. பார்ப்பனருக்கு 16%, பிற இந்துக்களுக்கு 44%, இஸ்லாமியர்களுக்கு 16 %, கிறிஸ்தவர்களுக்கு 16%, ஆதிதிராவிடர்களுக்கு 8% என்று கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் 1927ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மத்திய அரசு வேலைகளில் இட ஒதுக்கீடு 1935ல் வந்தது. 1936ல் சென்னை மாகாணத்தில் மட்டும் அது அமல்படுத்தப்பட்டது. பிற மாகாணங்களில் அமலுக்கு வரவில்லை.

இட ஒதுக்கீடு ஆணைகள் 1947 ல் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் அரசால் ரத்து செய்யப்பட்டது. டாக்டர் அம்பேத்கர் பட்டியல் இன மக்களுக்கு அரசு வேலையில் 8.33% ஒதுக்கீடு பெற்றுத்தந்தார். வேலைவாய்ப்பில் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் இனத்தவர், பழங்குடியினருக்கு அரசியல் சாசனத்தில் இடம் பெறச் செய்தவர் டாக்டர் அம்பேத்கர்.

கல்வியில் இடஒதுக்கீடு 1951ல் தான் அரசியல் சாசனத்தில் விதி 15(4) மூலம் இடம்பெற்றது. விதி 15(4) சமூகத்திலும், கல்வியிலும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று தான் உள்ளது. பொருளாதாரத்தில் பிற்படுத்தப்பட்டோர் என்பது இல்லை.

இட ஒதுக்கீடு 50%க்குள்தான் இருக்க வேண்டும் என்பது இந்திரா சகானி வழக்கில் உச்சநீதிமன்றம் 1992 ல் வழங்கிய தீர்ப்பாகும். ஆனால் தமிழகத்தில் தற்போது 69% இட ஒதுக்கீடு அமலில் உள்ளது.

கலைஞர் முதல்வராக இருந்தபோது பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான ஒதுக்கீட்டை 23% லிருந்து 31% ஆக உயர்த்தினார். பட்டியல் இனத்தவருக்கு 16% லிருந்து 18% ஆகவும் உயர்த்தினார்.

எம்ஜிஆர் முதல்வராக இருந்தபோது பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை 31% இருந்து 50% ஆக உயர்த்தினார். கலைஞர் 50%ல் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20% உள்ஒதுக்கீடு வழங்கினார்.

அருந்ததியருக்கு 3 %, இஸ்லாமியர்களுக்கு 3.5% உள் ஒதுக்கீட்டையும் கலைஞர் வழங்கினார்.

ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது மொத்த இட ஒதுக்கீடு 69 சதத்திற்காக சிறப்பு சட்டமியற்றி, அரசியலமைப்பு அட்டவணை 9-ல் சேர்க்க நடவடிக்கை எடுத்தார்.

50 % க்கு மேல் வேறு மாநிலங்களில் இல்லை. 69 % இட ஒதுக்கீடு இதன்

# ாய்மை பணியாளர்கள்
# டிப்பினைகளும்



நாட்டுவதற்கென்றே பிறப்பெடுத்த பாஜகவின் பிரதிநிதி.

இதனை தொடர்ந்து சில நாட்களுக்கு பின்னர் ஆந்திர மாநிலத்தில் ஒப்பந்த மற்றும் வெளிச்சந்தை தொழிலாளர்கள் நான்கு நாட்கள் வேலை நிறுத்தம் செய்தனர். உள்ளாட்சி அமைப்புகளில் பணி புரியும் தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட 38 ஆயிரம் தொழிலாளர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக மாதம் ரூ. 6000 ஊதியம் உயர்த்தி ரூ. 21,000 ஊதியம் வழங்க அரசு ஏற்றுக் கொண்டது. ரூ. 15,000 ஊதியம் , உடல் நலன் பேணும் படி (Health care Allowance) ரூ. 6,000 என அத்தொகை வழங்கப்படும். ஏற்கனவே ரூ. 12,000/ ஊதியம், உடல் நலம் பேணும் படி ரூ. 3000/ பெற்று வந்தனர். தெலுங்கானா மாநில அரசு ஒப்பந்த, வெளிச்சத்தை தொழிலாளர்களுக்கு ரூ. 19000/ ஊதியம் வழங்கி வருகிறது.

ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களில் வெளிச்சந்தை தொழிலாளர் கழகம் ( Out Sourcing Employees Corporation) 1994 முதல் செயல் பட்டு வருகிறது. இந்த நிறுவனம் மூலம் தான் வெளிச்சத்தை, ஒப்பந்த தொழிலாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் வேலை, சேர்ந்த நாளிலிருந்து அவர்கள் வேலை, ஊதியம் உள்ளிட்ட விவரங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு பொது வெளியில் இருக்கிறது. தொழிலாளி என்றைக்கு வேலைக்கு சேர்ந்தார், அவர் என்ன வேலை செய்தார், என்ன ஊதியம் பெற்றார், வேறு பல உரிமைகள் என்ன பெற்றார் என்பதெல்லாம் தனித்தனி தொழிலாளி குறித்த அந்த ஆவணத்தின் மூலம் வெளியிடப்படுகிறது.

தமிழ்நாட்டிலோ கடந்த 2000ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளில் தூய்மைப் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகள் ஒப்பந்த வெளிச்சந்தை முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் தொழிலாளி குறித்தும் ஒப்பந்ததாரர் குறித்தும் எந்த வெளிப்படையான ஆவணமும் இல்லை. ஒப்பந்ததாரர்கள் விருப்பம் போல சுரண்டி கொள்ளை அடிக்க ஊக்குவிக்கும் அவலமான நிலை நீடிக்கிறது.

இதில் கூட்டு கொள்ளையும் உண்டு. திமுக அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் இந்த அவலம் மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. வளர்ச்சியில் முதலிடம் வகிக்கும் தமிழ்நாடு அரசு தனது தொழிலாளர்களுக்கு ஊதியமும், உரிமைகளும் வழங்குவதில் உத்தரப்பிரதேசம், பீகார், குஜராத் மாநிலங்களை விட பின் தங்கி இருக்கிறது.

கிராம ஊராட்சிகளின் நிலைமைகளோ இன்னும் மோசம். கடந்த செப்டம்பர் 24,25 தேதிகளில் கோவாவில் அகில இந்திய கிராம ஊராட்சி தொழிலாளர்கள் சம்மேளன ஏஐடியுசி மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் மாநில முதலமைச்சர் கலந்து கொண்டார்.

அரசு ஊழியர்கள் பெறும் ஊதியம், படி, சமூக பாதுகாப்பு அனைத்தும் அங்கு கிராம ஊராட்சி தொழிலாளர்கள் பெறுகிறார்கள்.

கோவா மாநிலத்தினுடைய பெருமைக்கு கோவா மாநில ஏஐடியுசி யின் போராட்டமும், முந்தைய அரசுகளின் சாதனையும் காரணம்.

கிராம ஊராட்சியில் ஒரு கோவா தொழிலாளி வாங்குகிற ஊதியத்தினை, தமிழ்நாடு அரசு 10 தொழிலாளிகளுக்கு தருகிறது. சமூக பாதுகாப்பு, வார விடுமுறை, வேலை நேரம், வேலை செய்வதற்கு ஆதாரம் என்று வேறு எதுவும் இல்லை. தூய்மை காவலர்கள் 26 நாள் ஊதியம் (நாள் ஒன்றுக்கு ரூ. 120/) பெற்றுக்கொண்டு 30 நாள் வேலை செய்ய வேண்டும் என்று வெட்கம் இல்லாமல் சொல்கிறது. கோவாவில் ஒரு குடும்பம் உயிர் வாழ்வதற்கு செலவிடும் தொகையை கொண்டு தமிழ்நாட்டில் 10 குடும்பம் உயிர் வாழ முடியும் என்று தமிழ்நாடு அரசு நம்புகிறது போலும். மேலும் இந்த மாநாட்டில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுடைய பிரதிநிதிகள் அவரவர் மாநிலத்தினுடைய நிலைமைகளைச் சொன்னார்கள்.

இவற்றோடு ஒப்பிடும்போது தமிழ்நாட்டு நிலைமை பீகார், குஜராத்தை விட மோசம் என்று அறிய முடிகிறது.

இந்த நிலையில் கோவை தொழிலாளர்கள் போலவே பல இடங்களிலும் போராடுபவர்களை தமிழ்நாடு அரசு எதிர் கொள்ளுகிற விதமே வினோதமானதாக இருக்கிறது. வாழ்க்கைக்கான எந்த உத்தரவாதமும் இல்லாத கடைக் கோடியில் இருக்கிற தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி தொழிலாளர்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவு சுரண்டி கொள்வதற்கு ஒப்பந்ததாரர்களுக்கு வழி ஏற்படுத்தி தரும் அரசு, இதனை எதிர்த்து குரல் எழுப்பினாலோ, போராடினாலோ அவற்றை அடக்கி, நீர்த்துப் போகச் செய்வது சாதனை என்று கருதுகிறது.

பலவீனமான பகுதியோடு அரசு இயந்திரத்தின் அத்தனை கொடூர கரங்களையும் கொண்டு மோதி ஒடுக்குவதும், தொழிலாளர்களை எதிரியாகக் கருதி பழி வாங்குவதும், அதனையே சாதனை என்று கருதுவதும் என்ன விதமான நீதி? இத்தகைய அவலமான நிலை உள்ளாட்சித் துறையில் பரவலாக நீடித்து வருகிறதே! இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அவசியம் அல்லவா!

எனவே தொழிலாளர்களுக்கு சட்டப்படியாக வழங்க வேண்டிய பணி நிரந்தரம், சம ஊதியம், அரசாணைப்படி குறைந்தபட்ச ஊதியம், பணிக்கொடை, ஓய்வூதியம் உள்ளிட்ட அனைத்தையும் வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு, உள்ளாட்சி துறை முன்வர வேண்டும். இல்லையேல் கோவை தொழிலாளர்கள் காட்டிய வழியில் தமிழ்நாட்டு உள்ளாட்சி தொழிலாளிகள் ஒன்று பட்டு முழுமையாக போராடுவார்கள். அந்த நாள் வெகு தொலைவில் இல்லை.

தொடர்புக்கு: 85248 67888

# இட நெருக்கடியும்!

மூலம் காப்பாற்றப்பட்டது. இதர பிற்படுத்தப்பட்டோருக்கு எத்தனை சதவீதம் தரவேண்டும் என்பதை மாநில அரசுகளின் அதிகாரத்திற்கு விட வேண்டும் என்ற குரல் இன்று ஒலிக்கிறது.

ஒன்றிய அரசின் கல்வி, வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு பல தடைகளைத் தாண்டி பெறப்பட்டது. இதற்கென 1953ல் “கலேல்கர் கமிட்டி” ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு கூடாது; பொருளாதார அடிப்படையில் தான் இருத்தல் வேண்டும் என அறிக்கை கொடுத்தது. அதற்கு கடுமையான எதிர்ப்பு கிளம்பியதால் அறிக்கை கிடப்பில் போடப்பட்டது.

பின்னர் பி.பி. மண்டல் தலைமையில் 1979ல் குழு அமைக்கப்பட்டது. பிரதமர் இந்திரா காந்தியிடம் இக்குழு அறிக்கை 1980ல் தரப்பட்டது.

மண்டல் குழுவின் பரிந்துரைகளாவன:

மைய. மாநில அரசுகளில் அனைத்து கல்வித் துறைகளிலும். வேலைத் துறைகளிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும், மைய, மாநில அரசுகளின் நிதி உதவி பெறும் தனியார் நிறுவனங்களிலும் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளிலும், 27% இட ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கிட வேண்டும் என்பது மண்டல் குழுவின் பரிந்துரையாகும்.

1980ல் வழங்கப்பட்ட பரிந்துரை 1990ல் தான் வி.பி.சிங் தலைமையிலான ஒன்றிய அரசால் அமல்படுத்தப்பட்டது. இதனை எதிர்த்து ஆர்எஸ்எஸ், விஎச்பி கொதித்து எழுந்து போராடின; கலவரங்கள் நிகழ்ந்தன. கோஸ்வாமி என்ற விஎச்பி மாணவர் தலைவர் தீயிட்டு தற்கொலை செய்து கொண்டார். உயிர்க் கொலைகள், தீ வைப்புகள் நடந்தன.

1991இல் பாஜக தலைவர் அத்வானி ரத யாத்திரையை நடத்தினார். மண்டலா? கமண்டலமா? என்ற விவாதம் கிளப்பி விடப்பட்டது. இட ஒதுக்கீட்டால் நிர்வாகம் சீரழிந்து விடும் என முழங்கினார்கள்.

1991ல் பிரதமராக வந்த நரசிம்மராவ் பிற்படுத்தப்பட்டோர் கிரிமிலேயர் வேண்டும்; முற்பட்ட பிரிவில் உள்ள ஏழைகளுக்கு பொருளாதார ரீதியாக 10% இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என அரசாணை ஒன்றை வெளியிட்டார்.

பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு நிலைப்பாட்டில் பெரும்பாலான அரசியல் கட்சிகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் உருவாகியது. ஆனால், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் மட்டும் ஒருமித்த கருத்துநிலை நிலவியது என்பது குறிப்பிடத்தக்கது.

வி.பி.சிங், நரசிம்மராவ் வழங்கிய அரசாணையை எதிர்த்து பார்ப்பனர் உச்ச நீதிமன்றம் சென்றனர். நீதிமன்றம் பிற்படுத்தப்பட்டோருக்கு 27% இட ஒதுக்கீட்டை ஏற்றுக்கொண்டது. பிற்படுத்தப்பட்டோருக்கு கிரிமிலேயர், பொருளாதார அடிப்படையில் முற்பட்ட பிரிவினருக்கு 10% இட ஒதுக்கீட்டை தள்ளுபடி செய்து 1992ல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இட ஒதுக்கீடு 50%க்கு மேல் மிகக் கூடாது எனவும் தீர்ப்பளித்தது. இடஒதுக்கீடு என்பது பல போராட்டங்களாலும், தியாகங்களாலும், அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகளின் இடைவிடாத முயற்சியால் உருவானது; நடைமுறைக்கு வந்தது என்பதே வரலாறாகும்.

இந்தியாவில் மக்கள் தொகையில் 82% உள்ள பிற்படுத்தப்பட்ட பிரிவினர் இட ஒதுக்கீட்டிற்கு பல போராட்டங்கள் நடத்தியும் 27% இட ஒதுக்கீடு தான் பெறமுடிந்தது. ஆனால் பல நூற்றாண்டு காலம் கல்வி, வேலைவாய்ப்பை முழுமையாக அனுபவித்து கொண்டிருக்கும் முற்பட்ட சாதியினர் பொது ஒதுக்கீட்டில் பெரும்பாலான இடங்களை பெற்று அனுபவித்து வரும் இப்பிரிவினர், இட ஒதுக்கீடு தேவை என ஒரு முனகல் சத்தம் கூட போடாமல், எவ்வகையிலும் போராடாமல் 10% இட ஒதுக்கீட்டை மோடி அரசிடம் பெற்றுள்ளார்கள். இன்றும் கல்வி, அதிகாரத்தை அதிகமாக துய்ப்பவர்கள், அப்பிரிவினராகவே உள்ளனர். 10% இட ஒதுக்கீடு வழக்கில் வாதி - பிரதிவாதிகளைப் பார்ப்போம்.

### 10% எதிர் வாதங்கள்

இட ஒதுக்கீடு என்பது வறுமையைப் போக்கும் திட்டம் இல்லை. சமுதாயத்தில் நிலவி வந்த ஏற்றத்தாழ்வை போக்கவே இட ஒதுக்கீடு முறை வந்தது. ஒருவரின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு இல்லை. வரலாற்று ரீதியாக கல்வி, வேலை வாய்ப்பு மறுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட பிரிவினர்களை மேம்படுத்தவும், அரசு அதிகாரத்தில் அவர்களுக்கான பங்களிப்பை வழங்கவும் இட ஒதுக்கீடு. பொருளாதார ரீதியில் இட ஒதுக்கீடு வழங்கியது தவறு.

சமூக ரீதியாக, கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்டவர்களுக்கே இட ஒதுக்கீடு என்றுதான் அரசியல் சாசனம் கூறுகிறது. பொருளாதார நிலை பற்றி எதுவும் கூறவில்லை.

10% இட ஒதுக்கீட்டில் இருந்து பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடியினருக்கு விலக்கு கொடுத்தது கொடுமை. இவர்கள் தகுதி அடிப்படையில் பொது ஒதுக்கீடான 50%த்தில் இடம் கோரும் உரிமையை 10% பாதித்துவிட்டது. எஞ்சிய பொது ஒதுக்கீடு 40%த்தில் தான் இனி இப்பிரிவினர் போட்டியிட முடியும். இது இப்பிரிவினருக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும்.

10% ஒதுக்கீடு விவாதம் ஏதுமில்லாமல், அரசியல் பயன்களுக்காக, அவசரமாக எடுக்கப்பட்ட முடிவாகும். குடும்ப வருமானம் வருடத்திற்கு ரூ. 8 லட்சம் என்று நிர்ணயித்ததற்கு தரவுகளோ, அடிப்படை ஆதாரங்களோ இல்லை. தேசிய வருமான அமைப்பின் 2011-12 அறிக்கையின்படி ரூ.8 லட்சம் மற்றும் அதற்கு கீழாக வருமானம் பெறுவோர் பெருமளவில் உள்ளனர். இறுதித்தீர்ப்பு என்னாகுமே?

குதிரை, குழியில் தள்ளியதோடு, மண்ணையும் தள்ளியதாம். வரலாற்றுக் காலம் தொட்டு பல நூறு ஆண்டு காலம் கல்வி, வேலை வாய்ப்பை மறுத்த கொடுமை.

இன்றைக்கும் காலை உணவுக்கும், மதிய உணவுக்குமே பல கோடி ஏழை சிறுவர்கள் பள்ளிக்கு செல்லும் அவலம்! இட ஒதுக்கீட்டில் படித்துள்ளவர்களுக்கு அரசு மற்றும் பொதுத் துறைகள் தனியார் தனியார்மயமாக்கலால் வேலை வாய்ப்பு குறைந்து வரும் அவலம்! தொழிலதிபர்கள் கஷ்டமின்றி தொழில் நடத்த ஏதுவாக அரசு சலுகைகள் மற்றும் தொழிலாளர் சட்ட திருத்தம் என்பதால் தற்காலிக நிலையில் குறைவான கூலியில் பணிபுரிய வேண்டிய நிலையில் தொழிலாளர்கள்.

மக்களை உயிர்வாழ வைக்கும் விவசாயிகளின் துன்பநிலை. இந்த நிலையில் இட ஒதுக்கீடு பயனற்று போய்விடும் அபாயம். விடிவு தான் என்ன? அரசியல், சமூக ரீதியில் புரட்சி வராமல் இக்கொடுமைகளுக்கு தீர்வே கிடையாது. மாற்றி யோசிப்போம்! மாற்றத்தைப் படைப்போம்!

தொடர்புக்கு: 73389 20584

# பெட்ரோல் குண்டு வீச்சுகளுக்குப் பின்னால் அம்பலமாகும் பாஜகவின் பித்தலாட்ட அரசியல்

- முகவை பூபேஷ்



அண்மையில் 9 இஸ்லாமிய அமைப்புக்களை, ஒன்றிய அரசு தடைசெய்தது. அதற்கடுத்த நாட்களில், தமிழகத்தில் ஒரிரு பெட்ரோல் குண்டுவீச்சு சம்பவங்களும், பாஜக பேர்வழி, கார்கள் சேதப்படுத்தப்பட்டதாகவும் செய்திகள் வெளியான. இத்தகைய சம்பவங்கள் குறித்து இடதுசாரி மற்றும் விசிக அமைப்பின் தலைவர்கள், எதிர்வினை ஆற்றுகையில்,மத மோதல்களை உருவாக்கும் நோக்குடன், இத்தகைய சம்பவங்களுக்குப் பின்னால் பாஜகவினரே இருக்க வாய்ப்புண்டு என்று தெரிவித்து உள்ளனர்.

இந்த கூற்று மிகச் சரியான கூற்று என்பதை கடந்த காலத்தில் பாஜக மற்றும் அதன் சார்பு அமைப்பினரால் அரங்கேற்றப்பட்ட பித்தலாட்ட நாடக சம்பவங்கள் சாட்சிங்களாய் உறுதிப்படுத்துகிறது.

பாஜக என்ற பாசிசத் தன்மை பொருந்திய கட்சியைப் பொறுத்த வரை, சகோதர்களாக வாழும் வேறுபட்ட மதத்தினரோடு பகைமையை விதைத்து அதன் மூலம் பீதி, கலவரத்தை உருவாக்கி பெரும்பான்மை மத மக்களின் அனுதாபத்தைப் பெறுவதும் அதனை வாக்குகளாக மாற்றுவதுமே. இதற்காக மிக இழிவான செயல்களில் ஈடுபடவும் தயங்காத பாஜக நிர்வாகிகள் மற்றும் இந்து முன்னணி அமைப்பைச் சேர்ந்தவர்கள், தாங்களே, தங்களது வீட்டில் பெட்ரோல் குண்டு வீசிக்கொள்வது, கார், பைக்கை கொளுத்துவது அதன் பழியை மாற்று மதத்தினர் மேல் சுமத்தி கலவர சூழலை உருவாக்கிய சம்பவங்கள் பல உண்டு.

**சம்பவம் 1:** 2013 ஆண்டில், கோவை வடவள்ளி சோமையம்பாளையம் தாயுமானவர் வீதியைச் சேர்ந்தவர் ராமநாதன். பாஜக நிர்வாகி.இவருக்கு கொலை மிரட்டல் வருவதாகக் கூறி துப்பாக்கி ஏந்திய போலீஸ் மூலம் 24 மணி நேர பாதுகாப்பும் இவருக்கு அளிக்கப்பட்டு வந்தது.இந்த நிலையில் அக்டோபர் 26 இரவில் ராமநாதன் வீட்டில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

அந்த சமயத்தில் பிரதமர் மோடியார் திருச்சி வருகையைக் கண்டித்து போஸ்டர்கள் ஒட்டி இருந்ததும் அது தொடர்பாக இந்த பாஜக பேர்வழி ராமநாதன் போலீசில் புகார் செய்திருந்தார். தீவிர விசாரணையின் இறுதியில், பாஜக கட்சியில் தனது செல்வாக்கு குறைந்து விட்டதாகவும் அதை சரிகட்டி மீட்கவே தானே தமது வீட்டில் பெட்ரோல் குண்டு வீசியதை ஒப்புக் கொண்டார்.அதைத் தொடர்ந்து போலீசார் பாஜக நிர்வாகி ராமநாதன் மீது , மதக் கலவரத்தைத் தூண்டுதல், மோசடி செய்தல் உள்ளிட்டு 3 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

**சம்பவம் 2:** 2013 ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், திண்டுக்கல் செல்லாண்டியம்மன் கோவில் தெருவில் வசித்து வரும் பாஜக வைச் சேர்ந்த பிரவீண்குமாரின் மனைவி, தங்களது வீட்டின் மீது மர்ம நபர்கள் வெடிகுண்டு வீசிவிட்டதாக கணவர் மூலம் போலீசில் புகார் கொடுத்தார். அது மட்டுமல்ல, அவர் கண்ணீர் மல்க ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்தார். போலீசாரின் தீவிர விசாரணையில், தாம் கட்சியிலும் வெளியிலும் பிரபலம் அடைவதற்காகத்தான் தமது வீட்டின் மீது தனது நண்பர் மூலம் வெடிகுண்டு வீச ஏற்பாடுசெய்த உண்மை அம்பலமானது. இதைத் தொடர்ந்து பாஜக பேர்வழி பிரவீண்குமார் மற்றும் அவரது நண்பர் ஆக.30 இல் கைதாகினர்

**சம்பவம் 3:** சென்னை திருவேற்காடு அயனம்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் பரமானந்தம். பாஜக கட்சியின் எஸ்.சி. பிரிவு மாவட்டச் செயலாளராக உள்ளார். 2017 செப்.20 இல் ஜன்னல் வழியே பெட்ரோல் குண்டு வீட்டிற்குள் வீசப்பட்டதாகவும் அதனால் சோபா முழுதும் எரிந்து விட்டதாகவும் போலீசில் புகார் கொடுத்திருந்தார்.

இந்த நிலையில் பெட்ரோல் குண்டு வீச்சு குறித்து பரமானந்தம் முன்னும் பின் முரணாக கூறியதால் அவர்மீது போலீசாருக்கு சந்தேகம் வலுத்தது. தீவிர விசாரணையின் இறுதியில் சொத்து தகராறில் ஏற்பட்ட பிரச்சினையை திசை திருப்பவே தன் வீட்டில் தானே பெட்ரோல் குண்டு வீசியதாக ஒப்புக் கொண்டுள்ளார். பொய்ப்புகார் மோசடி உள்ளிட்ட 5 பிரிவுகள் கீழ் பாஜக பேர்வழி மீது வழக்கு பதிந்த போலீசார் அவரை கைது செய்து சிறையிலடைத்தனர்.

**சம்பவம் 4:** திருவள்ளூர் மாவட்டம் சோழவரத்தை அடுத்த மீஞ்சூர் வண்டலூர் சாலையில் 2018 ஜீலை 6 இல் இந்து மக்கள் கட்சியின் அனுமந்த் சிவசேனா என்ற அமைப்பின் மாநில செயலாளர் காளிகுமார் தனது நிர்வாகிகள் ரஞ்சித், ஞானசேகரன் ஆகியோர் காரில் சென்ற போது இருசக்கர வாகனத்தில் வந்த 2 மர்ம நபர்கள் அவர்கள் சென்ற காரின் மீது பெட்ரோல் குண்டு வீசியதில் கார் எரிந்து விட்டதாகவும் காவல்துறையிடம் புகார் கொடுத்துள்ளனர். வழக்கை பதிந்து கொண்ட போலீசார் தடயவியல் நிபுணர்களை வரவழைத்து சம்பந்தப்பட்ட இடத்தில் ஆய்வு மேற்கொண்டனர். அந்த இடத்தில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டதற்கான எந்த தடையமும் கிடைக்காத நிலையில் இந்துமக்கள் கட்சியின் நிர்வாகியை தீவிர விசாரணை செய்தனர்.

முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்ததைத் தொடர்ந்து அவருடன் கூட இருந்ததாகச் சொல்லப்பட்ட ஞானசேகரை விசாரித்துள்ளனர். அப்போது ஞானசேகர், இந்துமக்கள் கட்சி நிர்வாகி காளிமுத்துவே தன் காருக்கு தீவைத்து விட்டு பெட்ரோல் குண்டு வீசியதாக பொய்ப் புகார் அளித்ததை ஒப்புக் கொண்டுள்ளார். இதை அடுத்து அந்த 3 நபர்களையும் போலீசார் கைது செய்து காவலில் அடைத்தனர்.

**சம்பவம் 5:** சென்னை மதுரவாயல் கிருஷ்ணா நகர் 1 வது தெருவைச் சேர்ந்த சதீஷ்குமார் என்ற பேர்வழி பாஜக கட்சியின் திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் ஆக உள்ளார். கடந்த 2022 ஏப்ரல் 14 ந்தேதியன்று தன் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் திடீரென தீப்பற்றி எரிந்ததாக போலீசில் புகார் செய்திருந்தார். இதனைத் தொடர்ந்தது அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமராவில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்த போது ஒரு ஆணும், பெண்ணும் காரில் வந்து இறங்கி சதீஷ்குமமாரின் கார் மீது பெட்ரோல் ஊற்றும் காட்சி பதிவாகி இருந்தது. அதன் பின் அந்த மர்ம நபரும், பெண்ணும் ஆட்கள் யாரும் வருகிறார்களா என்பதை சுற்றும் முற்றும் பார்க்கின்றனர். ஆட்கள் வருவதைக் கண்டதும் அந்த மர்ம நபர்கள் காரின் உள்ளே சென்று உட்கார்ந்து கொள்வதும் ஆட்கள் சென்ற பின்பு காரை தீ வைத்து கொளுத்துவதும் அந்த சிசிடிவி காட்சியில் தெளிவாக பதிவாகி இருந்தது. அரசியல் பகையால் கார் கொளுத்தப்பட்டதா என்ற கோணத்தில் சிசிடிவி காட்சியை நன்கு ஆய்வு செய்த போலீசார் காரை கொளுத்தியது காரின் உரிமையாளரான பாஜக பேர்வழி சதீஷ்குமார் என்பதை உறுதி செய்தனர்.

**சம்பவம் 6:** கோபிசெட்டிப்பாளையம் அருகே கணபதிபாளையத்தை சேர்ந்தவர் ராஜகுரு. இந்த சங்கீ இந்து அதிரடிப் படையின் மாநிலப்பொதுச் செயலாளராம். இவர் கடந்த 2020 ஆண்டு அக்டோபர் 1 இரவு 4 பேர் தன்னை கொலை செய்யும் நோக்குடன் கத்தியுடன் துரத்தி வந்ததாகவும் ஆத்திரத்தில் அந்த கும்பல் தன்னுடைய இருசக்கர வாகனத்தை எரித்துவிட்டு சென்றதாகவும் போலீசில் புகார் அளித்திருந்தார். போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையிலேயே அவரை யாரும் துரத்தி வரவில்லை என்பதையும், தன்னுடைய இரு சக்கர வாகனத்திற்கு தானே தீ வைத்து எரித்துவிட்டு நாடகமாடியதையும் போலீசார் கண்டுபிடித்தனர். இதனை அடுத்து சங்கீ ராஜகுருவை கைது செய்து விசாரித்தில் தான் விளம்பரத்ததிற்காக நாடகமாடியதாக ஒப்புக் கொண்டுள்ளார். இதுதொடர்பாக போலீஸார் கூறுகையில், வாய்க்காலில் தப்பித்தாக கூறும் ராஜகுருவின் ஆடை நனையாமல் இருந்துள்ளதையும், காலணிகள் அவர் கூறியதற்கிணங்க எந்த பாதிப்பும் இல்லாமல் இருந்ததால் சந்தேகப்பட்டு அவரது செல்போனை வாங்கி சோதித்த போது, இரு சக்கர வாகனம் எரிந்துகொண்டிருந்ததை 20 நிமிடங்களுக்கு மேல் படம் எடுத்துள்ளது தெரியவந்ததால் மோசடி புகார் கலவரத்தை தூண்டுதல் ஆகிய பிரிவுகள் வழக்கு பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டார்.

**சம்பவம் 7 (2020, மார்ச.17):** திருப்பூர் மாவட்டம் கணக்கம் பாளையம் பகுதியைச் சேர்ந்த பகவான் நந்து என்ற நந்தகோபால். இந்து மக்கள் கட்சியின் மாவட்ட துணைச்செயலாளராக உள்ளர். சிலரால் அரிவாளால் வெட்டப்பட்டதாகக் கூறி திருப்பூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த நபருக்கும் மற்றொரு மதத்தைச் சேர்ந்த இன்னொருவருக்கும் மோதல் இருந்துவந்ததாகவும் அதன் காரணமாக இந்த தாக்குதல் நடந்துள்ளதாகவும், இந்து மக்கள் கட்சியினர் மக்களிடையே பிரச்சாரம் செய்ததின் விளைவு கலவரச் சூழல் உருவானது. பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது. சிசிடிவி காமிரா ஆதாரங்களின் அடிப்படையில் பகவான்நந்துவின் கார் டிரைவர் ருத்ரமூர்த்தி என்பவரை கைது செய்து விசாரணக்கு உட்படுத்தியதுபோதுதான் போலீசாருக்கு அதிர வைத்த தகவல்கள் அம்பலமாயின. தான் சார்ந்துள்ள கட்சியில் நல்ல பதவியுடன் மக்களிடம் பிரபலம் ஆக வேண்டும் என்பதற்காக பகவான்நந்துதான் தன்னை வெட்டச் சொன்னார் என ருத்ரமூர்த்தி கூறியுள்ளார். அதோடு பகவான்நந்துவே தன் உடலில் சில இடங்களில் அவரே வெட்டிக்கொண்டார் என்றும் கூறியுள்ளார். இதற்கான தாக்குதல் பழியை பிற மதத்தினர் மீது போட்டுவிடலாம் என பகவான்நந்துதான் ஐடியா கொடுத்தார் என அவரது டிரைவர் ருத்ரமூர்த்தி வாக்குமுலம் அளித்ததின் பேரில் அவ்விரு நபர்கள் மீது வழக்கு தொடரப்பட்டதுள்ளது.

**சம்பவம் 8:** திருச்சி மாவட்டம் மணிகண்டம் அதவத்தூர் பகுதியைச் சேர்ந்த சக்திவேல் என்பவர் இந்து முன்னணி பிரமுகர்.ரியல் எஸ்டேட் செய்து வருபவர். 2020 மார்ச 10 ம் தேதி நள்ளிரவில் வீடடின் மீது மர்மநபர்கள் கல்வீசி தாக்குதல் நடததியதோடு, வீட்டின் முன்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு சக்கர வாகனத்தை தீ வைத்து கொளுத்தி விட்டதாக காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதனையடுத்து போலீசார் நடத்திய விசாரணையில் சக்திவேல் மற்றும் அவரின்நண்பர்கள் இருவரும் சேர்ந்து பைக்கை எரித்த காட்சிகள் அப்பகுதியில் இருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகி இருந்தது. கட்சியில் பிரபலம் அடையவும், பைக் லோன் கட்டாமல் ஏமாற்றவும் தனது பைக்கை நண்பர்களுடன் சேர்ந்த தீ வைத்து எரித்ததாக போலீஸ் விசாரணையில் தான் நடத்திய நாடகத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து இந்து முன்னணி பிரமுகர் சக்திவேல் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.


**சம்பவம்.9:** கடந்த வாரத்தில்(2022 செப்.27) அம்பலமான நாடகம், கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் இந்து இளைஞர் முன்னணி என்ற அமைப்பின் நிர்வாகி ஹரீஸ என்பவரது கார் கண்ணடிகளை உடைத்தும் சேதப்படுத்தியதாக காவல் துறையில் மேற்படி நபரால் புகார் செய்யப்பட்டது. இந்தப் பிரச்சினையை பூதாகரமாக்கும் முயற்சியில் இந்து முன்னணி என்ற மதவெறி அமைப்பின் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் என்பவர் மேட்டுப்பாளையத்தில் முகாமிட்டு கூட்டம் நடத்திவிட்டு பிரச்சினையை உருவாக்கும் வகையில் பேசி சென்றுள்ளார்.

மேற்படி சம்பவத்தை விசாரித்த போது இந்து முன்னணி நிர்வாகியின் காரை உடைத்து சேதமாக்கியது இந்து முன்னணியை சேர்ந்த தமிழ்ச்செல்வன் என்பதும், இவ்விரு தனி நபர்களுக்கிடையே உள்ள பகைமையால் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளதாக காவல் துறை தெரிவித்துள்ளது. இருப்பினும் இந்த பிரச்சினைக்கு மாற்று மதத்தினர் மேல் பழியைப்போட்டு கலவரச் சூழல் உருவாக இருந்ததை தக்க சமயத்தில் தலையிட்டு தடுத்ததாக காவல்துறை தெரிவித்துள்ளது.

மதநல்லிணக்க மனிதசங்கிலி மக்கள் இயக்கமாக்குவோம்

தமிழகத்தை பொறுத்தவரை, அனைத்து சமயத்தவரும் இணக்கமான முறையில் சகோதரத்துவத்துடன் அமைதியாக வாழ்ந்து வரும் மாநிலம். இங்கே மதக்கலவரங்களை உருவாக்கி அதன்மூலம் மக்களைப்பிரிக்க முயலும், நாட்டிற்கு பேராபத்தாய் உள்ள பாசிச பாஜக வை வீழ்த்த. அக்.11 இல் நடைபெற உள்ள இடதுசாரி, விசிக மற்றும் ஜனநாயக சக்திகளின் மாபெரும் மதநல்லிணக்க மனித சங்கிலி போராட்டத்தில் அனைவரும் பங்கேற்போம். அனைத்து தரப்பு மக்களையும் பங்கேற்க வைப்போம்.

தொடர்புக்கு: 9443120051



# மாவீரன் பகத்சிங் பிறந்தநாள் விழா

**மதுரை புறநகர்:** மதுரை புறநகர் மாவட்ட அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் சார்பில், கருத்தரங்கம் யா.நரசிங்கம் பகுதியில் உள்ள சமுதாயம் கூடத்தில் நடைபெற்றது. இதில் ஏ.ஐ.எஸ்.எஃப் புறநகர் மாவட்ட செயலர் சேதுபாண்டி, ஏ.ஐ.ஒய்.எஃப் புறநகர் மாவட்ட செயலர் கிருஷ்பாக்கியம் ஆகியோர் தலைமை வகித்தனர். இந்நிகழ்வில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலர் இரா.முத்தரசன், சி.பி.ஐ மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் காளிதாஸ், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் மாநில செயற்குழு உறுப்பினரும் பேராசிரியருமான சத்யபாலன் ஆகியோர் மாவீரன் பகத்சிங் உருவ படத்திற்கு மலர்கள் தூவி சிறப்புரை ஆற்றினர்.

**ஓசூர்** : கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகரம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில், இளைஞர் பெருமன்ற நகர துணைத் தலைவர் எஸ்.எஸ் மௌலா தலைமையில் மாவீரன் பகத்சிங் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. இதில் மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் நிரூபன் கொடியேற்றி வைத்தார்.

**தென் சென்னை:** அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் சார்பாக கருத்தரங்கம் தென் சென்னை மாவட்டக் குழு சார்பில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் மு.முபின் தலைமை தாங்கினார். மாணவர் பெருமன்றத்தின் முன்னாள் மாநில செயலாளர் த.லெனின், சென்னை பல்கலைக்கழகத்தின் உயிரி தொழில்நுட்பத் துறையின் தலைவர் பேராசிரியர் கி.கதிரவன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

**திருச்சி மாநகர்:** திருச்சி மேற்கு பகுதி குழு சார்பில் உறையூர் நாச்சியார் கோயில் பேருந்து நிறுத்தம் அருகில் மாவீரன் பகத்சிங் படத்திற்கு மாலை அணிவித்து மலரஞ் சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்விற்கு சிபிஐ மேற்கு பகுதி செயலாளர் சுரேஷ் முத்துசாமி தலைமை வகித்தார். இதில் சிபிஐ மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் க.சுரேஷ் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

உறையூர் ஆட்டு மந்தை தெரு பகுதியில் கிளைச் செயலாளர் ரஹீம் தலைமையில் நடைபெற்றது, இதில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் க.இப்ராகிம் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்வில் மாணவர் பெருமன்ற மாவட்ட தலைவர் பாட்ஷா கலந்து கொண்டனர். மணிகண்டம் ஒன்றிய குழு அலுவலகத்தில் நிர்வாக குழு உறுப்பினர் நிர்மலா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் எம்.ஆர். முருகன் கலந்து கொண்டு கொடியேற்றி சிறப்புரையாற்றினார். இதில் முத்துலட்சுமி, முத்தழகு, சுமித்ரா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தெப்பக்குளம் நந்தி கோயில் தெரு பகுதியில் கிழக்கு பகுதி குழுவின் சார்பில் பகுதி செயலாளர் சையது அபுதாஹிர் தலைமை நடைபெற்ற நிகழ்வில் தரைக்கடை வியாபாரிகள் சங்க மாவட்ட செயலாளர் அன்சர்தீன், கட்சி மாவட்ட குழு உறுப்பினர் சொக்கி, சண்முகம் ஆகியோர் சிறப்புரையாற்றினார். எடமலைப்பட்டி புதூர் பகுதியில் இளைஞர் பெருமன்றம் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக பகத்சிங் படத்திற்கு மாலை அணிவித்து மலர் அஞ் சலி செலுத்தப்பட்டது. நிகழ்விற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிளைச் செயலாளர் நல்லு தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் திருச்சி மாநகராட்சி 57 வது வார்டு மாமன்ற உறுப்பினர் முத்து செல்வம் கலந்து கொண்டார். மாவட்ட கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் எம்.செல்வகுமார் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் ஆர்.முருகேசன் இளைஞர் மன்ற கொடியினை ஏற்றிவைத்தார். மேலும் கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட தலைவர் எம். செல்வராஜ் சிறப்புரையாற்றி, இளைஞர் பெருமன்ற உறுப்பினர் கார்டை புதிய தோழர்களுக்கு வழங்கினார். இதில் சிபிஐ மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, ஏஐடியூசி மாவட்ட செயலாளர் க. சுரேஷ், மாவட்ட தலைவர் நடராஜன், செல்வகுமார், ராஜா, விஷ்வா, மாக்சிம் கார்கி உள்ளிட்டர் கலந்து கொண்டனர்.

**திருவாரூர்:** திருத்துறைப்பூண்டியில் மாவீரன் பகத்சிங் நினைவு தின நிகழ்ச்சி கட்டிமேடு ஊராட்சியில் நடைபெற்றது. இளைஞர் பெருமன்ற திருத்துறைப்பூண்டி ஒன்றியக்குழுவின் சார்பில் ஒன்றிய தலைவர் ஜெ.கணேஷ் தலைமையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் இளைஞர் பெருமன்ற ஒன்றிய செயலாளர் கோ.சரவணன் மற்றும் பொறுப்பாளர்கள் சுதாகர், பார்த்திபன், மாணவர் பெருமன்ற மாவட்ட தலைவர் ஜே.பி.வீரபாண்டியன், கே.சி.ஸ்ரீதர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கே.சுஜாதா, ஒன்றிய கவுன்சிலர் இந்திரா வெள்ளைச்சாமி, இளைஞர் பெருமன்ற தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு புகழ் அஞ்சலி செலுத்தினர்.

மணலி கிளையின் சார்பில் பகத்சிங் 115 வது பிறந்தநாள் நிகழ்ச்சி நடைபெற்றது.

**கன்னியாகுமரி:** கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் குமரி மாவட்ட கிளை சார்பில் மாவீரன் பகத்சிங்சின் பிறந்ததினவிழா கொண்டாடப்பட்டது. இதில் கட்சி மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திரபோஸ், சிபிஐ மாநகர செயலாளர் ஆர்.இசக்கிமுத்து, த.க.இ.பெ.ம மாநில தலைவர் சி.சொக்கலிங்கம், இந்திய தேசிய மாதர் சம்மேளனம் மாவட்ட அமைப்பாளர் ஆர்.செல்வராணி, அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் மாநிலதுணை செயலாளர் ஆர்.சுந்தரம், சிபிஐ மாவட்டக்குழுஉறுப்பினர் ஆர்.கே.ஸ்ரீகுமார், விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட அமைப்பாளர் வில்சன், த.க.இ.பெ.ம குமரி மாவட்ட பொருளாளர் ந.நாகராஜன், சிபிஐ நாகர்கோவில் மாநகர பொருளாளர் எம்.நாகராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மதுராந்தகம்:** செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தொகுதி குழு சார்பில் மெய்யூர் இந்திராநகர் கிளையில் மாவட்டத் தலைவர் கே. வி.சேகுவேராதாஸ் கொடியினை ஏற்றி வைத்தார்.

மாமண்டூர் செக்போஸ்ட் இடத்தில் கிளை தலைவர் ப.மணிகண்டன் கொடியினை ஏற்றி வைத்தார். அத்தியூர் கிளையில் கிளை தலைவர் முருகன் ஏற்றிவைத்தார். கன்னியம்மன் நகரில் ப.சூர்யா தலைமையில் பள்ளி மாணவர்களுக்கு எழுதுகோல்கள் வழங்கி உறுப்பினர் சேர்க்கை நடைபெற்று. பகத்சிங் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தொகுதி தலைவர் செ.இன்பராஜ். செயலாளர் எம்.நாகராஜ், கி.கதிர்வேல் த.ஞானசேகரன், ப.சூர்யா, மணிகண்டன் ஆகாஷ், சத்தி, வைத்திஷ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கும்பகோணம்:** கும்பகோணம் ஏஐடியூசி அலுவலகத்தில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் சார்பில் பகத்சிங் பிறந்த நாள் நிகழ்ச்சி மாவட்டத் தலைவர் ச.இலங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் க.திவான் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி, கும்பகோணம் ஒன்றிய செயலாளர் ஏ.ஜி.பாலன், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் வக்கீல் ஐ.ஜார்ஜ், கட்சியின் நிர்வாகிகள் ஏ.ராஜேந்திரன், க.சுந்தரராஜன், சி.இராயப்பன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**திருப்பூர்:** அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் அவினாசி ஒன்றிய குழுவின் சார்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அவிநாசி ஒன்றிய அலுவலகத்தில் இளைஞர் பெருமன்ற ஒன்றியச் செயலாளர் இரா.முத்துச்சாமி தலைமையில் இளைஞர் பெருமன்ற கொடியை ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.ஷேக்ஸ்பியர் ஏற்றி வைத்தார். சிபிஐ ஒன்றிய செயலாளர் ஏ.ஜி.சண்முகம் பகத்சிங்கின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினார்.

உடுமலைப்பேட்டை நகரில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் அலுவலகத்தில் பகத் சிங் பிறந்த நாள் விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கட்சி தாலுகா கமிட்டி செயலாளர்வி.சௌந்தரராஜன், மாவட்டகுழு உறுப்பினர் ரணதேவ் மற்றும் முருகன், அப்பாதுரை மற்றும் இளஞர்பெருமன்ற தோழர்கள் கலந்து கொண்டனர்.

**வெண்ணந்தூர் :** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெண்ணந்தூர் ஒன்றிய குழு சார்பில், ஒன்றிய செயலாளர் பி.ஆர். செங்கோட்டுவேல், மூத்த தோழர்கள் எம்.ஏ.பி.ஜெயபால், வி.கோவிந்தசாமி ஆகியோர் பகத்சிங் படத்திற்கு மாலை அணிவித்தனர்.

# வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன் மணிவிழா பொதுக்கூட்டம்




மதுரை அண்ணாநகரில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் மணிவிழா மற்றும் சனாதன சக்திகளை தனிமைப் படுத்துவோம் எனும் தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் முத்தரசன், பத்திரப் பதிவு துறை மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் மூர்த்தி, எம்.பி.க்கள் வெங்கடேசன், நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, மதுரை மேயர் இந்திராணி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் இரா. முத்தரசன் கூறும் போது, சனாதன தர்மத்துக்கு எதிராக பேசினால் இந்துக்களுக்கு எதிராக பேசுவதாக மதவாத சக்திகள் திரித்து பிரச்னையை உருவாக்கி வருகின்றன. மனு தர்மம் தொடர்பாக ஆ.ராசா பேசியது திரித்து கூறப்பட்டுள்ளது. மனு தர்மம் குறித்து ஆ.ராசா பேசியதில் தவறில்லை, ஆ.ராசா பேசியதை நான் வழிமொழிகிறேன்.

சனாதனம் குறித்து பேச கூடாது என்கிறீர்கள். “மனு தர்மத்தில் உள்ளதை தான் சொல்கிறோம், அது எங்களுடைய கற்பனை அல்ல; சனாதனத்துக்கு ஆதரவாக கவர்னர் ரவி பேசிக் கொண்டிருக்கிறார். கவர்னருக்கு என்று சில பணிகள் இருக்கின்றன. அதை மட்டும் செய்யுங்கள், மக்களை மத ரீதியாகவும், ஜாதி ரீதியாகவும் பிளவுபடுத்தி ஆர்.எஸ்.எஸ் அமைப்பு குளிர் காயத் திட்டமிடுகிறது என்றார்.

நிகழ்ச்சியில் தொல்.திருமாவளவன் குறித்த புத்தகத்தை ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, அமைச்சர் பி.மூர்த்தி, எம்.பி.க்கள் வெங்கடேசன், நவாஸ்கனி ஆகியோர் வெளியிட்டனர்.

## இந்த வார தம்பிக்குறள்


### 90. தன்னையறிதல்

**உன்னையே நீயெண்ணிப் பாரு உலகுக்கு**
**தன்னாலே ஆனதைத் தா**

முதலில் நாம் நம் தகுதி, ஆற்றல், நிலை முதலியவற்றை உணர்ந்து அறிய வேண்டும். பிறகு அதற்கேற்ப நம்மால் முடிந்த நன்மைகளை உலகமக்களுக்குச் செய்தல் வேண்டும்.

**தன்சக்தி தானறிவான் யாரோ அவனேஎ**
**தானறிந்தா னாவான் சகத்து**

தன்னை முதலில் ஆய்ந்து, தன்வலிமையை உணர்ந்து கொள்பவன் எனவோ அவனே தன்னையறிந் தின்புறுபவன் ஆவான்.



# ஒகேனக்கல் உபரிநீரை ஏரிகளில் நிரப்புக!

## தருமபுரி மாவட்ட விவசாயிகள் சங்கம் தீர்மானம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தருமபுரி மாவட்டக்குழு கூட்டம் தருமபுரியில் நடைபெற்றது. இச்சங்கத்தின் மாவட்ட தலைவர் விடுதலைவிரும்பி தலைமை வகித்தார்.மாவட்ட செயலாளர் எஸ்.சின்னசாமி வேலை அறிக்கை வைத்து பேசினார்.மாநில துணை செயலாளர் த.இந்திரஜித் தேசியக்குழு மற்றும் மாநிலக்குழு முடிவுகள் குறித்து விளக்கி பேசினார்.இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்எஸ்.தேவராசன், மாவட்ட செயலாளர்எஸ். கலைச்செல்வம், மாநிலக்குழுஉறுப்பினர்.கா.சி.தமிழ்க்குமரன் ஆகியோர் கோரிக்கைகள் குறித்து பேசினார்கள்.

கூட்டத்தில் ஒகேனக்கல் உபரிநீரை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளுக்கும் கால்வாய் மூலம் கொண்டு வந்து விவசாயத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய நிலங்களில் பவர்கிரீட் மூலம் உயர் கோபுர மின் டவர் அமைக்க நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு ரூ.50 லட்சம் வட்டியுடன் இழப்பீடு வழங்க வேண்டும்.மேலும் விவசாய நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள மின் டவருக்கு மாத வாடகையாக ரூ.25 ஆயிரம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# விவசாய தொழிலாளர்களுக்கு தீபாவளி போனஸ் ரூ.5000வழங்குக!

## த.வி.தொ.ச. வட்ட மாநாடு தீர்மானம்

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் தேவர் திருமண மண்டபத்தில், தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க சாத்தூர் வட்ட மாநாடு நடைபெற்றது. வட்ட செயலாளர் சாமிநாதன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் வரதராஜன், தவ்வாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், திருச்சுழி ஒன்றிய செயலாளர் செல்வம், நகர செயலாளர் ஜான்ராஜா, எஸ்.எஸ்.முத்து ,தவிச சண்முகையா ஆகியோர் பேசினார்கள். மாநாட்டில் தலைவராக சகாதேவன், துணை தலைவராக சண்முகம், செயலாளராக ஊத்துபட்டி கிருஷ்ணசாமி, துணை செயலாளராக ரத்தினகுமார், பொருளாளராக பாண்டி ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். தீபாவளி போனசாக ரூ.5000 வழங்கு, ஓய்வூதியம் மாதம் ரூ.3000 வழங்கு, வீடற்றவர்களுக்கு வீட்டுமனை வழங்கு உள்ளிட்ட தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டன.

# துப்புரவு தொழிலாளர்கள் நாமம் போட்டு ஆர்ப்பாட்டம்

அரியலூர் நகராட்சியில் பொது சுகாதாரப் பணியாற்றும் நூற்றுக்கு மேற்பட்ட நிரந்தர மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் கோரிக்கைகள் மீது சென்ற ஆண்டு ஜூலை மாதம் திருச்சியில் தமிழக அரசின் தொழிலாளர் துணை ஆணையர் தனபாலன் முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தையில் ஒப்புக்கொண்ட கோரிக்கைகளை ஓராண்டு முடிந்தும் சிறிதளவு கூட நிறைவேற்றிட நகராட்சி நிர்வாகம் அக்கறை காட்டவில்லை. இதனைக் கண்டித்து அரியலூர் நகராட்சி புதிய அலுவலகம் முன்பு சுகாதாரத் தொழிலாளர்கள் நாமம் போட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்திற்கு சங்க செயலாளர் எஸ் மாரியப்பன் தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியுசி உள்ளாட்சித் துறை பணியாளர் சம்மேளன மாநில செயலாளரும் மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளருமான டி தண்டபாணி கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.அரியலூர் நகராட்சி அலுவலகம் முன்பு துப்புரவு தொழிலாளர்கள் நாமம் போட்டு ஆர்ப்பாட்டம்

# பாதாள சாக்கடை கிணறுகள் முறையாக பராமரிக்க வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆணையரிடம் மனு

பாதாள சாக்கடை கிணறுகளை புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்தை போர்க்கால அடிப்படையில் நடைமுறைப்படுத்த கோரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை வடக்கு மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி தலைமையில் கும்பகோணம் மாநகராட்சி ஆணையரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இதில் முன்னணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

மனுவில் கூறியிருப்பதாவது: கும்பகோணம் மாநகராட்சி பகுதிகளில் பல இடங்களில் பாதாள சாக்கடை கிணறுகள் நிரம்பி தெருக்களில் வழிந்து ஓடும் நிலை உள்ளது. இதனால் துர்நாற்றம் வீசுவதோடு, நோய் தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் அளிக்கும் புகார்களின் அடிப்படையில் தற்காலிகமாக தீர்வு காணப்படுகிறது. கடந்த ஆட்சி காலத்தில் பாதாள சாக்கடை கிணறுகளை தனியார் நிறுவனம் மூலம் சீரமைப்பதற்காக லட்சக்கணக்கில் மக்கள் வரிப்பணம் செலவிடப்பட்டுள்ளது. ஆனால் பணிகள் முறையாக நடைபெறாத காரணத்தினால் தற்போதும் பிரச்சனைகள் தொடர்கிறது. பிரதான சாலைகளில் உள்ள மேன்ஹோல்கள் சாலையை விட உயரமாக அமைக்கப்பட்டிருப்பதால் விபத்துகள் ஏற்படுகின்றன. இதை சரி செய்ய வேண்டும். சில மாதங்களில் மழைக்காலம் தொடங்க உள்ள நிலையில் பாதாள சாக்கடை கிணறுகளை புணரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்தை போர்க்கால அடிப்படையில் நடைமுறை வேண்டும். பராமரிப்பு பணிகளை தனியார் நிறுவனங்களிடம் வழங்காமல் மாநகராட்சி பணியாளர்கள் மூலம் நேரடியாக செய்ய வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

# வர்க்கப் போராளி தோழர் பி.சீனிவாசராவ் 61வது நினைவு தினம்



வர்க்கப் போராளி தோழர் பி.சீனிவாசராவ் அவர்களின் 61 வது நினைவு தினம் தமிழகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டது.

**விருதுநகர்:** வத்திராயிருப்பில் சிபிஐ மாநில செயற்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வட்ட செயலாளர் கோவிந்தன், தவிச மாவட்ட செயலாளர் சவுந்திரபாண்டியன், துணை செயலாளர் மகாலிங்கம் உள்ளிட்டோரும், செட்டியார்பட்டியில் சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி, தவிச அய்யனன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டார்கள் விருதுநகரில் சிபிஐ மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், தவிதொச மாநில குழு உறுப்பினர் முத்துககுமார், ஒன்றிய செயலாளர் சக்கணன், மாதர்சங்க மாவட்ட செயலாளர் மாரீஸ்வரி, ஏஐடியுசி பாண்டியன் உள்ளிட்டோரும், திருச்சுழி வட்டம் பண்ணைமூன்றடைப்பில் தவிதொச மாநில நிர்வாகக்குழு உறுப்பிரும் மாவட்ட செயலாளருமான வரதராஜன் , சிபிஐ ஒன்றிய செயலாளர் செல்வம், கிளை செயலாளர் மருதுபாண்டியன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டார்கள். மற்றும் மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் நடைபெற்றது.

**தஞ்சாவூர்** : தஞ்சாவூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் முத்துஉத்திராபதி தலைமையில் சீனிவாசராவ் நினைவு தின கூட்டம் நடைபெற்றது. நிகழ்வில் மூத்த தலைவர் ஜி.கிருஷ்ணன், மாநகர செயலாளர் ஆர். பிரபாகர், மாவட்ட பொருளாளர் ந.பாலசுப்பிரமணியன், ஒன்றிய செயலாளர் ஜார்ஜ் துரை, ராமலிங்கம், தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட தலைவர் வீர.மோகன், ஏஐடியூசி மாநிலச் செயலாளர் சி. சந்திரகுமார், மாவட்ட தலைவர் வெ.சேவையா, மாவட்ட பொருளாளர் தி.கோவிந்தராஜன், அரசு போக்குவரத்து சம்மேளன துணைத் தலைவர் துரை. மதிவாணன், நுகர்பொருள் வாணிப கழக சங்க மாவட்ட பொருளாளர் எஸ்.தியாகராஜன், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாவட்டத் தலைவர் மருத்துவர் ச.சுதந்திர பாரதி, பி.செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மணப்பாறை:** திருச்சி பெரிய மிளகுபாறையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் சீனிவாசராவ் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வுக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மாவட்ட செயலாளர் அயிலை சிவசூரியன் தலைமை வகித்தார். சங்கத்தின் மாநில துணை செயலாளர் த.இந்திரஜித், வி.தொ.ச. மாவட்ட செயலாளர் பி.கனேசன், சி.பி.ஐ.புறநகர் மாவட்ட செயலாளர் எஸ்.ராஜ்குமார், மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, நிர்வாக குழு உறுப்பினர்கள் எஸ்.செல்வராஜ், கட்டுமான சங்க மாவட்ட செயலாளர் எம்.ஆர்.முருகன், ஏ.கே.திராவிடமணி உள்ளிட்ட பலர் கலந்து கொன்டு பி.சீனிவாசராவ் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர்.

**மதுரை:** மதுரை புறநகர் திருப்பரங்குன்றம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில், சீனிவாச ராவ் நினைவு தினத்தை முன்னிட்டு, வீரவணக்கம் செலுத்தி அவரின் உருவப்படத்திற்கு மலர்கள் தூவி மரியாதை செலுத்தினர்.

**சோழவந்தான்:** மதுரை மாவட்டம், சோழவந்தான் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கங்கள் சார்பில், பி.சீனிவாசராவ் நினைவேந்தல் தெருமுனை கூட்டம் த.வி.ச வாடிப்பட்டி ஒன்றிய செயலாளர் பி.தவமணி தலைமையிலும், வி.தொ.ச மாவட்ட குழு விருமாண்டி முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சி.பி.ஐ புறநகர் மாவட்ட செயலர் முத்துவேல், எஸ்.கே.எம் மதுரை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சந்தனம், வி.தொ.ச மாவட்ட செயலாளர் ஜோதி ராமலிங்கம், சி.பி.ஐ வாடிப்பட்டி ஒன்றிய செயலர் சுதாகர், வி.தொ.ச மாவட்ட குழு பெத்தனசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**செங்கல்பட்டு:** செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஒன்றியம் மெய்யூர் கிளையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் பி.சீனிவாசராவ் நினைவு தினம் கடைபிடிக்கப்பட்டது. கிளை செயலாளர் செ.இன்பராஜ் தலைமை தாங்கினார். எம்.நாகரா, ப.மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட குழு உறுப்பினர் கேவி.சேகுவேராதாஸ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சீனிவாசராவ் வாழ்க்கை வரலாறை எடுத்துரைத்தார். கு.அய்யனார் நன்றி கூறினார்.

**கன்னியாகுமரி:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கன்னியாகுமரி மாவட்ட குழு சார்பில் பி.சீனிவாசராவ் நினைவேந்தல் கூட்டம் அண்ணா விளையாட்டரங்கம் அருகில் உள்ள ஜீவா சிலைமுன்பு நடைபெற்றது. கூட்டத்திற்கு சிபிஐ மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் தலைமை தாங்கினார். தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற தமிழக ஆளுமைகள் சி.சொக்கலிங்கம், எஸ்.கே.கங்கா ஆகியோர் நினைவுரை ஆற்றினர்.வடக்கு தாமரைகுளம் முன்னாள் பஞ்சாயத்து தலைவர் வி.அருணாசலம் மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினார்.

**தருமபுரி:** பி.சீனிவாசராவ் நினைவுதின கருத்தரங்கம் தருமபுரியில் வி.தொ.ச. மாவட்ட தலைவர் ஜி.மாதையன் தலைமையில் நடைபெற்றது. சங்க மாவட்ட துணைச் செயலாளர் ஜி.பச்சாகவுண்டர் வரவேற்றார். சங்க மாவட்ட செயலாளர் ஜெ. பிரதாபன் கருத்துரை வழங்கினார். சங்க மாவட்ட துணைத்தலைவர்கள் ஜி.ராஜகோபால், என். முருகேசன், மாவட்ட நிர்வாகக்குழுஉறுப்பினர் வெ.பை.மாதையன் மற்றும் சங்க முன்னணி தோழர்கள் திரளாக கலந்துக் கொண்டார். சங்க நல்லம்பள்ளி ஒன்றிய தலைவர் எல்.சி.கிருஷ்ணன் நன்றி கூறினார். முன்னதாக தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பு பி.சீனிவாசராவ் படத்திற்கு அஞ்சலி தெரிவிக்கப்பட்டது.

**கரூர்:** தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் கரூர் மாவட்டக்கழு சார்பில் கரூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள காமராஜர் சிலை அருகில் பி.சீனிவாசராவ் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி மாவட்டத் தலைவர் பி.பாலன் தலைமையில் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கரூர் மாவட்ட செயலாளர் கே.என்.நாட்ராயன் , சங்கத்தின் கரூர் மாவட்ட செயலாளர் ஆர்.தங்கவேல் ஆகியோர் சீனிவாசராவ் குறித்து நினைவு கூர்ந்து பேசினர்.

சிபிஐ முன்னாள் மாவட்ட செயலாளர் எம்.ரத்தினம், மாவட்ட துணைச் செயலாளர்கள் கே.சண்முகம், எஸ்.மோகன்குமார், மாவட்ட பொருளாளர் ஆர்.ராஜேந்திரன், சங்கத்தின் கிருஷ்ணராயபுரம் ஒன்றிய தலைவர் பி.மாணிக்கம், பரமத்தி ஒன்றிய செயலாளர் ஆர்.குப்புசாமி மாவட்ட குழு உறுப்பினர் பி.சரஸ்வதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மயிலாடுதுறை:** வைத்தீஸ்வரன் கோயிலில் விவசாயிகள் விவசாய தொழிலாளர்கள் சார்பில் பி.சீனிவாச ராவ் நினைவு தினம் வைத்தீஸ்வரன் கோவிலில் கடைபிடிக்கப்பட்டது. வி.தொ.ச. மாவட்ட தலைவர் வே. நீதி சோழன் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, சிபிஐ மாவட்டச் செயலாளர் அ. சீனிவாசன், வி.ச.மாவட்டச் செயலாளர் பெ. வீரராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இதில் 500க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

# சிபிஐ சிவகாசி வட்ட துணை செயலாளர் தாயார் மறைவு

விருதுநகர் மாவட்டம் சிவகாசி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் துணை செயலாளர் கலைவாசன் தாயார் சீனியம்மாள் (87) வயது மூப்பின் காரணமாக மீனம்பட்டியில் மறைந்தார் .தகவலறிந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, தவ்வாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், ஏஐடியுசி மாவட்ட தலைவர் சமுத்திரம், வட்ட செயலாளர் ஜீவா உள்ளிட்டோர் நேரில் சென்று அவரது உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார்.

# கட்டட தொழிலாளர் சங்க மாவட்ட மாநாடுகள்




**வேலூர்:** தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் வேலூர் மாவட்ட மாநாடு அம்மூர் திருமண மண்டபத்தில் தேவதாஸ் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியை மேஸ்திரி ருக்மாங்கதன் ஏற்றினார்.

குணசேகரன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். சாம்பசிவம் வரவேற்புரை ஆற்றினார். மாநில செயலாளர் திண்டுக்கல் பாலன் மாநாட்டை தொடங்கி வைத்தார். மாநில பொதுச்செயலாளர் கே. இரவி, சிபிஐ மாவட்ட செயலாளர் ஜி.லதா, ஏஐடியுசி ஆட்டோ சங்க மாவட்ட செயலாளர் சிம்புதேவன், வாழ்த்துரை வழங்கினர். எம். எஸ். மாதேஸ்வரன் நிறைவுரை ஆற்றினார்.

மாவட்ட தலைவராக சாம்பசிவம், பொதுச் செயலாளராக சங்கர் மேஸ்திரி, பொருளாளராக தீபா ஆகியோர் உள்ளிட்ட 19 நிர்வாகிகள் மாநாட்டில் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள்.

**தருமபுரி:** தமிழ்நாடு ஏஐடியூசி தருமபுரி மாவட்ட கட்டட தொழிலாளர் சங்கத்தின் 7வது மாவட்ட மாநாடு தருமபுரியில் நடைபெற்றது.

மாநாட்டிற்கு மாவட்ட தலைவர் குழந்தைவேலு தலைமை வகித்தார்.நிர்வாகிகள் சண்முகம்,முத்தம்மாள்,பெருமா,தாமோதரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மாவட்டக்குழு உறுப்பினர் ராஜு கொடி ஏற்றினார்.

மாநிலக்குழு உறுப்பினர் முனுசாமி வரவேற்றார். மாவட்ட துணை செயலாளர் மாதையன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார்.கட்டட சங்க மாநில துணை பொது செயலாளர் என்.செல்வராஜ் கோரிக்கைகள் குறித்து விளக்கி பேசினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.தேவராசன்,மாநிலக்குழு உறுப்பினர் கா.சி.தமிழ்க்குமரன்,ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி,மாவட்ட தலைவர் எம்.மாதேஸ்வரன்,உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட தலைவர் மனோகரன்,ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். மாவட்ட செயலாளர் ஆர்.சுதர்சனன் வேலை அறிக்கை வைத்தார்.மாவட்ட பொருளாளர் விஜயா வரவுசெலவு சமர்பித்தார்.

மாநாட்டில் தருமபுரி மாவட்டத்தில் மணல் கிடங்கு அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் கௌரவத் தலைவராக ஆர்.சுதர்சனன், மாவட்ட செயலாளராக ஏ.சி.மணி, மாவட்ட தலைவராக எம்.வி.குழந்தைவேலு, மாவட்ட பொருளாளராக விஜயா, மாவட்ட துணை செயலாளராக முனுசாமி, மாவட்ட துணை தலைவராக ஏ.முருகேசன் ஆகியோர் நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

புளியரண்டபட்டியில்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கிளை துவக்கம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை மத்தூர் ஒன்றியம் புளியரண்டபட்டியில் துவக்கப்பட்டது. கூட்டத்திற்கு நந்திஸ் தலைமை தாங்கினார். கூட்டத்தில் இன்றைய அரசியல் நிலை குறித்தும், கட்சியின் திட்டம், கொள்கைகள் குறித்தும் மாநில குழு உறுப்பினர் எஸ். கண்ணு விளக்கி பேசினார்.

கூட்டத்தில் பர்கூர் வட்டக் குழு உறுப்பினர் கமலேஷ், போச்சம்பள்ளி வட்ட குழு உறுப்பினர் சித்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் செயலாளராக சந்துரு, துணை செயலாளராக மைக்கேல், பொருளாளராக வல்லரசு ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருப்பத்தூரில் இருந்து மத்தூர் ஒட்டப்பட்டி புளியரண்டபட்டி வழியாக கொடமாண்டபட்டிக்கு சென்று கொண்டிருந்தது பேருந்து நிறுத்தப்பட்டு விட்டது. இந்த பேருந்தை மாணவர்கள் வசதிக்காக காலை 8 மணிக்கும் மாலை 5 மணிக்கும் மீண்டும் இயக்க வேண்டும். இளைஞர்கள் விளையாடுவதற்காக கைப்பந்து மைதானம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குணா நன்றி கூறினார்.

பாஞ்சாகுளம் கிராமத்திற்கு

## சிபிஐ சமாதானக்குழு சென்றது

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் அருகே உள்ள பாஞ்சாகுளம் கிராமத்தில், பட்டியலின பள்ளிக் குழந்தைகளுக்கு ஊர் கட்டுப்பாடு இருப்பதாக கூறி, கடையில் தின்பண்டம் தர மறுத்த கடைக்காரர் அதை வீடியோ எடுத்து, சமூக ஊடகத்தில் பதிவிட்ட விவகாரம் பேசும் பொருளானது.

இது தொடர்பாக கலவரப் பகுதியாக மாறும் சூழ்நிலை ஏற்பட்டதை அறிந்த தென்காசி மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் எஸ்.காசிவிஸ்வநாதன், ஏஐடியூசி மாநிலச் செயலாளர் தி. இசக்கித்துரை, சிபிஐ மாவட்ட செயலாளர் ஜி.சுப்பையா, ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் வேலாயுதம், சிபிஐ முன்னாள் மாநில குழு உறுப்பினர் கே.பாலசுப்பிரமணியன், கனகராஜ், முருகன், பழனிமுருகன் சென்று இரு தரப்பினருடன் சமாதான பேச்சுவார்த்தை நடத்தினர்.

# பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துக; குறைந்த பட்ச ஓய்வூதியம் ரூ.10,000ம் வழங்குக

சர்வதேச ஓய்வூதியர் பாதுகாப்பு நாளில் ஏஐடியூசி கோரிக்கை!

*அக்டோபர் 1 உலகம் முழுவதும் ஓய்வூதியர்கள் பாதுகாப்பு தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் மத்திய, மாநில பொதுத்துறை நிறுவனங்களில் வயது மூப்பின் காரணமாக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள் பல்வேறு வகையான ஓய்வூதியத்தை பெற்ற வருகின்றனர். ஒரே சீரான ஓய்வூதியம் என்பது அனைத்து துறை ஓய்வூதியர்களுக்கும் கிடையாது. மத்திய, மாநில அரசுத்துறை ஊழியர்களுக்கு ஒரு வகையான ஓய்வூதியமும், பொதுத்துறை ஊழியர்களுக்கு ஒரு மாதிரியாகவும் ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருகிறது. இவர்கள் பெற்று வரும் ஓய்வூதியம் என்பது குடும்பத் தேவைகளுக்கும் அல்லாது ஒரு சமூக மரியாதையையும், சமூக பாதுகாப்பையும் பெற்று தருகிறது. இந்நிலையில் தற்போதுள்ள கார்ப்பரேட் உலகமயத்தின் உலக வங்கியின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து மத்திய, மாநில அரசுகள் ஓய்வூதிய திட்டங்களையும் அதன் பலன்கள் உள்ளிட்ட அனைத்தையும் பறிக்கும் நடவடிக்கைகளில் செயல்பட்டு வருகிறது.*

*இதனைக் கண்டித்து தஞ்சாவூர் ரெயிலடி முன்பு நடைபெற்ற ஓய்வூதியர் பாதுகாப்பு நாள் உறுதி ஏற்பு நிகழ்ச்சிக்கு ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம் தலைமை வகித்தார். மாநிலச் செயலாளர் சி.சந்திரகுமார் சிறப்புரையாற்றினார். வங்கி ஊழியர்கள் சங்க மாவட்ட பொதுச் செயலாளர் க. அன்பழகன், மின்வாரிய சங்க மாநில துணைத்தலைவர் பொன்.தங்கவேல், அரசு போக்குவரத்து சம்மேளன மாநிலத் துணைத் தலைவர் துரை, மதிவாணன், நுகர்பொருள் வாணிபக் கழக சங்க மாநில பொருளாளர் தி.கோவிந்தராஜன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.*

# உலக கேரம் போட்டி

வடசென்னை மாவட்டம் பெரம்பூர் தொகுதி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 37 வது வட்ட ஏ கிளை செயலாளர் எஸ்.காத்தவராயன் அவர்களின் மகள் கே.நாகஜோதி கேரம் விளையாட்டில் சிறப்பான தமிழக வீரர் ஆவார். மலேசியா நாட்டில் நடைபெறும் உலக சாம்பியன் போட்டியில் கலந்து கொள்ள மலேசியா புறப்பட்டு செல்ல உள்ளார். கேரம் விளையாட்டில் வெற்றி பெற வாழ்த்துக் கூறி வழி அனுப்பிட, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் டி.கே.வெங்கடேஷ் தலைமையில் மாவட்ட குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.மூர்த்தி, ஆர். பாளையம் ஜி.சுப்பிரமணி, எம்.ஜெய்சங்கர் ஆகியோர் வாழ்த்தி, செவ்வாடை அணிவித்து ரூ. 5000 அளித்து வழி அனுப்பினர்.

# உலக சுற்றுச் சூழல் தின மர கன்றுகள் நடும் விழா

அண்ணாமலைப் பல்கலைக் கழக இளையோர் செஞ் சிலுவை சங்கம் சார்பில் உலக சுற்றுச் சூழல் தின மரம் நடும் விழா முல்லை இல்லத்தில் நடைபெற்றது. முனைவர். ஆ.பாலமுருகன், இளையோர் செஞ்சிலுவை சங்கம் திட்ட அலுவலர் வரவேற்புரை வழங்கினார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழக இளையோர் செஞ்சிலுவை சங்கம் மண்டல ஒருகிங்கிணைப்பாளர் முனைவர் தி.ராஜ்பிரவின் துவக்க உரையாற்றினார். முனைவர் வி.நடன சபாபதி தலைமை உரையாற்றினார்.

இவ் விழாவில் முல்லை இல்ல துணை கண்காணிப்பாளர் முனைவர். கா. அறிவுக்கரசு வாழ்த்துரை வழங்கினார். பின்னர் முல்லை இல்ல மாணவ பிரதிநிதிகள், இளையோர் செஞ் சிலுவை சங்கம் தன்னார்வ தொண்டர்கள், முல்லை இல்லம் தனி அதிகாரிகள், அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டு, மர கன்றுகளை நடவு செய்தனர். இறுதியாக திட்ட அலுவலர் முனைவர். ஐ.ரவி நன்றி தெரிவிக்க விழா இனிதே நிறைவு பெற்றது.

# கல்லுடைக்கும் தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.6000 பென்ஷன் வழங்குக!

ஏஐடியூசி மாநாட்டில் தீர்மானம்

கோவை மாவட்ட கிரஷர் கல் உடைக்கும் மற்றும் லாரி தொழிலாளர் சங்க பேரவை கூட்டம் கடந்த அக். 2 அன்று மதுக்கரை அருகே உள்ள குரும்பபாளையம் தங்கராஜ் இல்லத்தில் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு ஏஐடியூசி மாநில செயலாளர் எம். ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ., கோவை ஜில்லா பஞ்சாலை தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் சி.கோயமுத்தூர் ஏ.ஐ.டி.யூ.சி., கவுன்சில் செயலாளர் சி.தங்கவேல் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

இந்த பேரவை கூட்டத்தில் கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு அவர்கள் ஓய்வு பெறும் வயதில் மாதம் ரூ.6000 பென்ஷன் வழங்க வேண்டும், இஎஸ்ஐபிஎப் வசதிகள் செய்து தர வேண்டும், ஓய்வூதியம் பெறும் தொழிலாளர்கள் மரணமடைந்தால் ரூ.50,000 நிதி வழங்க வேண்டும், கல் உடைக்கும் மற்றும் கிரசர் தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்வி செலவு முழுவதையும் அரசே ஏற்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்கத்தின் தலைவராக கே.சுமதி, துணைத் தலைவர்களாக வி.ஆர்.பாண்டியன், கே.வெங்கடாசலம், ஏ.வெங்கடாசலம் ஆகியோரும், பொதுச் செயலாளராக கே.ஆர்.தங்கராஜும், செயலாளர்களாக என்.சந்திரன், ஆர்.சுந்தர்ராஜ், சி.ஜீவா ஆகியோரும், பொருளாளராக சி.சிவசாமியும், சட்ட ஆலோசராக ஜி.பி.சக்திவேலும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

# தஞ்சாவூர் கீழ ராஜவீதி சாக்கடை நீர் தெருக்களில் ஓடுவதை சரி செய்க!


இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை!

தஞ்சாவூர் மாநகரத்தில் மேல ராஜவீதி, கீழராஜவீதி, வடக்குவீதி, தெற்குவீதி என மாநகரத்தில் பிரதான 4 வீதிகளிலும் தஞ்சாவூர் மாநகராட்சி நிர்வாகம் ஆக்கிரமிப்புகளை அகற்றி வெகு துரித நடவடிக்கைகளை எடுத்து வந்தது. ஆனால் தெருக்களின் இருபுறமும் ஓரங்களில் சாக்கடை வடிகால் சரிவர சீர் செய்யப்படாமல் அப்படியே போடப்பட்டது. மழைக்காலம் வருவதற்குள் இந்த சாக்கடை வடிகால் பணிகளை துரிதமாக முடிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பலமுறை மாநகராட்சி நிர்வாகத்திற்கு கோரிக்கை அளிக்கப்பட்டது. தற்போது பருவ மழை முன்கூட்டியே பெய்து வருவதால் மழைநீர் சாக்கடை நீருடன் கலந்து தெருக்களில் தான் ஓடுகிறது. தற்போது தஞ்சை மாநகரத்தில் டெங்கு காய்ச்சல், புளு காய்ச்சல், மலேரியா காய்ச்சல், மர்ம காய்ச்சல், இன்புளுயன்சா காய்ச்சல் என பலவகையான காய்ச்சல்கள் அதிகமாக பரவி வருகின்றன.

உடனடியாக கீழ ராஜவீதி மட்டுமல்லாது மற்ற வீதிகளிலும் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு சாக்கடை வடிகால்களை போர்க்கால அடிப்படையில் துரிதமாக முடித்திட மாவட்ட, மாநகராட்சி நிர்வாகத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது என்று மாநகரச் செயலாளர் ஆர்.பிரபாகர் தெரி வித்துள்ளார்.

# நூல் நயம்

## அறியப்படாத இந்துமதம்




இன்று இந்தியாவில் வாழும் பெருவாரியான மக்கள். தங்களை இந்து மதத்தவர் என நினைத்துக் கொள்கின்றனர். ஆனால் இந்துமதம் என்பது இன்றைய கட்டமைப்பு போன்று பழங்காலம் முதல் இருந்ததா என்கிற கேள்வி ஏறுகிறது. எனவே இந்து மதம் குறித்து அறியப்படாத செய்திகளை, செயல்களை மக்கள் அறிந்துகொள்ள இந்நூலை செ. தி. ஞானகுரு எழுதியுள்ளார்.

இந்தியாவில் தோன்றிய பழமையான மதங்களான சாங்கியம்,சார்வாகம் , நியாயம்,யோகம், வைசேடிகம், சமணம், பௌத்தம், ஆசீவகம் அனைத்தும் அறத்துடன் வாழும் வாழ்க்கை கோட்பாடு அடிப்படையில் அமைந்தவையே.

வெளியிலிருந்து உள்நுழைந்து வேள்விகள் வழி தங்களை அந்நியப்படுத்திக் கொண்ட ஆரியர்கள். இம்மண்ணிற்கு பொருத்தமில்லாத வைதிக கோட்பாடுகளை முன்மொழிந்தனர். அவற்றை வேதங்கள் மொழிந்ததாகவும் சொல்லி வைத்தனர். இதன் வழியாக பார்ப்பனர்கள் தலைமைப் பீடத்திற்கு வந்தனர்.


தங்களை இந்துவாக எண்ணாத அவர்ணர்களை வேற்று மனிதர்,வேற்று மதத்தினர்,எதிரிகள் என்றும்.அவர்கள் மனிதர்களே அல்ல என்றும் பக்கம் பக்கமாக பல சாஸ்திரங்களில் பதிந்து வைத்துள்ளனர் வைதீக மதத்தினர்.

இவை எதுவும் தெரியாத அவர்ணர்கள் தங்களை இந்துவாக எண்ணி பெருமை பட்டுக் கொள்கின்றனர். என்ன கொடுமை பாருங்கள், எந்த மதத்தின் பெயரால் நம்மை இழிவு படுத்துகிறனோ, அந்த மதக் கோட்பாடுகளை அறியாமலேயே நாம் அந்த மதத்தில் இருந்து கொண்டிருக்கிறோம் என்பது எவ்வளவு பெரிய சோகம்?.

தங்களை இந்து என்று கூறிக் கொள்பவர்களை . இந்துமதம் எவ்வாறெல்லாம் இழிவுபடுத்துகிறது என்பதை இந்நூலின் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகிறது . தற்போது நாட்டை சூறையாட நினைக்கும் இந்துத்துவாவிற்கு எதிராக நாம் போராடுவதற்கு. 'அறியப்படாத இந்துமதம் ' நூல் ஒரு சிறந்த ஆயுதமாக விளங்கும். அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம். – சமரன்

நூலாசிரியர் : செ.தி. ஞானகுரு
பக்கம் : 278 விலை: 350
வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41–பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 50

## தமிழ்நாட்டின் மூன்றடுக்கு புதிய பஞ்சாயத்து அரசாங்கம்




இந்தியாவில் இருக்கும் மத்திய, மாநில அரசாங்கத்தை போன்று, உள்ளூர் மக்கள் தங்களை தாங்களே ஆட்சி செய்து கொள்வதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு முறையே பஞ் சாயத்து முறையாகும். இதை பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி அவர்கள் மூன்று அடுக்கு முறையாக உருவாக்கினார்.

இந்த மூன்றடுக்கு பஞ்சாயத்து முறையை மக்கள் எளிதாக புரிந்து கொள்ளவும், இந்தப் பஞ் சாயத்து முறையை பயன்படுத்திக் கொள்ளவும், தமிழ்நாட்டில் மூன்றடுக்கு புதிய பஞ்சாயத்து அரசாங்கம் என்கிற இந்நூலை க. பழனித்துரை அவர்கள் எழுதி உள்ளார்.

பஞ்சாயத்துகளை வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை. பல்வேறு நிலைகளில் எடுக்கப்படவேண்டும். மத்திய அரசாங்கம்,மாநில அரசாங்கம்,ஊடகங்கள், அறிவுசார் பல்கலைக்கழகங்கள்,பயிற்சி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், இவை அனைத்தையும் தாண்டிய பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் முனைப்புடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் .

இந்திய அரசியல் சாசனத்தை திருத்தி அமைத்து, 73 வது மற்றும் 74 வது சட்டத் திருத்தங்கள் மூலம் உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்கி, இவைகளின் மூலம் இந்திய ஆட்சி கட்டிலுக்கு 30 லட்சம் மக்கள் பிரதிகளை தேர்தல் மூலம் கொண்டுவந்து உலகை பிரமிப்பில் ஆழ்த்தினர். இந்தியாவில் ஏறத்தாழ 6500 மக்கள் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தின் மூலமும், சட்டமன்றத்தில் மூலமும் செயல்பட்டு வந்த நிலையில். இந்த மூன்றாவது அரசாங்கத்தின் மூலம் 30 லட்சம் மக்கள் பிரதிகளைக் கொண்டு வர வழிவகை செய்தனர். இவர்களில் 10 லட்சம் பேர் பெண்கள் உள்ளாட்சி பொறுப்புக்கு வர வழிவகை செய்துள்ளனர். இது சமூகத்தில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும் அல்லவா?

எனவே, அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் தான் பஞ் சாயத்துராஜ் உண்மையான செயல்பாட்டை மக்களிடத்தில் ஏற்படுத்த முடியும். இதற்கு பஞ்சாயத்துராஜ் சட்டம் குறித்த விழிப்புணர்வை மக்களிடத்தில் ஏற்பட வேண்டும். அதற்கு இந்நூல் ஒரு சிறந்த கையேடாக விளங்கும். இதில் பஞ்சாயத்துராஜ் குறித்து பல்வேறு சட்டங்களை மிக தெளிவாக விளக்கியுள்ளார் நூலாசிரியர். எனவே இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்

– இன்சுவை பாரதி

நூலாசிரியர் : க.பழனித்துரை
பக்கம் : 344 விலை :350
வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41–பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 50

வாரம் தோறும் வெளிவரும்
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை,
சென்னை - 600014

# ஒன்றிய பாஜக அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை

## இரா.முத்தரசன் குற்றச்சாட்டு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை வடக்கு மாவட்டக் குழு கூட்டம் கும்பகோணத்தில் ஆர்.தில்லைவனம் தலைமையில் நடைபெற்றது.

மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பங்கேற்று தற்போதைய அரசியல் நிலைகள் குறித்து விளக்க உரையாற்றினார். தேசிய குழு உறுப்பினர் கோ. பழனிசாமி, மாவட்டச் செயலாளர் மு.அ.பாரதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மாவட்ட குழு கூட்டத்தில் மு.அ.பாரதி, ஆர்.தில்லைவனம், ஆர்.ராமச்சந்திரன், சாமு. தர்மராஜன், டி.கண்ணகி, டி.ஆர்.குமரப்பா, ஏ.ராதாகிருஷ்ணன், ஆர்.ஆர்.முகில், ஆர்.செந்தில்குமார், ஏ.ஜி.பாலன், தங்க.சக்கரவர்த்தி உள்ளிட்ட 11 தோழர்கள் கொண்ட புதிய நிர்வாக குழு தேர்வு செய்யப்பட்டது.

மாவட்டத் துணைச் செயலாளராக ஆர்.செந்தில்குமார், மாவட்ட பொருளாளராக ஏ.ராஜேந்திரன் தேர்வு செய்யப்பட்டனர்.

ஆர்.தில்லைவனம், முனைவர் அ.பொன்னிவளவன், சி.தண்டபாணி ஆகியோரை உள்ளடக்கிய மாவட்ட தணிக்கை குழு தேர்வு செய்யப்பட்டது.

ஜனசக்தி வார இதழ் சந்தா விற்பனை மற்றும் கட்சி பிரசுரங்கள் விற்பனை குறித்து முடிவுகள் எடுக்கப்பட்டன.

மாவட்ட குழு கூட்டத்தில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் இரா.முத்தரசன் தெரிவித்தது,

ஒன்றிய பாஜக அரசு தனது தேர்தல் வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. இனியும் நிறைவேற்றப் போவதுமில்லை. இதை போல் கடந்த எட்டு ஆண்டு காலத்தில் ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் மக்களுக்கு எதிரான சட்டங்கள், விவசாயிகளுக்கு எதிரான சட்டங்கள், தொழிலாளர்களுக்கு எதிரான சட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

பெட்ரோல் டீசல் விலை உயர்வு, அத்தியாசிய பொருட்கள் விலை உயர்வு போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகள் மோடி அரசு மீது மக்களுக்கு எழுந்துள்ளது. இவற்றை திசை திருப்பும் நோக்கில் நாட்டில் ஒரு பதற்ற நிலையை உருவாக்க ஒன்றிய அரசு முயற்சி செய்கிறது. இந்த சூழ்நிலையில் மக்கள் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். தமிழக முழுவதும் அக்டோபர் 11ஆம் தேதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் மனித சங்கிலி நிகழ்ச்சி நடைபெறும்.

இது ஒரு குறிப்பிட்ட அமைப்பை எதிர்த்து நடைபெறும் போராட்டம் கிடையாது. சமய நல்லிணக்கத்தை சமூக அமைதியை வலியுறுத்தி தேசத்தை பாதுகாக்க வலியுறுத்தி நடத்தப்படும் சமூக நல்லிணக்க அறப்போராட்டம். இதில் அனைவரும் தவறாது கலந்து கொண்டு தமிழகத்தை அமைதி பூங்காவாக நிலைக்கச் செய்ய வேண்டும் என்றார் முத்தரசன்.

## கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் கருத்தரங்கம்




திருப்பூர் குமாரநகரில் உள்ள கருப்பராயன் கோவில் திருமணமண்டபத்தில் அக் 2ல் நடைபெற்ற ஒன்றுபட்டு தேசம் காப்போம் என்ற கருத்தரங்கில் த.க.இ.பெ.மன்றத்தின் மாநில பொதுச்செயலாளர் த.அறம், மாவட்ட நிர்வாகிகள் எஸ்.ஏ.காதர், துருவன்பாலா, சேரன் ஆனந்தகுமார், ஏ.வி.பழனிசாமி, சசிகலா, த.நா.மு.எ.க.சங்கத்தின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் இரா.ஈசுவரன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர்கள் க.சந்தானம், எம்.ரவி ஆகியோர் உரையாற்றினர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.ரவிச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தோழர் கருணாகரன் 28 ஆம் ஆண்டு நினைவேந்தல்

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் தோழர் எம்.கருணாகரன் அவர்களின் 28ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினராகவும், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினராகவும், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் திருவாரூர், நாகை, மயிலாடுதுறை உள்ளடக்கிய ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தின் இளைஞர் பெருமன்ற செயலாளராக மிக சிறப்பாக செயல்பட்டவர்.

கடந்த 1994ஆம் ஆண்டு தனது 39 வது வயதில் இயற்கை எய்தினார். தோழரது 28 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி மணலி கிளையில் அவரது நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

முன்னதாக மணலி கடைத்தெருவில் நிறுவப்பட்டுள்ள எம். கருணாகரன் நினைவு கொடி கம்பத்தில் திருத்துறைப்பூண்டி சட்டபேரவை உறுப்பினர் க.மாரிமுத்து கட்சி கொடியினை ஏற்றினார். கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் கோ.பழனிசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. மாவட்ட செயலாளர் வை.செல்வராஜ், மாநிலக் குழு உறுப்பினர் கே. உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் எம்.வையாபுரி, மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் இரெ.ஞானமோகன், எஸ்.தமயந்தி, கே.ஆர்.ஜோசப், ஆர்.சந்திரசேகர ஆசாத், கே.ராஜா, ஒன்றிய செயலாளர் வி.ஜவஹர், அ.குமரேசன், மணலி கிளை செயலாளர் எஸ்.விஸ்வநாதன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கே..சுஜாதா மற்றும் கருணாகரன் குடும்ப உறுப்பினர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தோழரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர்.

### திருச்சுழி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில்


## விதொச உள்ளிருப்பு போராட்டம்

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டம் தமிழ்பாடி ஊராட்சிக்கு உட்பட்ட சாமிநத்தம் கிராமங்களில் பல வருடங்களாக கிராமப்புற 100நாள் வேலை திட்டத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். வேலை அடையாள அட்டை பலமுறை கேட்டும் இதுவரை வழங்கப்படவில்லை. இந்நிலையில் தமிழக விவசாயிகள் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் செயலாளர் மருதுபாண்டியன் தலைமையில் 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ரெட்டியபட்டியிலுள்ள திருச்சுழி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குள் சென்று அமர்ந்து அலுவலகத்தில் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டார்கள். தகவலறிந்து வந்த போலீசார் மற்றும் வட்டார வளர்ச்சி அலுலரிடம் பேச்சுவார்த்தை நடைபெற்றது. தவிதொச மாவட்ட செயலாளர் வரதராஜன், சிபிஐ ஒன்றிய செயலாளர் செல்வம், ரெட்டியபட்டி கிளை செயலாளர் ஜீவானந்தம் ,மருதுபாண்டியன் ஆகியோர் பேச்சுவார்த்தையில்கலந்து கொண்டனர். அடையாள அட்டை கிடைக்காமல் கலைந்து செல்ல மாட்டோம் என்பதில் தலைவர்கள் உறுதியாக இருந்தனர். அலுவலர்கள் உடனடியாக செயல்பட்டு 150 பேர்களுக்கும் அடையாள அட்டை எழுதி வழங்கப்பட்டது. தவிதொசங்கம் வாழ்க என்ற முழக்கத்துடன் தொழிலாளர்கள் கலைந்து சென்றனர்.

## ஜனசக்தி வளர்ச்சி நிதி

கோவைமாவட்டம், சூலூர் தெற்கு வட்டாரம், கட்சியின் தெற்கு வட்டாரப் பொருளாளர், சூலூர் கட்சிக் கிளை பொருளாளர், 'தாமரை' இதழ் பொறுப்பாளர் தோழர் கே.கண்ணன் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.5000 வழங்கியுள்ளார். தோழர் கண்ணனை ஜனசக்தி வாழ்த்துகிறது.

# இலக்கியப் பேராசான் ப.ஜீவானந்தம் பெயரில் அரசு விருது வழங்க வேண்டும்



## தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் கோரிக்கை





தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலக் குழு கூட்டம் கடந்த 24.9.2022 அன்று எட்டயபுரத்தில் உள்ள பாரதி முற்போக்கு வாலிபர் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு முன் செயற்குழு நடைபெற்றது.

மாநிலக் குழு கூட்டத்தில் மாநிலம் முழுவதும் இருந்து தோழர்கள் கலந்து கொண்டனர். முதலில் டாக்டர் ரன்பீர் சிங், எழுத்தாளர் கு.சின்னப்பபாரதி, தமிழ்க் கடல் நெல்லை கண்ணன் உள்ளிட்ட மறைந்த தோழமைகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

பன்னிரண்டாவது மாநில மாநாடு பரிசீலனை, மாநாட்டுக்குப் பின்பான 4 மாத கால வேலை அறிக்கை, செயற்குழு, மாநிலக் குழு உறுப்பினர்களின் விரிவாக்கம், எதிர்கால கடமைகள், குறித்து அறிக்கைகள் முன்வைக்கப்பட்டு விவாதம் நடைபெற்றது.

இந்த ஆண்டு கவிஞர் கே.சி.எஸ்.அருணாச்சலம், கரிசல் எழுத்தாளர்கள் கி.ராஜநாராயணன், கு.அழகர்சாமி, சங்கரதாஸ் சுவாமிகள், வில்லிசை வேந்தர் சாத்தூர் பிச்சைக்குட்டி ஆகியோர்களின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு, இந்த ஆளுமைகளின் சிறப்பை தமிழக மக்களிடம் கொண்டு செல்லும் வகையில் கலை இலக்கிய விழாக்கள் நடத்த வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் நிகழ்காலத்தின் குரலாகவும், எதிர்காலத்தின் வழிகாட்டியாகவும் தமிழகத்திற்கு திகழும் வகையில் நமது செயல்பாடுகள் அமைய வேண்டும். பெரும் திரளான பொதுமக்களை கவரும் வகையில் மாவட்டம் தோறும் ஆண்டுக்கு குறைந்தபட்சம் ஒரு மக்கள் கலை விழா நடத்த வேண்டும், நமது எழுத்தாளர் கலைஞர்கள் தங்களது எழுத்துக்களை இந்த திசையில் வடிவமைத்துக் கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

மாநிலக் குழுவின் நிறைவாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் நிறைவுரை ஆற்றினார்.

மாநிலக் குழு கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் நிறுவனர், இலக்கியப் பேராசான் ப.ஜீவானந்தம் –மகாத்மா காந்தியடிகள் சந்திப்பு நடந்த சிவகங்கை மாவட்டம் சிராவயல் கிராமத்தில், வரலாற்று சிறப்புமிக்க அந்த சந்திப்பை நினைவு கூரும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில் நினைவு மண்டபம் அமைத்திட முன்வந்ததற்கு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலக் குழு தமிழக முதல்வர் அவர்களுக்கு மிகுந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

2. சங்க இலக்கியங்கள் தொடங்கி பாரதி வரை ஆழ்ந்து கற்று, அவற்றை தமிழ் மக்களுக்கு உணர்ச்சியுடன், தமிழகம் முழுவதும் எடுத்துரைத்த தமிழ் இலக்கிய காப்பாளர், மொழி வழி மாநிலங்கள் அமைந்திட போராடியவர், தமிழ்நாடு எல்லை போராட்டங்களில் முன் நின்றவர், சட்டமன்றத்தில் தமிழ்நாடு பெயர் மாற்ற சட்டம், தமிழ் ஆட்சி மொழி, நிர்வாக மொழி, நீதிமன்ற மொழி, பயிற்று மொழியாக மாற வலிமையாக குரல் கொடுத்தவர், தியாகமே வாழ்க்கையாக வாழ்ந்த இலக்கியப் பேராசான் ப.ஜீவானந்தம் அவர்களின் பெயரில் தமிழ்நாடு அரசு சார்பில் ஆண்டுதோறும் இலக்கியத்திற்கான ஒரு விருது வழங்க வேண்டும்.

3. மகாகவி பாரதியார் இயற்றிய 'புதிய ஆத்திச்சூடி' பாடலில் இடம்பெற்ற, மதநல்லிணக்கத்தை வலியுறுத்தி, அறிவை முன்னிறுத்தும் கடவுள் வாழ்த்தை தமிழகம் முழுவதும் உள்ள பள்ளி, கல்லூரிகளில் கடவுள் வாழ்த்து பாடல் ஆக பாடிட தமிழக அரசு ஆவண செய்ய வேண்டும்.

4.கல்வியை முழுமையாக ஒன்றியப் பட்டியலுக்கு கொண்டு செல்லும் நோக்குடனும், கல்வியில் மாநில உரிமைகளை பறிக்கும் வகையிலும்,கல்வியை முழுமையாக வணிகமயமாக்குதல், கார்ப்பரேட் மயமாக்குதல் என்ற நோக்கங்களுடனும் தேசிய கல்விக்கொள்கை 2020 உருவாக்கப்ப பட்டு, ஒன்றிய அரசால் நடைமுறை படுத்தப்படுகிறது. இந்தி சமஸ்கிருத திணிப்பு, இந்துத்துவ ஒற்றை பண்பாட்டை திணித்தல், சாதி அடிப்படையிலான பரம்பரைத் தொழிலை திணிக்கும் முயற்சி போன்ற நோக்கங்கள் இக்கல்விக் கொள்கையின் மறைமுக நோக்கங்களாக உள்ளன. இது இந்தியாவின் பன்முகத்தன்மைக்கும், ஒற்றுமை ஒருமைப்பாட்டிற்கும் எதிரானதாகும். எனவே, இக்கல்விக் கொள்கையை நடைமுறை படுத்துவதை ஒன்றிய அரசு கைவிட வேண்டும்.

5.இந்தியாவின் வழிபாட்டுத் தலங்கள் என்பவை, நமது பண்பாட்டுச் சின்னங்கள். நமது இந்திய மக்களின் பண்பாட்டு அங்கங்கள். எனவே, அனைத்து மத வழிபாட்டுத் தலங்களும் 1947 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி எந்த நிலையில் இருந்தனவோ, அதே நிலையில் பராமரிக்கப்பட வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும். இந்துத்துவ மத வெறி சக்திகள் பாபர் மசூதியை தகர்த்தது போல் , சிறுபான்மை சமூகத்தினரின் வழிபாட்டுத் தலங்களை தகர்த்திட முயற்சிகளை மேற்கொள்கின்றன. சிறுபான்மை சமூகத்தினரின் வழிபாட்டுத்தலங்களில் புதிய சர்ச்சைகளை உருவாக்கி, அவற்றை தகர்த்திட திட்டமிடுகின்றன. இது நாட்டின் ஒற்றுமை ஒருமைப்பாட்டிற்கு, மதநல்லிணக்கத்திற்கு, பன்முகத்தன்மைக்கு, சகிப்புத்தன்மைக்கு எதிரானது. மதச்சார்பற்ற ,ஜனநாயக,இடது சாரி இயக்கங்கள் இத்தகைய போக்கிற்கு எதிராக ஒன்றுபட்டு போராட வேண்டும். அனைத்து வழிபாட்டுத் தலங்களையும் பாதுகாத்திட மத்திய மாநில அரசுகளை வலியுறுத்த வேண்டும். 1991ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட வழிபாட்டுத்தலங்கள் பாதுகாப்புச் சட்டத்தை ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் மதித்து நடக்க வேண்டும்.

6. இந்த ஆண்டு கரிசல் இலக்கியத்தின் முன்னத்தி ஏர் கி.ராஜநாராயணன் மற்றும் கு.அழகர்சாமி அவர்களின் நூற்றாண்டு ஆகும். கரிசல் இலக்கியங்கள் கோவில்பட்டியை மையமாகக் கொண்டு, இதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்தே பெரும்பான்மையாக தோன்றியுள்ளன. எனவே தமிழக அரசு கரிசல் ஆய்வு மையம் ஒன்றை கோவில்பட்டி நகரில் அமைத்து, கரிசல் இலக்கியத்தை வளர்த்தெடுக்க வேண்டும்.

7. கவிஞர் தமிழ்ஒளியின் நூற்றாண்டு 2024இல் வர இருக்கிறது, கவிஞர் தமிழ்ஒளியின் தமிழ் மொழிக்கான பங்களிப்பை நினைவு கூறும் வகையில் கவிஞர் தமிழ்ஒளி பெயரால் பல்கலைக்கழகங்களில் இருக்கைகள் ஏற்படுத்த வேண்டும், சென்னை மெரினா கடற்கரையில் தமிழறிஞர்களின் சிலை வரிசையில் தமிழ்ஒளியின் சிலை அமைத்திட வேண்டும், கவிஞர் தமிழ்ஒளியின் பெயரில் ஒரு பல்கலைக்கழகம் அமைத்திட வேண்டும்.

8. சுதந்திரப் போராட்ட தியாகி, தமிழ் நாடகங்களின் முன்னோடி, தமிழ் திரைப்படங்களின் முதல் பாடலாசிரியருமான மதுரகவி பாஸ்கரதாஸ் சுவாமிகளின் நினைவாக தமிழக அரசு மதுரையில் நினைவு மண்டபம் ஒன்றை அமைக்க வேண்டும்.

9. தமிழக அரசு எட்டயபுரம் பாரதி மணிமண்டபத்தில் நிரந்தர கட்டட வசதியுடன் கூடிய குளிரூட்டப்பட்ட கூட்ட அரங்குகள் கட்ட வேண்டும்.

10. 60 வயது நிறைவடைந்த அனைத்து நாட்டுபுற கலைஞர்களுக்கும் எவ்வித நிபந்தனையும் இன்றி ஓய்வூதியம் வழங்கிட வேண்டும்.

11. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நாட்டுப்புற கலைஞர்களையும் கணக்கெடுத்து அனைவருக்கும் அடையாள அட்டையும், நலவாரிய அட்டையும் தந்து நாட்டுப்புறக் கலைஞர்களை துறை சார்ந்த பணியாளர்களாகிட வேண்டும்.

12. பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் ஜனநாயக முறைப்படி கலந்து கொள்ளும் போராட்டங்களில் கலந்து கொள்ளும் மாணவர்களின் மீது வழக்கு தொடுப்பதை தமிழக அரசு கைவிட வேண்டும். ஏற்கனவே இவ்வாறு வழக்கு தொடுக்கப்பட்டு, முன்னாள் மற்றும் இந்நாள் மாணவர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை ரத்து செய்ய வேண்டும்.

13. தமிழகத்தில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு புதிதாக காலை சிற்றுண்டித் திட்டத்தை அமல்படுத்தியுள்ள தமிழக அரசுக்கு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநிலக் குழு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது. மேலும் தற்போது பள்ளிகளில் 11வது மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவிகள் மதிய உணவுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. ஆரோக்கியமான உணவை வழங்கும் மதிய உணவுத் திட்டத்தில், பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

# எட்டயபுரத்தில் பாரதி விழா

எட்டயபுரம் பாரதி முற்போக்கு வாலிபர் சங்கம் நடத்திய 60 வது ஆண்டு மகாகவி பாரதி விழா செப்டம்பர் 24, 25 சனி, ஞாயிறு கிழமைகளில் எட்டயபுரத்தில் நடந்தது.

முதல் நிகழ்வாக தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற தூத்துக்குடி மாவட்ட செயலாளர் ரகு அந்தோணி பாரதி இல்லத்தில் உள்ள பாரதி சிலைக்கு மாலை அணிவித்தார். பாரதி இல்லத்தில் நடைபெற்ற தேவராட்டம் மிகச் சிறப்பாக இருந்தது.

தேவராட்டக் கலைஞர்கள் நடனம் ஆடிக் கொண்டே முன்செல்ல பாரதி இல்லத்தில் இருந்து பாரதி ஊர்வலம் தொடங்கியது. ரகுஅந்தோணி தலைமையில் நடந்த ஊர்வலத்தில் பாரதி வேடமிட்ட, பாரத மாதா வேடமிட்ட குழந்தைகள் கலை இலக்கியப் பெருமன்ற தோழர்கள் கலந்து கொண்டனர்.

பாரதி இல்லத்திலிருந்து தொடங்கிய ஊர்வலம் பாரதி மணிமண்டபத்தில் நிறைவடைந்தது. பாரதி சிலைக்கு கே.ஆர் பொறியியல் கல்லூரியின் நிர்வாக இயக்குனர்கள், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் பொதுச் செயலாளர் மருத்துவர் அறம் ஆகியோர் பாரதி சிலைக்கு மாலை அணிவித்தனர். அதன் பின் மங்கல இசை, டி.பி.ஆர்.ஜி.எம்.கோபி குழுவினரின் நாதஸ்வர கச்சேரி நடந்தது.

முதல் நாள் மாலை நிகழ்வில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கீதா ஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜான் ஆகியோர் மணிமண்டபத்தில் உள்ள பாரதி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

முன்னாள் கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் ராஜேந்திரன் வரவேற்புரை நல்கினார். மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ வாழ்த்துரை வழங்கினார். கீதாஜீவன் வாழ்த்துரை வழங்கினார். தனது வாழ்த்துறையில் பெண் விடுதலையைப் பாடிய பாரதி பிறந்த மண்ணில் இருந்து வருகிறேன் என்று எங்கு சென்றாலும் தான் பெருமிதமாக கூறிக் கொள்வேன் எனக் கூறினார்.

தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி சிறப்புரை வழங்கினார். தனது சிறப்புரையில் பாரதியின் பல்வேறு பரிணாமங்களை எடுத்துக் கூறினார்.

இந்நிகழ்வில் மக்கள் இசை பாடகர்கள் தண்டபாணி மற்றும் கலைமாமணி அமல புஷ்பம் பாடல்களை பாடினர் நிகழ்ச்சியை ஆசிரியர் கனகா



தொகுத்து வழங்கினார். அதன் பின்பு பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் கலைமாமணி கைலாசமூர்த்தி சகா கலைக்குழுவை சேர்ந்த முனைவர் மா. சங்கர் தலைமையிலான குழுவினர் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தினர்.

## பாரதி ஒரு கடத்தல்காரன்

செப்.25 அன்று நடந்த கருத்தரங்கில் பேராசிரியர் கிருங்கை சேதுபதி தொடக்க உரை நிகழ்த்தினார். கருத்தரங்கத்திற்கு தலைமை ஏற்று பொதுச்செயலாளர் மருத்துவர் அறம் தலைமை உரையாற்றினார்.

'பாரதியும் இந்திய தேசியமும்' என்ற தலைப்பில் ராஜபாளையத்தைச் சேர்ந்த, ராஜுக்கள் கல்லூரி வரலாற்றுத் துறை முன்னாள் பேராசிரியர் வே.வெங்கட்ராமன்

தொடர்ச்சி 16ம் பக்கம் >>

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 08.10.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# காந்தி பிறந்த அக்.2ல் தமிழகம் முழுவதும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி

**மகாத்மா காந்தியின் பிறந்த நாளை முன்னிட்டு அக்.02 அன்று தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, அரசியல் சட்டத்தை பாதுகாப்போம் என்ற உறுதி மொழி ஏற்கும் நிகழ்ச்சி மேற்கொள்ளப்பட்டது.**

**திருப்பூர்:** அகிலஇந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தின் சார்பாக திருப்பூர் மகாத்மா காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் தலைமையில் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ரவி அவர்கள் உலகத்தில் போரற்ற அமைதி நிலவவும், சமாதான சகவாழ்வு நிலைபெறவும், இந்தியாவின் அரசியல் அமைப்புச்சட்டத்தை பாதுகாக்கவும் பாடுபடுவோம் என்று உறுதி மொழியை முன்மொழிய அனைவரும் அதனை பின்மொழிந்து உறுதியேற்றனர்.

**சென்னை:** சென்னை தியாகராயா நகரில் உள்ள, தக்கர் பாபா பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகத்தின் தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் ஐ. ஆறுமுக நயினார் தலைமை தாங்கினார்.




மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் ஜி. ராமகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் டாக்டர் ஜி. ஆர். இரவீந்திரநாத் , காங்கிரஸ் மூத்த தலைவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் உ.பலராமன் ஆகியோர் காந்தி சிலைக்கு மாலை அணிவித்தனர். அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தின் மாநில நிர்வாகி ஏ.பாஸ்கர், அரசியல் சட்டத்தை பாதுகாப்போம் என்ற உறுதிமொழியை வாசிக்க, அனைவரும் உறுதிமொழியை ஏற்றனர். அய்ப்சோ அமைப்பின் மூத்த தலைவர் கே.முத்தியாலு நன்றி நவின்றார்.

இந்நிகழ்வில் அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தின் தலைமைக்குழு உறுப்பினர் பேராசிரியர் வெ.பா.ஆத்ரேயா, பொருளாளர் ஆர்.ராஜேந்திரன் இணைச் செயலாளர் பி.செந்தில் குமார், அனைத்திந்திய முற்போக்குப் பேரவையின் மாநில கௌரவத் தலைவர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி, துணைத் தலைவர் பி.காளிதாசன், ஏ.ஐ.பி.இ.ஏ தலைவர் ஜி.முரளி, லேப் டெக்னீசியன் சங்க துணைத் தலைவர் எஸ்.தனவந்தன், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநில செயற்குழு உறுப்பினர் பேராசிரியர் க.இளங்கோ, வழக்கறிஞர் லிங்கன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதே போன்ற நிகழ்ச்சிகள் கும்பகோணம், திருவாரூர், மதுரை, அறந்தாங்கி, சிவகாசி, சேலம் உள்ளிட்ட இடங்களிலும் நடைபெற்றன.

**விருதுநகர் மாவட்டம்:** அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகம் விருதுநகர் மாவட்டம் சார்பாக சிவகாசியில் மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து, இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தைப் பாதுகாப்போம் என்ற உறுதிமொழி எடுக்கப்பட்டது.

சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அசோகன் சமாதான ஒருமைப்பாட்டுக் கழகம் சார்பாக காந்தியின் உருவச்சிலைக்கு மாலையணிவித்துச் சிறப்புச் செய்தார். மாவட்டத்தலைவர் எஸ்.சீனிவாசன் தலைமை தாங்கினார். சிபிஐ ஒன்றியச் செயலாளர் ஜீவா, காங்கிரஸ் பொறுப்பாளர் முருகேசன், சமாதான ஒருமைப்பாட்டுக் கழக மாவட்டச்செயலாளர் ஆர்.பாலச்சந்திரன், வட்டாரப் பொறுப்பாளர் ஜவகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**சேலம்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கலாச்சார நட்புறவு கழகம் சார்பில் மகாத்மா காந்தி சிலைக்கு இஸ்கப் மாவட்ட செயலாளர் டி.வி. கருணைதாஸ் தலைமையில் கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.மோகன் மாலை அணிவித்தார். மாநில குழு உறுப்பினர் எம்.ராமன், மாவட்ட குழு உறுப்பினர்கள் பி.பரமசிவம், ஏ.கந்தன், எஸ்.பாலன், எஸ்.முருகன், எம்.ஷனாவாஸ்கான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**பட்டுக்கோட்டை:** பட்டுக்கோட்டை காந்தி பூங்காவில் உள்ள காந்தி சிலைக்கு தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் சார்பாக வழக்கறிஞர் ஆர். பிரகாசம் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது.

சிவ சிதம்பரம் உறுதிமொழி வாசிக்க, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் முத்து உத்திராபதி, பேராசிரியர் ஜீவா, கலை இலக்கிய பெருமன்ற மாநில செயற்குழு உறுப்பினர் ராமலிங்கம், ஆம்பல் ராமசாமி, தர்மராஜ், சுகுமார் மற்றும் இருபதுக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்றனர். பட்டுக்கோட்டை நகர க.இ.பெ. செயலாளர் சுப. பாலதண்டாயுதம் சிறப்புரை ஆற்றினார்.

**திருச்சி மாநகர்:** திருச்சி அரசு பொது மருத்துவமனை அருகே உள்ள காந்தி அஸ்தி மண்டபத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர மாவட்ட செயலாளர் எஸ்.சிவா தலைமையில், ஏஐடியூசி திருச்சி மாவட்ட பொதுச் செயலாளர் க.சுரேஷ் எம்.சி. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில், மேற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ் முத்துசாமி, பொருளாளர் ரவீந்திரன் கிழக்கு பகுதி செயலாளர் சையது அபுதாஹிர், மணிகண்டம் ஒன்றிய செயலாளர் முருகன், பொன்மலை பகுதி துணைச் செயலாளர் ஏர்போர்ட் ராஜா மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் க.இப்ராஹிம், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் எம்.செல்வகுமார், த.ஒ.வா.இ. மாவட்ட செயலாளர் எஸ்.சூர்யா, இளைஞர் பெருமன்ற மாவட்ட தலைவர் ஆர்.முருகேசன், தமிழ்நாடு ஏஐடியூசி கட்டட சங்க மாவட்ட துணை தலைவர் துரைராஜ், மாணவர் பெருமன்ற மாவட்ட தலைவர் என்.எஸ். பாட்ஷா, பொருளாளர் ஆர்.கௌதம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்றனர்.

**திருவாரூர்:** காந்தியின் பிறந்த நாள் விழா திருவாரூர் தலைமை அஞ்சலகத்தில், தலைமை தபால் நிலைய அதிகாரி டி.மணிமேகலை தலைமையில் நடைபெற்றது. ஓய்வு பெற்ற அஞ்சல் அதிகாரி வி.தர்மதாஸ் முன்னிலை வகித்தார். அஞ்சலக பணியாளர்கள் ஆர்.சரஸ்வதி, எஸ்.கவிதா, எம்.மோகன்ராஜு, பி.சுரேஷ், தவால்தீரஜ், ஆகாஷ் தீயோதயா ஆகியோர் உரையாற்றினர்.

**பரமக்குடி:** இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் சார்பில் காந்தியம் பேசுவோம் எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. எமனேஸ்வரம் கலை இலக்கிய மன்றப் பொறுப்பாளர் டி எம் சிவகுமார் கருத்தரங்கை தொடங்கி வைத்தார். மருத்துவர் ராம்தாஸ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பெருமாள் கருத்தரங்கினை நெறிப்படுத்தி தொடங்கி வைத்தார்.

**நல்லம்பள்ளி :** தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்க நல்லம்பள்ளி ஒன்றியம் இலளிகம் கிளை சார்பில், இலளிகம் கடைவீதியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு எல்.ஆர்.அபிமன்னன் தலைமையில் சங்க மாவட்ட செயலாளரும் இலளிகம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவருமான ஜெ. பிரதாபன், மகாத்மா காந்தி படத்திற்கு மாலை அணிவித்து பேசினார். இதில் எல்.பி.பழனி, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் எல்.கே.சின்னராஜ், பெருமாள் மற்றும் ஏராளமான விவசாய தொழிலாளர்கள் கலந்துக் கொண்டார்.

**தென்காசி :** தென்காசியில் மகாத்மா காந்தி சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. ஏஐடியூசி மாவட்ட கௌரவ தலைவர் ஏ.சாமி, ஏஐடியூசி மாவட்ட தலைவர் சி.சுப்பிரமணியன், சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.மாரியப்பன், சிபிஐ கிளை செயலாளர் எஸ்.சுந்தர், தாலுகா குழு உறுப்பினர் கே. பழனிச்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் மகாத்மா காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது/ வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன்திருமலைக்குமார், சிபிஐ ஒன்றிய செயலாளர் வேலு, ஏஐடியூசி மாவட்ட செயலாளர் சுப்பையா, முஸ்லிம்லீக் செயலாளர் சுலைமான், தமிழ்நாடு வாழ்வுரிமைக் கட்சி முகைதீன், மதிமுக சாகிர் உசேன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கீழ் ஆம்பூரில் காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது/ சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் பரமசிவன், சிபிஐ ஒன்றிய செயலாளர் சட்டநாதன், விவசாய சங்க அரிகரன், சிபிஐ கிளை செயலாளர் ஈஸ்வரன், மாவட்ட குழு உறுப்பினர் கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பாவூர்சத்திரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துரைராஜ், சிபிஐ துணை செயலாளர் வேல்முருகன், மாரியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

15ம் பக்க தொடர்ச்சி

தனது உரையில், புதுச்சேரியில் அச்சிடப்பட்ட இந்தியா பத்திரிக்கையை தமிழகத்திற்குள் விநியோகிக்க, ரயிலில் டிரங்கு பெட்டியின் பின்புறம் திறக்குமாறு ஒரு ஏற்பாடு செய்து, இந்தியா பத்திரிக்கைகளை தமிழகத்தில் விநியோகிக்க, பாண்டிச்சேரியில் இருந்து கடத்தினார் பாரதி என்று பல அறிய தகவல்களை சான்றுகளுடன் விளக்கினார்.

'பாரதியும் புதுச்சேரியும்' என்ற தலைப்பில் எல்லை சிவக்குமார் உரை நிகழ்த்தினார். 'பாரதியும் பெண் விடுதலையும்' என்ற தலைப்பில் தனம் சிதம்பரநாதன் உரை நிகழ்த்தினார்.

'பாரதியின் பன்முக ஆளுமை' என்ற தலைப்பில் எட்டயபுரத்தைச் சேர்ந்த பேராசிரியர் நா. சங்கரராமபாரதி உரை நிகழ்த்தினார். இந்நிகழ்விற்கு குணசேகரன் ஆசிரியர் நன்றியுரை நல்கினார்.

அன்று மாலை நடைபெற்ற நிகழ்வில் அதிர்வு தமிழிசை குழுவினரின் பறை இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

அதன் பின்பு 'அன்புள்ள பாரதிக்கு' என்னும் தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர் கண்மணி ராசா தலைமையேற்று இக்கவியரங்கத்தை நடத்தினார். கவிஞர் வேலன் சங்கர்ராமன், கவிஞர் மழயிசை, கவிஞர் உஷாகனகு, கவிஞர் பிரியதர்ஷினி முதலானோர் பாரதிக்கு கவிதை மழை பொழிந்தனர்.

தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்ற மாநிலக் குழு உறுப்பினர் கவிஞர். வேலன் சங்கர்ராமன் அவர்களுக்கு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பாக பொதுச் செயலாளர் மருத்துவர் அறம் சால்வை அணிவித்து நினைவு பரிசு வழங்கி, வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

அதன் பின்பு மருத்துவர் அறம் மற்றும் முனைவர் சத்தியபாலன் தொகுத்த 'இலக்கியப் பேரொளி தொ.மு.சி' என்ற நூலை காசி விஸ்வநாதன் வெளியிட தாமோதரன் பெற்றுக் கொண்டார். கவிஞர் சிவானந்தம் எழுதிய 'நிலா, நிலா' என்ற ஹைகூ கவிதை தொகுப்பினை கவிஞர் கண்மணிராசா வெளியிட த.மு.எ.க.ச சக்திவேல் முருகன் பெற்றுக்கொண்டார். இரு நூல்களின் ஆசிரியர்களின் சார்பில் சத்தியபாலன் ஏற்புரை வழங்கினார்.

'பாரதியின் கவிதைகளில் மிஞ்சி நிற்பது மண் விடுதலையே, பெண் விடுதலையே' என்ற தலைப்பில் பேசும் பூங்காற்று கவிதா ஜவகர் நடுவராக இருந்த பட்டிமன்றம் நடைபெற்றது. மண் விடுதலையே! என்ற தலைப்பில் கார்த்திகா ராஜா, ராஜ்குமார் ஆகியோரும், பெண் விடுதலையே! என்ற தலைப்பில் விஜய் நம்பி, ராஜேஸ்வரி ஆகியோரும் பேசினர். இறுதியில் பாரதியின் கவிதைகளில் மிஞ்சி இருப்பது பெண் விடுதலையே! என்ற தீர்ப்பை கவிதா ஜவகர் வழங்கினார்.

நிகழ்வின் நிறைவாக பாரதி முற்போக்கு வாலிபர் சங்கம் செயலாளர் மணி பாரதி நன்றியுரை வழங்கினார்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.